



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:128 | 23-11-2025 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

23.11.2025 கார்த்திகை 7
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று மாலை 6.11 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.

நட்சத்திரம்:
இன்று மாலை 6.57 வரை மூலம் பின்பு பூராடம்.

யோகம் :
இன்று காலை 11.44 வரை திருதி பின்பு சூலம்.

கரணம் :
இன்று அதிகாலை 5.18 வரை தைதுலம் பின்பு மாலை 6.11 வரை கரசை பின்பு வணிசை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.14 வரை சித்த யோகம் பின்பு மாலை 6.57 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 6.57 வரை கார்த்திகை பின்பு ரோகிணி.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 3.15 – 4.15.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# பெருந்தொற்று, இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ள சர்வதேச சுகாதாரக் குழு

## ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி வலியுறுத்தல்

**ஜோகன்னஸ்பர்க், நவ.23:**
"பெருந்தொற்று, இயற்கை பேரிடர் சவால்களை எதிர்கொள்ள சர்வதேச சுகாதார குழுவை அமைப்பது அவசியம்" என்று ஜி20 உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் ஜி20 உச்சி மாநாடு நேற்று தொடங்கியது. அந்த நாட்டு அதிபர் சிரில் ராமபோசா மாநாட்டை தொடங்கிவைத்தார். அவர் பேசும்போது, "பேரிடர் கால மீட்பு நடவடிக்கைகளில் ஜி20 உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

வருவாய் குறைந்த நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் தாராளமாக கடன் உதவிகளை வழங்க வேண்டும். அரிய வகை தனிமங்கள் அனைத்து நாடுகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: உலக பொருளாதார வளர்ச்சியில் ஜி20 அமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. உணவு பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் பொருளாதாரம், புதுமை கண்டுபிடிப்புகள், பெண்கள் முன்னேற்றம், சுற்றுலாத் துறைகளில் ஜி20 நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.



இந்திய மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்கின்றனர். இந்த வாழ்வியல் நடைமுறைகளை ஒன்றிணைக்க ஜி20 அமைப்பு சார்பில் சர்வதேச பாரம்பரிய அறிவுசார் மையம் தொடங்க வேண்டும்.

இதன்மூலம் இயற்கையை பாதுகாக்க முடியும்.

ஆப்பிரிக்க மக்களுக்கு திறன்சார் பயிற்சி அளிக்க ஜி20 திறன்சார் மையம் அமைக்க வேண்டும். இதற்கு ஜி20 உறுப்பு நாடுகள் நிதியுதவி, தொழில்நுட்ப உதவிகளை வழங்க வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் ஆப்பிரிக்க நாடுகளில் 10 லட்சம் திறன்சார் பயிற்சியாளர்களை உருவாக்க வேண்டும். இதன்மூலம் ஆப்பிரிக்க நாடுகள் வளர்ச்சி அடையும்.

சர்வதேச அளவில் பெருந்தொற்றுகள், இயற்கை பேரிடர்களை சந்தித்து வருகிறோம். இவற்றை எதிர்கொள்ள ஜி20 சர்வதேச சுகாதாரக் குழுவை அமைக்க வேண்டியது அவசியம். ஜி20 உறுப்பு நாடுகளை சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் இந்த குழுவில் இடம்பெற வேண்டும். இதன்மூலம் சர்வதேச சுகாதார நெருக்கடிகள், இயற்கை பேரிடர்களை எளிதாக எதிர்கொள்ள முடியும்.

போதை கடத்தல் தடுப்பு: சர்வதேச போதைப் பொருட்கள் கடத்தல் மூலம் ஈட்டப்படும் வருவாய் தீவிரவாத செயல்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. எனவே போதைப்பொருள் கடத்தலை தடுக்க ஜி20 நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

தமிழ்ப் பாடலை ரசித்த பிரதமர் மோடி: ஜோகன்னஸ்பர்க் நகரில் பிரதமர் மோடிக்கு இந்திய வம்சாவளியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். அவரை வரவேற்கும் வகையில் "கங்கா அம்மா" என்ற தமிழ்ப் பாடலை தென்னாப்பிரிக்காவின் புகழ்பெற்ற பாடகி குமாரி அம்பிகை பாடினார். இந்த பாடலை பிரதமர் மோடி மெய்மறந்து கேட்டு ரசித்து, கைத்தட்டி பாராட்டினார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட பதிவில், "கங்கா மையா (அம்மா) தமிழ்ப் பாடலை கேட்டது மிகுந்த நெகிழ்ச்சியாக இருந்தது. தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியினர் தங்கள் இதயங்களில் இன்றும் இந்தியாவை உயிர்ப்போடு வைத்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தமிழகம் உட்பட 11 மாநிலங்களை சேர்ந்த இந்திய வம்சாவளியினர் கலாச்சாரத்தின்படி பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளித்தனர்.

# தென்ஆப்ரிக்கா கலைநிகழ்ச்சிகள் குறித்து மோடி தமிழில் பதிவு



**ஜோகன்னஸ்பர்க், நவ.23:**
தென் ஆப்ரிக்காவிற்கு சென்றுள்ள பிரதமர் மோடி, இந்திய புலம்பெயர்ந்தோரின் உற்சாகமான கலாச்சார நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்.

கணபதி பிரார்த்தனை, சாந்தி மந்திரம் மற்றும் பிற தெய்வீக பிரார்த்தனைகளுடன் அவருக்கு இந்திய வம்சாவளியினர் வரவேற்பு அளித்தனர்.

இந்தியாவுடனான கலாச்சார தொடர்பை நிலைநிறுத்தி உயிர்ப்புடன் வைத்திருப்பதில் புலம்பெயர்ந்தோரின்உணர்வை மோடி பாராட்டினார்.

இது குறித்து சமூகவலைதளத்தில் பிரதமர் மோடி தமிழில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

ஜோகன்னஸ்பர்கில் தென் ஆப்ரிக்காவின் கிர்மிட்டியா பாடலுடன் 'கங்கா மையா' நிகழ்ச்சியைக் கண்டது எனக்கு மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் தந்தது. இந்த நிகழ்ச்சியின் மற்றொரு சிறப்பம்சம் இந்தப் பாடல் தமிழில் பாடப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்தவர்களின் நம்பிக்கையையும்தொடர்பறாத மனப்பான்மையையும் இந்தப் பாடல் தன்னகத்தே கொண்டுள்ளது.வாழ்க்கையில் அவர்கள் ஏராளமான துன்பங்களைச் சந்தித்தனர்,

உயிரோட்டமாக...

ஆனால் அது அவர்களின் ஊக்கத்தைக்குலைக்கவில்லை. பாடல்கள் மற்றும் பிரார்த்தனைகள் மூலம் அவர்கள் தங்கள் இதயங்களில் இந்தியாவை உயிர்ப்புடன் வைத்திருந்தனர். எனவே, இந்தக் கலாசாரத் தொடர்பு உயிரோட்டமாக இருப்பதைக் காண்பது மெச்சத்தக்கது.

> தென் ஆப்ரிக்காவின் கிர்மிட்டியா பாடலுடன் 'கங்கா மையா' நிகழ்ச்சியைக் கண்டது எனக்கு மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் தந்தது. இந்த நிகழ்ச்சியின் மற்றொரு சிறப்பம்சம் இந்தப் பாடல் தமிழில் பாடப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்தவர்களின் நம்பிக்கையையும் தொடர்பறாத மனப்பான்மையையும் இந்தப் பாடல் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வாறு மோடி கூறியுள்ளார்.

மற்றொரு பதிவில், "இந்தியாவிற்கும், தென் ஆப்ரிக்காவிற்கும் இடையிலான கலாசார தொடர்பு உண்மையிலேயே மனதைத் தொடும் மற்றும் காலத்தால் அழியாதது. ஜோகன்னஸ்பர்க்கில், எனது இளம் நண்பர்கள் கணபதி பிரார்த்தனை, சாந்தி மந்திரம் மற்றும் பிற தெய்வீக பிரார்த்தனைகளை மிகுந்த பக்தியுடன் பாடினர். இதுபோன்ற தருணங்கள் நம் மக்களுக்கு இடையேயான வலுவான உறவை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன" என மோடி கூறியுள்ளார்.

# 16 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



**சென்னை, நவ.23:**
சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியருப்பதாவது: தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இது, வடமேற்கு திசையில் நகர்ந்து, 24-ம் தேதி வாக்கில், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், வடமேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேலும் வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக, தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் ஒருசில இடங்களிலும், 25 முதல் 28-ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, அரியலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை,கடலூர்,டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகியவற்றில் ஓரிரு இடங்களிலும், 24-ம் தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, ராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களிலும், 25-ம் தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

# கோவை, மதுரை மெட்ரோ திட்டம்: பரிசீலிக்க பிரதமருக்கு ஸ்டாலின் கடிதம்

## நேரில் சந்தித்து விளக்கம் அளிக்க குழு தயார்

**சென்னை, நவ.23:**
தென்னிந்தியாவின் மான்செஸ்டர் நகரமான கோயம்புத்தூருக்கும், கோயில் நகரமான மதுரைக்கும் மெட்ரோ ரெயில் சேவைக்கான திட்ட அறிக்கைகளை மீண்டும் பரிசீலனை செய்து, ஒப்புதல் அளிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்திற்கு தகுந்த அறிவுரைகள் வழங்கிட வலியுறுத்தி, பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (22ந் தேதி) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களுக்கு மெட்ரோ ரெயில் அமைப்புகளுக்கான திட்டங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதற்கு தங்களது ஏமாற்றத்தையும், வேதனையையும் தெரிவித்துக் கொள்வதாகவும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.




அதிக அளவிலான தனிநபர் வாகனங்களைக் கொண்டும், நாட்டிலேயே மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்கி வரும் நிலையில், அனைத்து வகையிலும் பெரிய அளவிலான வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் பெரும்நகரங்களில், அதிக திறன் கொண்ட பொது போக்குவரத்து மாற்றுகள் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், இதற்காக, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ ரெயில்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை தாங்கள் தயாரித்து, அதை ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

### நிராகரிப்பு காரணம் சரி இல்லை

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதியின்படி அதன் மக்கள் தொகை 2011ம் ஆண்டிலேயே 20 லட்சத்தைத் தாண்டியிருந்தது என்றும், மதுரையிலும் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகையை விட அதிகமாக இருக்கும் என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த 20 லட்சம் என்ற அளவுகோல் ஓரேமாதிரியாகக் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால், ஆக்ரா, இந்தூர் மற்றும் பாட்னா போன்ற இரண்டாம் நிலை நகரங்களில் மெட்ரோ ரெயில் திட்டம் நிறைவேறியிருக்க வாய்ப்பில்லை என்பதையும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அளவுகோலை கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரெயில் திட்டப் பணிகளுக்குச் சுட்டிக்காட்டுவது என்பது, எங்களது இந்த நகரங்களுக்கு எதிரான ஒன்றிய அரசின் பாகுபாட்டு நிலையையே காட்டுவதாகவும், எனவே ஒன்றிய அரசு மற்ற மாநிலங்களில் மேலே குறிப்பிடப்பட்ட நகரங்களில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்திட மேற்கொண்ட முடிவினைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள இந்த மாநகரங்களிலும் செயல்படுத்திட ஏதுவாக இந்த அளவுகோலை நீக்க வேண்டுமென்று முதலமைச்சர் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், கோயம்புத்தூர் நகரில் இந்தத் திட்டத்திற்கான பயணிகளின் அடர்வு எண்ணிக்கை, சென்னையில் உள்ள பயணிகளின் அடர்வு எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், பயணிகளின் எண்ணிக்கை என்பது பல காரணிகளைச் சார்ந்திருப்பதால் இது பொருத்தமானதல்ல என்றும் கோடிட்டுக் காட்டியுள்ள முதலமைச்சர்,

மதுரைக்கும், 2011 ம் ஆண்டின் விரிவான இயக்கத் திட்டத்தில், பொதுப் போக்குவரத்து அமைப்பு முன்மொழியப்பட்டதாகவும், ஆனால் பெரும்பாலான பாதைகளின் நீளம் உயர்த்தப்பட வேண்டியிருப்பதால், ரெயில் போக்குவரத்திற்கான அமைப்பையும் பரிசீலிக்கலாம் என்று அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், விரிவான திட்ட அறிக்கை ஆய்வுகள் போக்குவரத்து கணிப்புகளின் அடுத்தடுத்த, தனிப்பட்ட மதிப்பீடுகளைச் செய்துள்ளன என்றும், இது மெட்ரோ ரெயில் வழித்தடங்களின் தேவையை நியாயப்படுத்தியது என்றும், இந்தக் காரணிகள் போதுமான அளவு கருத்தில் கொள்ளப்படவில்லைஎன்றும் அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.






## திருக்குறள் குறள்-448

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்



கடிந்து அறிவுரைக் கூறும் பெரியாரின் துணை இல்லாதக் காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்ககும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான்.

## சிந்திக்க ஒரு நொடி



பலம் என்பது நம்மிடம்
இருக்கும்
உடலில் இருந்து
பிறப்பதல்ல...
நம் ஆழ் மனதில்
இருந்து பிறப்பதே
என்பதை உணர்ந்தால்
வெற்றி நிச்சயம்

உஷாமுத்துராமன்

## நகர காவல் தெய்வம் துர்க்கை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம்



திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு நகர காவல் தெய்வம் துர்க்கை அம்மனுக்கு வாசனை திரவியங்களை கொண்டு மூலவர்க்கும், உற்சவர்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கூட்டுறவு வங்கி தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு இலவச மாதிரி நேர்முகத் தேர்வு



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் 1977 ம் ஆண்டு முன்னாள் பள்ளி மாணவர்களின் நிலவை அகாடமியில் கூட்டுறவு வங்கி தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு ஐஏஎஸ் அதிகாரி கண்ணன் தலைமையில் இலவச மாதிரி நேர்முகத் தேர்வு நடைபெற்ற போது எடுத்த படம்.

## சிறப்பு திருத்த வாக்காளர் முகாம்



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையை அடுத்த கொக்குபட்டி கிராம வாக்குச்சாவடியில் நடைபெற்ற சிறப்பு திருத்த வாக்காளர் முகாமை திமுக மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் கரிகாலபாண்டியன் ஆகியோர் பார்வையிட்ட போது எடுத்த படம்.

## எஸ்ஐஆர் படிவங்களை இணையதளத்தில் பதிவேற்றம்



நாகர்கோவில் சதாவதானிசெய்குதம்பி அரசுஉயர் நிலைப்பள்ளியில் நேற்று எஸ்ஐஆர் படிவங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளை கலெக்டர் அழகுமீனா ஆய்வு செய்தார்.

# முத்துமாரியம்மன் சிறப்பு பூஜைகள் மற்றும் ஊஞ்சல் தாலாட்டு!

**வந்தவாசி, நவ 23:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மாம்பட்டு ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலின் கார்த்திகை அமாவாசை சிறப்பு பூஜைகள் சக்தி உபாசகர் ஆறு. லட்சுமணன் ஸ்வாமிகள் மேற்பார்வையில் நடைபெற்றது.

சிறப்பு அலங்காரத்தில் அம்மன் ஊஞ்சல் தாலாட்டு வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. மேலும் உற்சவ மூர்த்தி அம்மன் மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார்.

இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.



**பா.சீனிவாசன், வந்தவாசி.**

# உக்கல் மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் பால சன்னியாசி லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் வழிபாடு

**செய்யாறு நவ. 23:**

செய்யாறு அடுத்த உக்கல் மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

ஆலய குரு சங்கர் குருஜி யாக வேள்வி வழிபாடு,அதனைத் தொடர்ந்து மூலவரான அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் செய்தார்.

பின்னர் பால சன்னியாசி லோகேஸ்வரர் சரஸ்வதி சுவாமிகள் பிறந்தநாள் முன்னிட்டு அம்பாளுக்கு ஆரத்தி வழிபாடு நடத்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானம் கோயில் நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

திரளான பக்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர்.



# ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு பொது விநியோக கட்டிடங்கள் திறப்பு

**திருவாரூர், நவ.23:**

குடவாசல் அருகே ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு பொது விநியோக கட்டிடங்களை நன்னிலம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் திறந்து வைத்தார்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சர் ஆர்.காமராஜ் தனது சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குடவாசல் ஒன்றியத்துக்கு உட்பட்ட அன்னியூர்,மணியாங்குடி, செம்மங்குடி, சருக்கை, வடகட்டளை உள்ளிட்ட பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அன்னியூர் ஊராட்சிகளுக்கு உட்பட்ட செம்மங்குடி வருவாய் கிராம பகுதியில் ரூ. 13.5 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பொது விநியோக கட்டிடத்தை திறந்து வைத்த முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் முதல் விற்பனையை துவக்கி வைத்து அப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.



மேலும் அதனைத் தொடர்ந்து அதம்பார் ஊராட்சி பகுதியில் உள்ள ஸோத்திரியம் பகுதியில் ஸோத்திரியம் மற்றும் குப்பம் பகுதி மக்கள் பயன்படும் வகையில் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் பகுதி நேர பொது விநியோக கட்டிடத்தை திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் பேசும் போது அதிமுக ஆட்சியில் தான் ஸ்மார்ட் கார்டு அறிமுகப்படுத்தப்பட்டது என பெருமிதத்துடன் தெரிவித்தார்.

# அழகு சேனை கிராமத்தில் 20ஆம் ஆண்டு அருள்தரும் ஸ்ரீ ஐயப்பன் ஆலய திருவிழா

**திருவண்ணாமலை, நவ.23:**

ஆரணி வட்டம் அழகு சேனை கிராமத்தில்20ஆம் ஆண்டு அருள்தரும் ஸ்ரீ ஐயப்பன் ஆலய திருவிழா நடந்தது.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் அழகு சேனை கிராமத்தில் 20 ஆம் ஆண்டு அருள் தரும் ஸ்ரீ ஐயப்பன் ஆலய திருவிழா நவம்பர் 22 காலை நடைபெற்றது.

தலைமை இராம. தூ மணிவண்ணன் இணை ஆணையர் (பணி நிறைவு) வணிகவரித்துறை சென்னை. முன்னிலை பி. செல்வம் குருசாமி, ஏ ஜி மூர்த்தி துனை ஆட்சியர்( பணி நிறைவு), 8.30-10.30- யாகசாலை, கணபதி ஹோமம்,மகா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். 11.00 உற்சவர் தர்ம சாஸ்தாவிற்கு புனித நன்னீராட்டுதல். 11.30 நெய் அபிஷேகம்,தீபாராதனை



1.00 ஊஞ்சல் தாலாட்டு, மற்றும் அன்னதானம் வழங்குதல்.

ஊர் பொதுமக்கள் ஜயப்ப பக்தர்கள் இளைஞர்கள் கலந்து கொண்டார்கள். வெகு சிறப்பாக இவ்விழா நடைபெற்றது.

# 771 மாணவர்களுக்கு ரூ.37.38 லட்சம் மதிப்பிலான மிதிவண்டிகளை துணைமுதல்வர் உதயநிதிவழங்கினார்



சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த 771 மாணவர்களுக்கு ரூ.37.38 லட்சம் மதிப்பிலான மிதிவண்டிகளை துணைமுதல்வர் உதயநிதிவழங்கினார். உடன் அமைச்சர்கள் சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மேயர் பிரியா, தயாநதிமாறன் எம்.பி. உடன் உள்ளனர்.

# 10 புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை





விருதுநகர் மாவட்டத்தில் நேற்று 10 புதிய வழித்தடத்தில் பேருந்து சேவைகளை அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

# தேவர் சிலைக்கு மாலை அணிவிப்பு



தென்காசி மாவட்டம் ஊத்துமலை பகுதியிலுள்ள உச்சி காளியம்மன் கோவில் பகுதிக்கு செல்லும் வழியில் அந்த கிராமத்தில் உள்ள அனைத்து தலைவர்களின் சிலை மற்றும் உருவபடங்களுக்கு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள்




ஏலகிரி மாவட்ட மைய நூலகத்தில் நடந்த தேசிய நூலக வார நிறைவு விழாவில் பல்வேறு இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# வட்டார அளவில் நடைபெற்ற வானவில் மன்ற போட்டிகள்

**வந்தவாசி, நவ 23:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டார வள மையத்தில், வட்டார அளவிலான வானவில் மன்ற போட்டிகள் நடைபெற்றது. இப் போட்டிகளில் வட்டார அளவில் நடுநிலை உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அறிவியல் சார்ந்த கண்காட்சி கள் செயல்முறைகள், ஆய்வு கட்டுரைகள் ஆகியன காட்சிப் படுத்தப்பட்டது.

வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள், மாவட்ட அளவில் கலந்து கொள்ள வேண்டும். இப்போட்டியினை மாநில வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர் மாதவன் கலந்து கொண்டு பார்வையிட்டார். மேலும் வட்டார கல்வி அலுவலர்கள் செந்தமிழ் மற்றும் தரணி ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்கு கருத்துரைகளை வழங்கினர்.



வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஜெயசீலன் போட்டியை இணைந்து துவக்கி வைத்தார்.

பள்ளி அளவில் இருந்து ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். வட்டார ஒருங்கிணைப்பாளர் திருவேங்கட லக்ஷ்மி நன்றியுரை கூறினார்.

# சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்து மாணவர்கள் விழிப்புணர்வு நிகழ்வு



நெல்லை ஏர்வாடி பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்து மாணவர்கள் விழிப்புணர்வு நிகழ்வு நடந்தது.

## தேர்தல் ஆணையத்துக்கு சுப்ரீம் கோர்ட்டு நோட்டீஸ்

**புதுடெல்லி, நவ.23:**

கேரளா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் பல்வேறு அரசியல் தலைவர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுக்கள், நீதிபதிகள் சூர்யகாந்த், எஸ்.வி.என்.பட்டி, ஜோய்மால்யா பக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தன. கேரளாவில் நடக்கும் சிறப்பு திருத்தத்துக்கு எதிராக மனு தாக்கல் செய்த மனுதாரரின் வக்கீலாக கபில் சிபல் ஆஜரானார். கேரளாவில் உள்ளாட்சி தேர்தல் நடக்க இருப்பதால், கேரள விவகாரத்தை அவசரமாக விசாரிக்குமாறு கோரிக்கை விடுத்தார். அதை ஏற்ற நீதிபதிகள், கேரள வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கு எதிரான மனு, 26-ந்தேதியும், மற்ற மாநிலங்கள் தொடர்பான மனுக்கள் டிசம்பர் முதல் அல்லது 2-வது வாரத்திலும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினர். தேர்தல் ஆணையம் பதில் மனு தாக்கல் செய்ய நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

## 10 ஆயிரம் பனை விதைகள் நடவு செய்யும் பணி துவக்கம்

**இராமநாதபுரம்,நவ.23:**

கூட்டுறவுத்துறையின் சார்பாக 72 வது கூட்டுறவு வார விழாவினை முன்னி ட்டு பல்வேறு விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக நிறைவு நாளான நவம்பர் 21 அன்று மண்டபம் ஊரா ட்சி ஒன்றியம், மானாங்குடி கடற்கரை பகுதியில் 10000 பனை விதைகளை நடவு செய்யும் பணிகள் நடைபெற்றது. மரங்கள் காற்று மாசுபாட்டை குறைக்கவும், மண் அரிப்பை கட்டுப்படுத்தவும், மண் வளத்தை மேம்படுத்த வும், நிலத்தடி நீரினை அதிகரிக்கவும் உதவி புரிகின்றன. பனை மரத்திலிருந்து பெறப்படும் உணவுப்பொருட்கள் மருத்துவ குணம் கொண்டதாக உள்ளது. கடற்கரை பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பனை விதைகளை நடவு செய்து பணிகளை

## சிவகங்கை மாவட்ட நீர் நிலைகளில் மீன் குஞ்சுகள் இடும் நிகழ்வு

**சிவகங்கை, நவ.23:**

சிவகங்கை மாவட்டம் மீன் வளம் மற்றும் மீனவர் நலத்து றையின் சார்பில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நீர் நிலைகளில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கா. பொற்கொடி இலந்தங்கு டிபட்டி கண்மாய் பகுதியில் தொடங்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவிக்கையில், இன்றையதினம் சிவகங்கை ஒன்றியத்திற்குட்பட்ட இலந்தகுடிபட்டி கண்மாயில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் இத்திட்டமா னது துவக்கி வைக்கப்பட் டுள்ளது என்று தெரி வித்தார். இந்நிகழ்ச்சியில், மீன் வளம்- மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் தி.சண்மு கம் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## 4 ஆவது நாளாக நில அளவை அலுவலர்கள் போராட்டம்

**தருமபுரி, நவ.23:**

18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் சார்பில் நடைபெற்று வரும் வேலை நிறுத்த போராட்டம், வெள்ளியன்று 4 ஆவது நாளாக தொடர்ந்தது. நில அளவர்களாக ஒருமுறை தரம் இறக்கப்பட்ட குறு வட்ட அளவர் பதவியை மீள் தரம் உயர்த்தி வழங்க வேண்டும். பட்டா மாறுதல் உள்ளிட்ட நில அளவைப் பணிகளை கருத்தில் கொண்டு, உடனடியாக நில அளவர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகளை வலியு றுத்தி தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் சார்பில் வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்று வருகி றது. அதன்படி, வெள்ளியன்று 4 ஆவது நாளாக காத்தி ருப்புப் போராட்டம் நடைபெற்றது. தருமபுரி, நாமக்கல், கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்க ளில் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழக அர சின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இச்சங்கத்தினர் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

# வேலைவாய்ப்பு தரும் கல்வியையே 87 சதவீத மாணவர்கள் விரும்புகிறார்கள்; ஆய்வில் தகவல்



**புதுடெல்லி, நவ.23:**

கற்றலில்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அவசியம் என்று 60 சதவீத பேர் கூறி உள்ளனர்.

இங்கிலாந்தில் உள்ள ஆர்லிங்டன் ஆராய்ச்சி மையம், லண்டன் பல்கலைக்கழகத்தின் மூலம், இந்திய மாணவர்களின் உயர்கல்வி குறித்து ஆய்வு மேற்கொண்டது. அதில் தெரியவந்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

சர்வதேச உயர்கல்வியில் இந்திய மாணவர்களின் எதிர்பார்ப்பில் ஒரு சக்திவாய்ந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது, அது வகுப்பறை கற்றலுக்கு அப்பாற்பட்டது. கணக்கெடுக்கப்பட்ட அனைத்து நாடுகளிலும் இந்திய மாணவர்கள் பயன்பாட்டு கற்றல், தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் தொழில்முறை நடத்தைகளை தங்கள் கல்வி அனுபவத்தின் முக்கிய பகுதிகளாக கருதுகிறார்கள்.

உலக அளவில் 56 சதவீத மாணவர்கள், கல்வி குறித்து முடிவெடுக்கும்போது வேலைவாய்ப்பு என்பதை முதல் மூன்று காரணிகளில் ஒன்றாக குறிப்பிட்டனர். அதே நேரத்தில் இந்திய மாணவர்கள் சிறந்த முடிவு எடுக்கும்போது 87 சதவீதம் பேர் வேலைவாய்ப்பை முக்கியமாக கவனத்தில் கொள்வதாக குறிப்பிட்டனர்.

பாடங்கள் வடிவமைப்பு, கற்றலை நேரடியாக வேலைவாய்ப்புகளுடன் இணைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இருந்தது.

கற்றலில்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அவசியம் என்று 60 சதவீத பேர் கூறி உள்ளனர். குறிப்பாக 56 சதவீத இந்திய மாணவர்கள் தொழில்முறை நடத்தைகளை உருவாக்குவது மிக முக்கியமானது என்று குறிப்பிட்டனர்.

# சென்னையில் 1 லட்சம் வீடுகளுக்கு விரைவில் ஸ்மார்ட் குடிநீர் மீட்டர்கள்

**சென்னை, நவ.23:**

சென்னை நகர மக்களுக்கு பூண்டி, சோழவரம், புழல், தேர்வாய் கண்டிகை, செம்பரபாக்கம், வீராணம் ஆகிய ஏரிகளில் இருந்தும், மற்றும் கடல் நீரை குடிநீரை மாற்றும் திட்டத்தின் கீழ் என மொத்தம் தினமும் சுமார் 1,300 மில்லியன் லிட்டர் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. இந்த பணியினை சென்னை குடிநீர் வாரியம் செய்து வருகிறது. அதற்காக 8 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் ஏரி நீரை சுத்திகரித்து வீடுகளுக்கு வழங்க ஆயிரம் லிட்டருக்கும் ரூ.8-ம், கடல் நீரை குடிநீராக்க 1,000 லிட்டருக்கு ரூ.47 வரையும் செலவாகிறது. ஆனால் பொதுமக்களிடம் வசூலிக்கப்படும் கட்டணம் நிலையான தொகை என்பதால், சாதாரண வீடுகள் மாதம் ரூ.105, அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.200 மட்டுமே கட்டணம் செலுத்துகின்றன.

இதனால், பலர் குடிநீரை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துகின்றனர். சில வீடுகளில் மோட்டார் சைக்கிள்கள், கார்கள் சுத்தம் செய்வது, செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவது, நீச்சல் குளத்திற்கு நீர் நிரப்புவது போன்ற பணிகளுக்கும் பயன்படுத்துவதாக சென்னை குடிநீர் வாரியம் கூறுகிறது. எனவே குடிநீர் பயன்பாட்டிற்கு ஏற்றப்படி கட்டணம் நிர்ணயிக்க, சென்னை குடிநீர் வாரியம் குடிநீர் இணைப்புகளுக்கு ஸ்மார்ட் மீட்டர் பொருத்த முடிவு செய்தது. அதற்கான டெண்டர் விடும் பணிகள் கடந்த ஜூன் மாதம் தொடங்கி, தற்போது இறுதி கட்டத்தை எட்டி விட்டது.

முதல்கட்டமாக 1 லட்சம் ஸ்மார்ட் மீட்டர்கள் கொள்முதல் செய்யப்பட்டு வீட்டு இணைப்புகளில் பொருத்தப்படுகிறது. அதில் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 2,400 சதுரடிக்கு மேல்பரப்பளவுள்ள வீடுகளுக்கும் மட்டும் நிறுவப்பட உள்ளன.

அதன்பிறகு மீதமுள்ள அனைத்து இணைப்புகளிலும் குடிநீர் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படும்.

# வாழை மரங்களை சேதப்படுத்திய யானைகள்

**ஈரோடு, நவ.23:**

பவானிசாகர் அருகே வாழைத்தோட்டத்திற்குள் புகுந்த யானைகள், அங்கு சாகுபடி செய்திருந்த 200 வாழை மரங் களை சேதப்படுத்தி சென்றதால் விவசாயிகள் கவலைய டைந்துள்ளனர். ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், பவானிசாகர் வனச்சரகத்திற்குட்பட்ட கொத்தமங்கலம் மற்றும் புதுப்பீர்கடவு வனப்பகுதியிலிருந்து வெளியேறிய 5 யானைகள், கடந்த சில நாட்களாக புதுப்பீர்கடவு ஊராட்சிக் குட்பட்ட புதுக்காடு பகுதியில் உலா வருகின்றன. இந்நிலை யில், அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ஜனனிபிரியா (37) என்பவரது தோட்டத்திற்குள் புதனன்று புகுந்த 5 யானைகள், அங்கு பயிரிடப்பட்டிருந்த 200க்கும் மேற்பட்ட வாழை மரங் களை சேதப்படுத்தின. அப்போது விவசாயத் தோட்டத்தில் தங்கியிருந்த தொழிலாளி மற்றும் அக்கம்பக்கத்தில் இருந்த விவசாயிகள் யானைகள் நடமாடுவதை கண்டு அச்சமடைந்த னர். தொடர்ந்து, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பட்டாசு களை வெடித்து யானைகளை நீண்ட போராட்டத்துக்கு பின் வனப் பகுதிக்குள் விரட்டினர். இதுகுறித்து உடனடியாக பவானிசாகர் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். சேதமடைந்த பயிருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். யானைகள் ஊருக்குள் நுழையாமல் தடுக்க வனத்துறை யினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் கட்டுக்குள் வந்தது



**திருவனந்தபுரம், நவ.23:**

கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த தவறிய திருவிதாங்கூர் தேவஸ்தானத்துக்கு கேரள ஐகோர்ட்டு கடும் கண்டனத்தை பதிவு செய்தது.

மண்டல சீசனின் தொடக்கத்திலேயே சபரிமலை அய்யப்பன் கோவிலில் வரலாறு காணாத கூட்டம் இருந்தது. இதனால் பெண்கள், குழந்தைகள் என பல்வேறு தரப்பினரும் பெரும் இன்னல்களை சந்தித்தனர். கடந்த 18-ந் தேதி கூட்ட நெரிசலில் சிக்கி கேரள மாநிலம் கோழிக்கோடு எடக்குளம் பகுதியை சேர்ந்த சதி (வயது59) என்ற பெண் பலியானார்.

கூட்ட நெரிசல் காரணமாக பக்தர்கள் மலையேறி சாமி தரிசனம் செய்ய முடியாமல் பாதியில் திரும்பி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு திரும்பி சென்ற பக்தர்கள் திருவாபரணங்கள் பாதுகாக்கப்பட்டு வரும் பந்தளம் வலிய கோயிக்கல் சாஸ்தா கோவிலுக்கு சென்றார்கள். அங்கு இரு முடி கட்டுகளை அவிழ்த்து தேங்காய் உடைத்து சாமி தரிசனம் செய்த பிறகு மாலையை கழற்றி வைத்து விட்டு சொந்த ஊர்களுக்கு திரும்பினர். அந்த வகையில் நேற்று முன்தினம் தமிழ்நாடு, கர்நாடகாவில் இருந்து வந்த பக்தர்கள் சுமார் 100-க்கு மேற்பட்டவர்கள் மாலைகளை கழற்றி வைத்து விட்டு சென்றதாக வலிய கோயிக்கல் சாஸ்தா கோவில் நிர்வாகம் அறிவித்தது.

இதற்கிடையே கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த தவறிய திருவிதாங்கூர் தேவஸ்தானத்துக்கு கேரள ஐகோர்ட்டு கடும் கண்டனத்தை பதிவு செய்தது. மேலும் பக்தர்களின் எண்ணிக்கையை குறைக்கலாமே எனவும் தெரிவித்திருந்தது.

ஆன் லைன் முன்பதிவு மூலம் 70 ஆயிரம் பேரும், உடனடி தரிசன பதிவு மூலம் 20 ஆயிரம் பேரும் என தீர்மானித்து பக்தர்கள் அனுப்பப்பட்டனர். ஆனால் உடனடி தரிசன பதிவு மூலம் 30 ஆயிரத்துக்கும் மேல் பக்தர்கள் சென்றனர். இதனால் சபரிமலையில் கட்டுக்கடங்காத கூட்டம் ஏற்பட்டு பக்தர்கள் கடும் அவதிக்குள்ளானார்கள்.

இதைத்தொடர்ந்து உடனடி தரிசன முன்பதிவு எண்ணிக்கையை 20 ஆயிரத்தில் இருந்து 5 ஆயிரமாக குறைக்கப்பட்டது. அதன்படி நேற்று ஏற்கனவே ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்த 70 ஆயிரம் பக்தர்கள் மற்றும் உடனடி தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்ட 5 ஆயிரம் பேர் என மொத்தம் 75 ஆயிரம் பக்தர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். இந்த நடவடிக்கையால் சபரிமலையில் கூட்டம் கட்டுக்குள் வந்துள்ளது.

உடனடி தரிசன முன்பதிவு தினசரி 5 ஆயிரமாக குறைக்கப்பட்டதை தொடர்ந்து எருமேலி, செங்கன்னூர் மற்றும் பம்பை முன்பதிவு மையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தற்போதுவண்டிப்பெரியார் மற்றும் நிலக்கல் ஆகிய 2 இடங்களில் மட்டும் உடனடி தரிசனத்திற்கான முன்பதிவு நடைபெறுகிறது.

தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் உடனடி முன்பதிவை நம்பி இருக்காமல் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்து தரிசனத்தை உறுதி செய்து வருமாறு திருவிதாங்கூர் தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com


இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## நலம் தரும் மருத்துவம்

### உடலில் கெட்ட கொழுப்பு அதிகரித்தால் இந்த உறுப்புகள் எச்சரிக்கை செய்யும்



படிக்கட்டுகளில் ஏறும் போது மூச்சுத் திணறல் ஏற்படுதல் அல்லது சோர்வாக உணருதல் அதிகரித்த கொழுப்பின் வெளிப்பாடாக இருக்கலாம்.

உடலுக்கு கொழுப்பு அவசியம். ஆனால் அதன் அளவு அதிகரிப்பது ஆபத்தானது. குறிப்பாக எல்.டி.எல். எனப்படும் கெட்ட கொலஸ்ட்ராலின் அளவு 100-க்குள் இருக்க வேண்டும். அதனை தாண்டும்போது மாரடைப்பு, பக்கவாதம் உள்பட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

இந்த கொழுப்பின் அளவு அதிகரிக்கும்போது சில உடல் உறுப்புகளே அறிகுறிகளை வெளிப்படுத்தி நம்மை எச்சரிக்கும். அதனை கவனத்தில் கொண்டு உடனடியாக சிகிச்சை பெற்றாலே கொழுப்பு அதிகரிப்பதை கட்டுப்படுத்திவிடலாம். கொழுப்பு அதிகரிப்பதை எந்தெந்த உறுப்புகள் எந்தமாதிரியான அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றன என்று பார்ப்போம்.

### கால் வலி

உடலில் கொழுப்பு அளவு அதிகரிக்கும்போது கால்களில் வலி மற்றும் தசை பிடிப்பு ஏற்பட தொடங்கும். இதன் காரணமாக அந்த பகுதிக்கு செல்லும் ரத்த ஓட்டம் குறையும். அதன் தாக்கமாக நடக்கும்போதோ அல்லது ஓய்வெடுக்கும்போதோ கால்களில் வலி அல்லது தசை பிடிப்பு ஏற்படும். இதுபோன்ற அறிகுறிகள் வெளிப்பட்டால் அது கொழுப்பு அதிகரிப்பின் வெளிப்பாடா என்பதை உறுதி செய்ய மருத்துவ பரிசோதனையோ, ஆலோசனையோ மெற்கொள்வது அவசியமானது.

### மார்பு வலி

மார்பு வலியையோ அல்லது அழுத்தத்தையோ உணர்வதும் கொழுப்பு அதிகரிப்பின் வெளிப்பாடாக இருக்கலாம். இதய தமனிகளில் கொழுப்பு குவிவது மார்பில் அழுத்தத்தை ஏற்படுத்தும். மார்பில் இறுக்கமோ, எரிச்சலோ உண்டாகக்கூடும். அத்தகைய அறிகுறிகள் மாரடைப்பு அல்லது கரோனரி தமனி நோயின் அறிகுறியாக இருக்கலாம்.

### கழுத்து, தாடை, தோள்பட்டையில் வலி

கொழுப்பு அதிகரித்தால், கழுத்தை சுற்றி வலி உண்டாகும். ஏனெனில் கொழுப்பு அதிகரிக்கும் போது, முழு உடலின் ரத்த ஓட்டமும் தடைபட தொடங்கும். இதன் காரணமாக கழுத்தைச் சுற்றி மட்டுமின்றி தாடை மற்றும் தோள்பட்டைகளில் அசாதாரண வலியை உணரலாம்.

### உணர்வின்மை

கொலஸ்ட்ரால் அதிகரிக்கும் போது, கைகள் மற்றும் கால்களில் உணர்வின்மை, கூச்ச உணர்வு அல்லது குளிர்ச்சியை உணரலாம்.

உடலில் கொழுப்பு அதிகரித்திருப்பதன் காரணமாக, கால்களின் நிறம் மாறக்கூடும். சில சமயங்களில் நீல நிறத்தில் காட்சியளிக்கக்கூடும்.

தலை பாரமாக இருப்பது போன்ற உணர்வு அல்லது தலைச்சுற்றல் ஆகியவை கொழுப்பு அதிகரித்திருப்பதன் அறிகுறியாக இருக்கலாம்.

படிக்கட்டுகளில் ஏறும் போது மூச்சுத் திணறல் ஏற்படுதல் அல்லது சோர்வாக உணருதல், அதிகரித்த கொழுப்பின் வெளிப்பாடாக இருக்கலாம்.

கண்களைச் சுற்றி மஞ்சள் அல்லது மஞ்சள் வளையம் தோன்றக்கூடும்.

உடலில் இதுபோன்ற மாற்றங்களை கண்டால், மருத்துவரை அணுகி உரிய ஆலோசனை பெறுவது நல்லது.

# தாமிரபரணியில் எடுக்கும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு பைசாதான் வசூலிக்கப்படுகிறதா..? - நீதிபதிகள் அதிர்ச்சி

**மதுரை, நவ.23:**

ஐகோர்ட்டு மதுரை கிளையில் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த காமராஜ் என்பவர் தாக்கல் செய்திருந்த மனுவில், “தாமிரபரணி ஆற்றங்கரையோரம் அமைந்துள்ள பல்வேறு நிறுவனங்கள் அரசுக்கு ரூ.250 கோடி நீர் வரி பாக்கி வைத்துள்ளன.

தனியார் சிமெண்ட் ஆலை மற்றும் பல்வேறு நிறுவனங்கள் தண்ணீர் வரி பாக்கியை செலுத்தாமல் தொடர்ந்து தாமிரபரணி ஆற்றிலிருந்து நீரை எடுத்து பயன்படுத்தி வருகின்றன. இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதுடன், அளவுக்கு அதிகமாக நீர் உறிஞ்சப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்பட்டு வருகிறது.





எனவே, தாமிரபரணி ஆற்றிலிருந்து நீர் எடுக்கும் நிறுவனங்களிடமிருந்து வரி பாக்கியை வசூலிக்கவும், அந்த நிதியை ஆற்றின் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புக்கு பயன்படுத்தவும் உத்தரவிட வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், பி.புகழேந்தி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. வழக்கு விசாரணையின்போது, பொதுப்பணித் துறை சார்பில், ‘தாமிரபரணியிலிருந்து தண்ணீர் எடுக்கும் தனியார் நிறுவனங்களிடமிருந்து லிட்டருக்கு ஒரு பைசா வீதம் தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது‘ என்று கூறப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், “தனியார் நிறுவனங்கள் ஒரு லிட்டர் தண்ணீரை ரூ.20-க்கு விற்கின்றன. அவர்களுக்கு வழங்கப்படும் தண்ணீருக்கு ஒரு லிட்டருக்கு ஒரு பைசாதான் இன்னமும் வசூலிக்கப்படுகிறதா?” என்று கேள்வி எழுப்பினர்.

மேலும், “தாமிரபரணி ஆற்றில் எத்தனை நிறுவனங்கள் தண்ணீர் எடுக்கின்றன, ஒரு நாளைக்கு எடுக்கும் தண்ணீரின் அளவு என்ன, இதுவரை எவ்வளவு தண்ணீர் எடுக்கப்பட்டுள்ளது, தண்ணீருக்கான மொத்த கட்டணம் எவ்வளவு, அதில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது..? 20 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயம் செய்த தண்ணீர் கட்டணத்தை இன்னும் ஏன் உயர்த்தவில்லை என்பது தொடர்பாக நெல்லை கலெக்டர், மாநகராட்சி ஆணையர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் பதில் அளிக்க வேண்டும்” என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## அனில் அம்பானியின் ரூ.1,400 கோடி சொத்து முடக்கம்: பண மோசடி வழக்கில் அமலாக்கத் துறை நடவடிக்கை

**புதுடெல்லி, நவ.23:**

இதுகுறித்து அமலாக்கத் துறை வட்டாரங்கள் கூறுகையில், “அனில் அம்பானி மீது அமலாக்கத் துறை பிஎம்எல்ஏ சட்டத்தின் கீழ் ஏற்கெனவே ரூ.7,500 கோடி மதிப்பிலான சொத்துகளை முடக்கி நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிலையில், தற்போது புதிதாக நாட்டின் பல பகுதிகளில் அனில் அம்பானிக்கு சொந்தமான மேலும் ரூ.1,400 கோடி மதிப்பிலான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், அனில் அம்பானிக்கு சொந்தமான ரூ.9,000 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது” என்று தெரிவித்தன.

அனில் அம்பானி பண மோசடி தொடர்பாக அமலாக்கத் துறை சமீபத்தில் முடக்கிய சொத்துகளில் மும்பையில் உள்ள திருபாய் அம்பானி அறிவு நகரம் (டிஏகேசி) தொடர்புடைய 132 ஏக்கர் நிலமும் அடங்கும். இதன் மதிப்பு ரூ.4,462.81 கோடி ஆகும். மேலும், ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ், ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் வங்கி மோசடி வழக்கிலும் ரூ.3,083 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய 42 சொத்துகளை அமலாக்கத் துறை பறிமுதல் செய்துள்ளது.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்: ஆவின் பால் பாக்கெட்டுகளில் விழிப்புணர்வு வாசகம்




**சென்னை, நவ.23:**

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) கடந்த 4-ந் தேதி தொடங்கியது. பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் இந்தப் பணிகள் நடைபெற்று வருவதால், ஆங்காங்கே விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், சேலம் மாவட்டத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஆவின் பால் பாக்கெட்டுகளில் விழிப்புணர்வு வாசகம் அச்சடிக்கப்பட்டுள்ளது. அதாவது, “சேலம் மாவட்டம் வாக்காளர் பட்டியல் - சிறப்பு தீவிர திருத்தம் 2026: தங்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு தீவிரத் திருத்தம் 2026 கணக்கீட்டு படிவத்தினை தங்கள் பகுதி வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் ஒப்படைத்துவிட்டீர்களா?” என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## ஒப்போ நிறுவனத்தின் ‘பைண்ட் எக்ஸ் 9’ மொபைல்கள் அறிமுகம்

**கோவை, நவ.23:**

பைண்ட் எக்ஸ் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக வெளிவந்துள்ள இந்த புதிய தொடரில் பைண்ட் எக்ஸ்9 மற்றும் பைண்ட் எக்ஸ்9 ப்ரோ என்ற இரண்டு மாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஹாசெல்ப்ளாட் நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை கேமரா சிஸ்டம், அதிகப்படியான பேட்டரி ஆயுள், மேம்பட்ட செயல்திறன், மேலும் ஸ்மூத்தான கலர் ஓஎஸ் 16 ஆகிய தொழில்நுட்பங்கள் இணைந்துள்ளதால் ஒரு முழுமையான ஆல்ரவுண்டர் அனுபவத்தை இந்த தொடரானது வழங்குகிறது. விலை விவரங்களைப் பொறுத்த வரை, பைண்ட் எக்ஸ்9 ப்ரோ மொபைல் 16ஜிபி + 512ஜிபி மாடல் ரூ.1,09,999 என்ற விலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பைண்ட் எக்ஸ்9 மொபைல் 12ஜிபி + 256ஜிபி மாடல் ரூ.74,999 விலையிலும், 16ஜிபி + 512ஜிபி மாடல் ரூ.84,999 விலையிலும் கிடைக்கிறது. இந்த இரண்டு மாடல்களும் இன்று நவம்பர் 21 ஆம் தேதி முதல் விற்பனைக்கு வரவுள்ளன. பைண்ட் எக்ஸ்9 ப்ரோ மொபைல் ஒப்போ இஸ்டோர், அமேசான், பிலிப்கார்ட் மற்றும் முக்கிய ரீடெயில் அவுட்லெட்ஸில் கிடைக்கிறது. பைண்ட் எக்ஸ்9 மொபைல் ஒப்போ இஸ்டோர், பிலிப்கார்ட் மற்றும் முக்கிய ரீடெயில் அவுட்லெட்ஸில் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், ஹாசெல்ப்ளாட் டெலிகன்வெர்டர் கிட் கூடுதலாக ரூ.29,999 செலுத்தி வாங்கிக் கொள்ளும் வகையில் ஒப்போ இஸ்டோரில் மட்டும் கிடைக்கிறது.

## அடுத்த மக்கள் சந்திப்பு பயணத்திற்கு தயாராகிறார்: விஜய் மக்கள் பாதுகாப்பு படைக்கு தீவிர பயிற்சி

**சென்னை, நவ.23:**

கரூர் சம்பவத்திற்கு பிறகு, த.வெ.க. தலைவர் விஜய் மீண்டும் மக்கள் சந்திப்பு பயணத்திற்கு தயாராகி வருகிறார்.




டிசம்பர் 4-ந்தேதி சேலத்தில் இருந்து தனது பயணத்தை விஜய் தொடங்க இருந்தார். தற்போது அங்கு அனுமதி கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் வேறு ஒரு தேதியில் சேலத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்க உள்ளார். இதற்கிடையே, இனி தான் மேற்கொள்ளும் பொதுக்கூட்டம் வடிவிலான மக்கள் சந்திப்பு பயணத்தில் கூட்ட நெரிசலை சமாளிக்கும் வகையிலும், ஒழுங்குபடுத்தவும் மக்கள் பாதுகாப்பு படையை விஜய் உருவாக்கி உள்ளார். இந்த மக்கள் பாதுகாப்பு படையில் இடம்பெறுபவர்கள், கட்சியின் தொண்டரணியினருடன் இணைந்து செயல்படுவார்கள் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் மக்கள் பாதுகாப்பு படைக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு ஒரு தனியார் என்ஜினீயரிங் கல்லூரியில் வைத்து ராணுவம் மற்றும் போலீஸ் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரிகளை கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. போலீஸ் அதிகாரி ரவிக்குமார் இந்த பயிற்சியை அளித்து வருகிறார். ஒரு நாளைக்கு 100 பேர் வீதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சி விரைவில் நிறைவுபெற இருக்கிறது. அந்த பயிற்சி முடிந்ததும் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டங்களில் அவர்கள் பங்கேற்று, கூட்டத்தை ஒழுங்குப்படுத்தும் பணியில் ஈடுபட இருக்கிறார்கள்.

## விஞ்ஞானிகள் எடுத்த அபூர்வ வகை வால்மீன் புகைப்படம்

**புதுடெல்லி, நவ.23:**

ராஜஸ்தானில் உள்ள மவுண்ட் அபு என்ற இடத்தில் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் செயல்படுகிறது. இங்குள்ள விஞ்ஞானிகள், செவ்வாய் கோளுக்கு அருகில் வந்து சென்ற அபூர்வ வகை ‘இன்டர்ஸ்டெல்லர்’வால்மீனை, அட்லஸ் என்ற 1.2 மீட்டர் விண்வெளி தொலைநோக்கி மூலம் கண்டறிந்து புகைப்படம் எடுத்தனர். இதனால் இதற்கு ‘வால்மீன் 3ஐ/அட்லஸ்’ என பெயரிட்டுள்ளனர். இது சூரிய மண்டலத்திற்கு வெளியே இருந்து வந்த 3-வது உறுதிபடுத்தப்பட்ட பொருளாகும்.



3 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான பனிக்கட்டிகள் மற்றும் சூரியனுக்கு அப்பால் உருவாகும் பொருள் பற்றிய அரிய தகவல்களை வழங்குவதால் விஞ்ஞானிகள் அதை உன்னிப்பாக ஆய்வு செய்து வருகின்றனர்.

இஸ்ரோவுடன் இணைந்த விஞ்ஞானிகளால் 3ஐ-அட்லஸ் என்ற அரிய விண்மீன்களால், சூரிய மண்டலத்திற்கு அப்பால் தோன்றும் பொருள் பற்றிய நமது புரிதலை வளப்படுத்துகிறது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

# மனித தோலையும் பிரிண்ட் எடுக்கலாம்! அமெரிக்க ராணுவத்தின் அதிரடி கண்டுபிடிப்பு!

பொதுவாக “பிரிண்டர்” என்ற வார்த்தையைக் கேட்டாலே நம் நினைவுக்கு வருவது காகிதமும், மையும் தான். அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ டாக்குமெண்டுகளை பிரிண்ட் செய்யத்தான் நாம் இதைப் பயன்படுத்துவோம். ஆனால், இதே பிரிண்டரை வைத்து மனிதத் தோலையே உருவாக்க முடியும் என்று சொன்னால் நம்புவீங்களா?

இது ஏதோ ஹாலிவுட் சயின்ஸ்-ஃபிக்ஷன் படக்கதை என்று நினைக்க வேண்டாம். போர்க்களத்தில் உயிருக்குப் போராடும் வீரர்களைக் காப்பாற்ற, அமெரிக்க ராணுவம் கையில் எடுத்திருக்கும் நிஜமான, அதிநவீன தொழில்நுட்பம் இது. அது எப்படிச் சாத்தியம்?

அது என்ன ‘பயோ-பிரிண்டிங்’?





நாம் பயன்படுத்தும் சாதாரண பிரிண்டரில் கலர் கலராக மை ஊற்றுவோம். ஆனால், இந்த ‘3D பயோ-பிரிண்டர்’களில் மை-க்கு பதிலாக, உயிருள்ள செல்கள், புரோட்டீன்கள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் அடங்கிய ‘பயோ-இங்க்’ பயன்படுத்தப்படுகிறது.

ஹவாய் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் ஜேசன் பார்ன்ஹில் மற்றும் ராணுவ ஆராய்ச்சியாளர் பிரிசில்லா லீ ஆகியோர் இணைந்து இந்த ஆய்வை முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் இந்த உயிருள்ள பொருட்களை மூலப்பொருளாகக் கொண்டு, மனிதத் தோலை அச்சு அசலாக ஒரு பிரிண்ட் அவுட் போல உருவாக்குகிறார்கள்.

போர்க்களத்தில் இது எப்படி உயிரைக் காக்கும்?

போர்முனையில் குண்டு வெடிப்புகளிலோ அல்லது தீ விபத்துகளிலோ சிக்கும் ராணுவ வீரர்களுக்கு, தோல் சிதைவுறுவதுதான் பெரிய ஆபத்து. அந்த நேரத்தில் உடனடி அறுவை சிகிச்சை செய்வது கடினம். ஆனால், இந்தத் தொழில்நுட்பம் வெற்றியடைந்தால், காயம்பட்ட வீரர்களுக்குத் தேவையான தோலை அங்கேயே உருவாக்கி, உடனடியாகப் பொருத்த முடியும். வெறும் காயங்களுக்கு மட்டுமல்ல, எதிரிகள் வீசும் விஷவாயுக்கள் அல்லது ரசாயனத் தாக்குதல்களால் தோல் பாதிக்கப்பட்டாலும், அதைச் சரிசெய்ய இது உதவும். மேலும், சில மோசமான பாக்டீரியாத் தொற்றுகளுக்கு மருந்துகள் வேலை செய்யாதபோது, பாதிக்கப்பட்ட தோலை நீக்கிவிட்டு, இந்தப் புதிய தோலைப் பொருத்தி உயிரைக் காப்பாற்றலாம்.

இந்த தொழில்நுட்பம் முழுமையாக வெற்றி பெற்றால், எதிர்காலத்தில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் ஒரு பெரிய புரட்சியே வெடிக்கும். அதாவது, ஒரு நோயாளியின் சொந்த செல்களை வைத்தே, அவருக்குத் தேவையான இதயம், கல்லீரல் போன்ற உறுப்புகளை ஆய்வகத்திலேயே வளர்த்துவிட முடியும். இப்படிச் செய்வதால், மாற்று உறுப்புக்காகப் பல வருடம் காத்திருக்க வேண்டிய அவசியமோ, உடல் அந்தப் புதிய உறுப்பை ஏற்க மறுக்கும் அபாயமோ இருக்காது.

அறிவியல் வளர்ச்சி என்பது மனித குலத்தின் நன்மைக்காக இருக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். இன்று ராணுவ வீரர்களுக்காக உருவாக்கப்படும் இந்த ‘3D பயோ-பிரிண்டிங்’ தொழில்நுட்பம், நாளை சாதாரண மக்களுக்கும் பயன்பட்டு, பல உயிர்களைக் காப்பாற்றும் என்று உறுதியாக நம்பலாம். காயங்களுக்கு மருந்து போடும் காலம் போய், காயத்தையே ‘பிரிண்ட்’ செய்து சரிப்படுத்தும் காலம் வெகு தொலைவில் இல்லை.

# பரிகாரம்.!



"சார்..உங்க குரல் தெளிவாக இல்ல..கொஞ்சம் சத்தமாக பேசுங்க..ப்ளீஸ்"பதட்டத்துடன் தோட்டத்துக்கு எழுந்தோடினான் கருணாகரன். .."ஆங்..இப்ப கேக்குது..கேக்குது... உங்க குரலே கரகரப்பு தானோ..சொல்லுங்க எங்க சரோஜா...சார் சார்.. சரோஜாவை எங்க பார்த்தீங்க.. நல்லா இருக்காளா..நான் எங்கே வரனும்..உடனே வர்றேன்..விலாசம் சொல்றீங்களா..". "சொல்ற நம்பருக்கு பத்தாயிரம் பணத்தை போடு..சரோஜாவை காட்டறேன் ". " சார்..நீங்க..என் சரோஜாவை கடத்தி வச்சிருக்கீங்களா.. அவ என் உயிரு சார்...விலாசம் சொல்லுங்க..எது வேணும்னாலும் தர்றேன்..நேர்ல வர்றேன்.". "டேய்.. முட்டாள்.. மரமண்ட மாக்கானா இருக்கியே..போலீஸ் கிட்ட போயி அங்க ஐயாயிரம் அழனுமா.. பேசாம நான் சொல்ற நம்பருக்கு பணத்தைப்போடு.. நிம்மதியா ஆபிஸ் போ..சாயந்திரமா வீட்ல சரோஜாவை பார்க்கலாம்..மறக்காக அவளுக்கு பாதாம்..பிஸ்தா எல்லாம் வாங்கிட்டு வா"..." இதோ.. இப்பவே பணத்தை போடுறேன் நம்பர சொல்லுங்க.." பரபரத்தபடி எண்களை தட்டி.."பாருங்க சார்.. இங்க பச்ச டிக் விழுந்துட்.."அதற்கு அவகாசமின்றி அழைப்பு துண்டிக்கப்பட விரக்தியாக நாற்காலியில் சாய்ந்தான் கருணாகரன். *** படுகஞ்சனான தனது எசமானை விட்டு நீங்கும் நாளை எதிர்பார்த்திருந்தாள் சரோஜா. தன்னளவில் அவன் சிக்கனத்தை காட்டவில்லை என்றாலும் பெற்று ஒற்றை ஆளாய் உழைத்து படிக்க வைத்து ஆளாக்கிய தாயிடம் அவன் காட்டிய கெடுபிடிகள் கொஞ்சநஞ்சமல்ல. வீட்டுக்குள் அவரை வைத்து பூட்டிவிட்டு அலுவலகம் செல்வது.. சொந்தபந்தம்..அண்டை அயலார் வீடுகள்..ஏன் கோவிலுக்கு கூட போய்வர அனுமதிப்பதில்லை..'ஏன் வீண் செலவு.?.. பூஜை அறையில கும்பிட்டுக்கோம்மா'என்பான். தனிமையின் புழுக்கத்தில் அவருக்கு ஒரே ஆறுதலாக இருந்தவள் சரோஜா தான். ஆரம்பத்தில் மொழி புரியாமல் அவர் அழுது அழற்றும் போதெல்லாம் திகிலடைந்து மலங்கமலங்க முழித்தபடி நிற்பாள் சரோஜா. நாளாக நாளாக பெண்களின் துயரம் இதுதானோ என பிடிபட்டு.. கிழவியின் ஒப்பாரியிலிருந்தே வார்த்தைகளை கிரகித்து அதை திருப்பிச் சொல்லி ஆறுதல் படுத்த பழகிக் கொண்டாள். அதன் பிறகுதான் கிழவி தனக்கொரு சிநேகிதி கிடைத்துவிட்ட மகிழ்வில்.. அகரத்திலிருந்தே மொழியை பயிற்றுவிக்க ஆரம்பித்தாள். தனது எஜமானன் பூட்டிய அறைக்குள் எட்டாத இடத்தில் வைத்திருக்கும் தொலை பேசியில் கிழவியின் கட்டளைக்கேற்ப எண்களை தட்டி உறவினர்களுடன் பேசி மகிழவும் உதவி வந்தாள் சரோஜா. அவ்வப்போது தனது எஜமானி நடுங்கும் குரலில் பழைய பாடல்களைப்பாட ..அதன் சோகச்சுவையை மாற்ற ஆடி மகிழ்விக்கவும் சரோஜா தயங்கியதில்லை..எதிர் பாராத விதமாக கிழவி இறந்துவிட.. தனிமையின் துயரத்தை உணரத் தொடங்கியவள்..வீட்டை விட்டு வெளியேற நினைத்து..ஒரு நாள் கிளம்பிவிட்டாள். ஆனால் அவள் நினைத்தது போல வெளி உலகம் உவப்பானதாக இல்லை.. அவசர அங்கலாப்பு..சுயநல படபடப்புமாக விதையிலிருந்து வெடித்த உடனே விருச்சமாகிட துடிக்கும் அவதானிப்பும்.. அவளை பீதியடையச் செய்தன. வீட்டை விட்டு வெளியேறிய மூன்றாம் நாள்..சிலுசிலுவென சாரல் மழை விழ பூங்காவில் ஒதுங்கினாள். அப்போது பேப்பர் படித்துக்கொண்டிருந்த இருவர் பேசிக் கொண்டதிலிருந்தே தன்னை தன் எஜமான் தீவிரமாக தேடி வருவதையும்.. அதன் பொருட்டு தனது படத்துடன் நாளிதழ்களில் பரிசு அறிவித்து விளம்பரம் வெளிவந்திருப்பதையும்..அறிந்து கொண்டாள்..சிந்தனையோடு அமர்ந்திருந்தவளை அருகிலிருந்த கட்டடத்திலிருந்து உற்சாகமாக வெளிப்பட்ட குரல்கள் திரும்பிப்பார்க்க வைத்தன. அது முதியோர் இல்லம் போல.. இவளது எஜமானியின் சாயலில் ஏழு எட்டு முதியவர்கள் மழை நீரை கைகளால் பிடித்து ஒருவர் மீது ஒருவர் வாரியிரைத்து விளையாடினர்.. தனது கல்லுளிமங்கன் எஜமான் தனது தாயாரையும் இப்படி ஒரு இல்லத்தில் சேர்த்து விட்டிருந்தாலும் இன்னும் இரண்டொரு ஆண்டுகள் கூடுதலாக வாழ்ந்திருப்பாரோ என நினைத்தாள் துக்கம் தொண்டையை அடைத்தது. தீர்மானத்தோடு எழுந்தாள் பூங்கா காவலாளி காலை சிப்ட்காரர் வரும் அவகாசத்தில் துணுக்குத்தூக்கம் போட்டிருந்தார்.அருகிலேயே மூக்குக்கண்ணாடியும்..பட்டன் ஃபோனும் கிடந்தன. ஃபோனை லவட்டிக்கொண்டு முதியோர் இல்ல வாசலுக்கு சென்றாள்.'அரும்பு கருணை இல்லம்'54 முதியோர்களை பராமரிக்க பெரும் சிரமத்தை அடைவதாகவும்.. தங்களால் இயன்றதை வழங்கி உதவுமாறும் கூறி ஜிபே எண்ணும் வழங்கப்பட்டிருக்க.. எஜமானுக்கு போன் செய்து தாதா குரலில் முதியோர் இல்ல கணக்கிற்கு பத்தாயிரம் பணமும் செலுத்தச் செய்தாள். இப்போது எஜமானிக்கு கைமாறு செய்துவிட்ட பெருமிதத்தோடு..சிறகை விரித்தாள் பழைய எஜமான் வீட்டை நோக்கி.. சரோஜா என்கிற 'காங்கோ கிளி'.!*

**-அரும்பூர்.க.குமாரகுரு,**
மயிலாடுதுறை*

# "பொம்மைப் பூனை"



வண்டியில் ஏறி உட்கார்ந்ததும் ஆரம்பித்த அர்ச்சனை தான். இதோ வீடு வரப்போகிறது இன்னும் முடிந்த பாடில்லை.
"ஒனக்கு வாய்தான் வலிக்காதா?" கேட்டான் வசந்தன்.
"வாய் என்ன மனசும்தான் வலிக்கிறது" என்ன செய்யட்டும்? இது வினயா.
"ஒரு மண்ணும் செய்ய வேண்டாம். வாய மூடிட்டு வேலையைப் பாரு" என்றான் வசந்த். எல்லாம் நேராக பக்காவாக பக்குவமா இருக்கணும் வினயாவிற்கு. அது அதை அப்படியே ஏற்றுக் கொண்டு போகவேண்டும் வசந்திற்கு. அலசி ஆராய்வது வேஸ்ட் என்பான். அப்படி என்ன நடந்து விட்டது?
இரண்டு பேரும் ஒரு பெரிய மாலில் முக்கியமான பிராண்டட் அயிட்டங்களை வாங்கிக் கொண்டிருந்தனர். ஏதோ ஒரு பொம்மையை அழகாக கலராக இருப்பதால் கடைசியில் வாங்கிவிட்டான். நிஜமாகவே அது யானை விலையாக இருந்தது. வினயா வேண்டாம் என்றால் கேட்கவில்லை.
ஒரு பக்கம் பொம்மை பிடித்திருந்தது. அடுத்தது ப்ரஸ்டீஜ் வேறு. வாங்கி விட்டான். அது ஒன்றுமில்லை. ஒரு பூனைக்குட்டி பொம்மை. யாரேனும் இரைந்துக் கத்தினால் அதுவும் கத்தும். சத்தம் இனிமையாக இல்லைதான்.
வாங்கிக்கொண்டு வந்த இரண்டு நாட்கள் அமர்க்களப்பட்டது. பக்கத்து எதுத்த வீட்டுக் குழந்தைகள் இவர்கள் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடினார்கள். வசந்திற்கே மிகவும் நாராசமாகத்தான் இருந்தது. பொம்மையை குழந்தைகள் அசந்த சமயம் பார்த்து பீரோவின் மேல் பகுதியில் எடுத்து வைத்துவிட்டான். காசைக் கொடுத்து தேளைக் கொட்டிக் கொண்டது போலானது.
"எங்கடா பூனை?" பக்கத்து வீட்டு நண்பன் கேட்க, "எங்கப்பா அதக் கொண்டுபோய் காட்டில விட்டுட்டாங்கடா" என்றது குழந்தை. இரண்டு நாள் சாதாரணமாக போனது. அன்று வினயாவின் அம்மா மங்களம் வந்திருந்தாள். அன்று இரவு மகள் வீட்டிலேயே தங்கினாள். பேரன் பேத்திகள் மூலம் பூனையின் மொத்தக்கதையும் தெரிந்து கொண்டாள்.
இரவு உறங்குமுன் அந்தப் பூனையைத் தான் பார்க்கவில்லையே என்ற ஆதங்கத்துடன் உறங்கிப் போனாள்.
நடு இரவில் திடீரென்று அடிவயிற்றிலிருந்து இரண்டு தும்மல் போட்டாள் மங்களம். அவ்வளவுதான் பீரோ மேல் இருந்த பூனைக் கத்த ஆரம்பித்தது. பொம்மை ஞாபகத்துக்கு வரவில்லை.
"என்னது பக்கத்துல பூனைக் கத்துது? எலி இருக்குமோ? பூனை மேலே தாவிடுமோ? கொள்ளை பயத்துடன் போர்வையை இழுத்து மூஞ்சியையும் மூடிக்கொண்டாள். கை கால்கள் லேசாக நடுங்கின. கொஞ்ச நேரம் அமைதியானது.
இதோ மற்றுமொரு தும்மல்! சத்தம் கேட்டதும் பூனையின் அலறல். அவ்வளவுதான். மங்களம் எழுந்து வந்து லைட்டையும் போட்டு ஹால் சோபாவில் உட்கார்ந்துக் கொண்டாள்.
கொலை நடுக்கமாக இருந்தது மங்களத்திற்கு. அதிகாலை நான்கு மணி. அநேகமாக எல்லோரையும் எழுந்துவிட்டார்கள்.
மங்களம் நடந்தவற்றை சொன்னதும் வசந்தனுக்கும் வினயாவிற்கும் புரிந்தது. எப்படி சொல்வது என்று தெரியாமல் இருவரும் ஒரு நிமிடம் கழித்து மளக்கென்று சிரித்தனர். அடக்கமுடியாமல் சிரித்தான் வசந்தன்.
குழந்தைகளுக்கும் புரிந்து விட்டது. தங்கள் பிரிய பூனை வீட்டிற்குள்தான் இருக்கிறது என்று ஒரே சந்தோஷம். வினயா நிதானமாக அம்மாவிற்கு எல்லாம் சொன்னதும் தன் சத்தமான தும்மலால்தான் பொம்மைப் பூனை கத்தியதைக் கண்டு பயந்ததை நினைத்து வெட்கிக் குனிந்து சிரித்தாள் மங்களம்.
குழந்தைகளுக்கும் கொண்டாட்டம். இருப்பினும் அந்த சத்தம் சற்று கடூரமாகவும் பயமுறுத்துவது போலவும் இருந்ததால் அதன் பேட்டரியை எடுத்துவிட்டு ஷோகேசில் வைத்துவிட்டான் வசந்த். குழந்தைகளுக்கு ஏமாற்றம். மங்களத்திற்கு பயம் போனது. வினயாவிற்கு காசு தண்டம் என்று வயிற்றெரிச்சலாக இருந்தது. மங்களத்திற்கு அது அச்சு அசல் நிஜப் பூனைபோல் செய்யப்பட்டிருப்பது பிடித்திருந்தது.
அவ்வப்போது மடியில் எடுத்து வைத்துக் கொஞ்சினாள். வினயாவுந்தான்!
வசந்த் இதைத் தருவதாகச் சொல்லி குழந்தைகளை நன்கு படிக்க வைத்தான். மொத்தத்தில் அந்த வீட்டில் 'பூனாட்சி' நடந்தது எனலாம்.

**-வி.பிரபாவதி**

# வள்ளுவத்தில் வியாசர்



**▪கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## துரியனின் பொறாமை

தகுதி எனவொன்று நன்றே பகுதியால் பாற்பட்டு ஒழுகப் பெறின்

என்பது வள்ளுவம்.

**விளக்கம்**

பாரபட்சம் பார்க்காமல் எல்லோரையும் ஒன்றாகப் பார்த்துப் பழகும் தன்மை தான் பாராட்டப்படும்.

இதற்குச் சான்றாக விளங்கிடும் குரு தன் சிஷ்யர்களிடத்தில் கொண்ட தன்மையை விளக்குவதாக மகாபாரதத்தில் ஒரு நிகழ்வாக விளக்குகிறார் வியாசர்.

யாரிடத்தும் பாரபட்சம் பார்க்காமல் இருப்பவரே குரு. அப்படி வாழ்பவர் மாணவர்களிடத்தில் வேற்றுமை பாரார். ஆனால் புத்திசாலியான மாணவன் ஆசிரியரை நெருங்குவது அவனது திறமையாலேயே தவிர, பாரபட்சமாகாது. ஆனால் இதனைப் புரிந்து கொள்ளாத மாணவர்கள் புத்திசாலி மாணவர்களிடமிருந்து, தன் அறியாமையைப் போக்கிக் கொள்ளாமல் விலகுகிறார்கள்.

அதனால் இக்கதை முழுவதும் நம் வளரும் மாணவர்களுக்குச் சமர்ப்பணம்.

“யாரும் புத்திசாலி மாணவர்களின் நட்பை விலக்கிக் கொள்ளாதீர்கள்!” என்பதே இந்நிகழ்வின் மூலம் நாம் விளக்குவது.

நடுவுநிலை என்பது ஆட்சி செய்யும் மன்னர், தீர்ப்பு வழங்கும் நீதிபதி, மருத்துவர் மட்டுமல்ல அவர்களை உருவாக்கும் குருவிடத்தும் அமைதல் சிறப்பு.

மகாபாரதத்தில் ஒரு காட்சி.

குருகுலப் பயிற்சியில் பாண்டவருக்கும் கௌரவருக்கும் குருவாக இருந்தவர் துரோணர். அவர் குருவாகப் பாரபட்சம் பார்க்காமல் பாண்டவர்களுக்கும் கௌரர்களுக்கும் குருவாக விளங்கினார். ஆனால் பாண்டவர்களிடம் இருந்த திறமை கௌரவங்களின் திறமையை விட எங்கும் பளிச்சிட்டது. இதனால் துரியன் மனதில் பாண்டவர் மீது பொறாமை ஏற்பட்டது. அதையும் மீறி துரோணர் குருதான் என்றாலும் அவர் மீதும் கோபம் வரத்தான் செய்தது.

இது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போயிற்றே தவிர குறையவே இல்லை. ஒரு நாள் பீஷ்மரிடம் வந்து துரியோதனன்,” தாத்தா குரு துரோணர் அனைவரையும் சமமாகப் பார்ப்பதில்லை. பாண்டவர்களுக்கு அதிகச் செல்லம் கொடுக்கிறார். எங்களுக்கு வேறு மாதிரியும் பாடம் நடத்துகிறார். இது பற்றி அவரிடம் கேளுங்கள் தாத்தா!” என்றான்.

பிதாமகரும் உடனே துரோணரைச் சந்திக்கச் சென்றார். துரோணரிடம் வந்த நோக்கத்தை மறைமுகமாகத் தெரிவித்தார். உடனே துரோணர் “பிதாமகரே! குருவிற்குப் பாரபட்சம் என்பது கிடையாது. எல்லோரையும் ஒன்றாகப் பாவித்து தான் பாடம் நடத்துகிறேன். பழகும் தன்மைகளிலும் பாரபட்சம் கிடையாது. ஆனால் எவ்வளவு மழை பெய்தாலும் பாத்திரத்திற்குத் தகுந்தாற் போல் தானே நீர் நிரம்பும். அதற்காக மழையைக் குறை சொல்ல முடியாது அல்லவா? எனினும் நீங்களே வந்து கேட்டதற்கு நன்றி!” என்றவர், “வாருங்கள், நீராடச் செல்லலாம்!’ என்று அழைத்துச் சென்றார் பிதாமகர் மற்றும் பாண்டவர்கள் கௌரவர்களை.

துரோணரும் பீஷ்மரும் முன்னே செல்ல, கௌரவர்களும் பாண்டவர்களும் பின்னே சென்றனர். ஆற்றங்கரை அடைவதற்கு முன், “அர்ஜுனா! நான் எண்ணெய்த் தேய்த்துக் குளிக்கலாம் என்று இருக்கிறேன். நீ ஆசிரமத்திற்குச் சென்று அந்த எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்து வா!’ என்றார்.

உடனே அர்ஜுனன் ஆசிரமத்தை நோக்கி ஓடினான். இதை அடுத்து அனைவரும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

வழியில் இருந்த ஆலமரத்தடியில் அமர்ந்தனர். “அர்ஜுனன் வரும் வரை புதிய பாடம் ஒன்றை எடுக்கப் போகிறேன்!” என்று சொல்லி, ஒரு மந்திரத்தைத் தரையில் எழுதினார். இந்த மந்திரத்தை உச்சரித்து இம்மரத்தின் மீது அம்பை எய்தால் மரம் தன் அத்தனை இலைகளிலும் துளையிட்டுக் கொள்ளும்” என்றார்.

துரியனை அழைத்து “இதனைச் செய்து காட்டு!” என்றார். அவனும் தரையில் இருந்த மந்திரத்தைப் படித்தான். பின் குரு செல்லியபடியே அம்பினை எய்த எல்லா இலைகளிலும் துளை விழுந்தது. அனைவரும் ஆசிரியத்துடன் பார்த்தனர்.

பீஷ்மரும் சந்தோஷப்பட்டார். இதற்குள் அர்ஜுனனும் வரவே “வாருங்கள் நீராடச் செல்லலாம்!” என்றார்.

நதியில் நீராடி விட்டு அம்மரத்தின் அடியில் அமர்ந்தனர். ஆனால் அனைவருக்கும் ஆச்சரியம்! இலையில் இரண்டாவது துளையும் இருந்தது.

“இதனைச் செய்தது யார்?” என்றார் துரோணர்.

அர்ஜுனன் “அடியேன்!” என்று வணங்கி நின்றான்.

உடனே பீஷ்மர் “இதைக் கற்றுக் கொடுக்கும் பொழுது, நீ இங்கு இல்லையே! பிறகு எப்படிக் கற்றுக் கொண்டாய்?” என்றார்.

“எண்ணெய்ப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு திரும்பி வந்து பார்த்தபோது, தரையில் மந்திரமும், இலைகளில் துளைகளையும் கண்டேன். உடனே இரண்டிற்கும் தொடர்பு இருக்கும் என்று எண்ணி, மந்திரத்தை உச்சரித்து, அம்பினை எய்ய அது பொய்க்கவில்லை. எல்லா இலைகளிலும் துவாரம் விட்டது.” என்றான்.

அர்ஜுனனைக் கட்டி அணைத்துக் கொண்டார். துரியனுக்குப் பொறாமையும் ஆத்திரமும் கூடியது.” இதில் வியப்பு என்ன? இதெல்லாம் ஒரு சாதனையா!” என்ற உடன், துரோணர் “சரி! எங்கே நீ மறுபடியும் அஸ்திரத்தை எய்தி இலையில் துளை உண்டாக்கு!” என்றார்.

உடனே மந்திரத்தைக் (தரையில் எழுதி இருப்பதை) காணத் துரியன் ஓட, மந்திரம் கைகளால் கலைக்கப்பட்டு இருந்தது. அதிர்ந்து போனான் துரியன். மந்திரத்தை மனதில் பதிய வைக்கத் தவறியதால் தலைகுனிந்து நின்றான்.

அர்ஜுனனும் “மனதில் பதிய வைத்து விட்டு, தரையில் எழுதிய மந்திரம் காலில் மிதிபடக் கூடாது என்பதாலேயே அதனை அழித்து விட்டேன்!” என்றான்.

“பீஷ்மரே! இப்போது கூறுங்கள்! என் மீது ஏதும் குற்றம் உண்டா?” என்றார் துரோணர்.

சீடர்களைப் பார்த்து “சீடர்களே! பொறாமை, ஆத்திரம், கோபம், அவசரம் இவைகளுக்கு மனதில் இடம் தரவே கூடாது. எதிலும் கவனம் செலுத்த வேண்டுமே தவிர அலட்சியம் கூடாது. சந்தர்ப்பத்தைச் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும். காண்பவற்றில் எல்லாம் என்ன கற்றுக் கொள்ளலாம் என்று யோசித்து தேடிக் கற்றுக் கொள்ளுங்கள்! வெற்றி பெறுவீர்கள்!” என்ன சொல்லி “ஆசிரியர்களுக்கு யார் மீதும் பாரபட்சம் இருக்காது என்றும் அவரே நடுநிலைமை கொண்ட குருவாகத் திகழ்வார்” என்றும் விளக்கினார்.

உண்மை தானே! அன்று துரோணர் மூலம் நமக்குச் சொன்னதை, திருவள்ளுவர் இக்குறளின் மூலமாக நடுவுநிலைமை கொள்வதை அனைவருக்கும் பொதுவாக்கினார்.



# பெரியவர்கள் காலில் விழுந்து ஆசி பெறுவது ஏன்?

தகுதியில்லாதவர்களின் காலில் விழுந்தால் என்ன ஆகும். அஸ்வத்தாமன், மகாபலி, வியாசர், அனுமன், விபீஷணன், கிருபாச்சாரியார், பரசுராமன், மார்கண்டேயன் ஆகியோர் சப்த சிரஞ்சீவிகள் எனப்படுவர்.

மரணமில்லாப் பெருவாழ்வு எய்தியிருக்கும் இவர்களின், பூதவுடல் நம் கண்ணில் படவில்லை என்றாலும், இன்னும் இந்தப் பூமியில் உலவிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

இந்த சிரஞ்சீவிகளில் ஒரு பிரபலம் மார்கண்டேயன்.

பின்னே.. இவனைக் காப்பாற்ற வேண்டி தானே சிவபெருமானே காலனை காலால் உதைத்தார்? எமனுக்கு பயந்து 12 வயதே நிரம்பிய இந்த பாலகன், சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்ததும், அவர் காலனை காலால் உதைத்து இவனை காத்தருளியதும் அநேகருக்கு தெரிந்திருக்கும்.

மார்கண்டேயனுக்கு மட்டும் அது எப்படி சாத்தியமாயிற்று என்று தெரியுமா?

மார்கண்டேயனுக்கு 12 ஆவது வயதில் மரணம் சம்பவிக்கும் என்றும், அவனுக்கு அல்பாயுசு தான் என்றும் அவன் தந்தையான மிருகண்ட மகரிஷிக்கும் தெரியும்.

ஆகையால் மகனை காக்க விரும்பிய மிருகண்ட முனிவர், அவனுக்கு உபநயனம் செய்வித்த பின்னர், “பெரியோர்கள் எவரை சந்தித்தாலும் தயங்காது அவர்கள் காலில் விழுந்து நமஸ்கரித்து அவர்களது ஆசிகளை பெற்றுக் கொள்” என்று சொல்லியிருந்தார்.

மார்க்கண்டேயனும், தான் பார்க்கும் பெரியவர்கள் காலில் எல்லாம் விழுந்து விழுந்து ஆசி பெற்று வந்தான்.

ஒருமுறை அத்திரி, வசிஷ்டர், கவுதமர், கஷ்யபர், பரத்வாஜர், விஸ்வாமித்திரர், ஜமதக்னி ஆகிய சப்தரிஷிகள் மிருகண்ட முனிவரின் ஆஸ்ரமத்திற்கு வந்தனர்.

அவர்களின் பாதங்களில், மார்கண்டேயன் பணிந்தான்.

அப்போது அவர்கள், தீர்க்காயுஷ்மான் பவ (தீர்க்காயுளுடன் வாழ்க) என்று வாழ்த்தி விட்டார்கள். பிறகு தான் தெரிந்து கொள்கிறார்கள் அவனுக்கு 12 வது வயதில் மரணம் சம்பவிக்கும் என்று.



இப்படி பார்க்கும் என்றும் சத்தியத்தையே பேசும் சப்தரிஷிகளின் வாக்கு பொய்க்குமா? இருப்பினும் இந்தப் பிரச்னையை பிரம்மாவிடம் சொல்வதற்காக செல்கிறார்கள்.

மார்க்கண்டேயனும் அவர்களுடன் செல்கிறான்.

போனவன், பிரம்மாவின் காலிலும் விழுந்து ஆசி பெற்று விட்டான்.

விதியை எழுதிய அவரும், அவனுக்கு தீர்க்காயுஷ்மான் பவ என்று வாழ்த்தி விட்டார்.

பெரியவர்கள் எல்லாம் அவனுக்கு ஆசி வழங்கவே அவர்கள் ஆசி அனைத்தும் சேர்ந்து அவனது தலையெழுத்தையே மாற்றிவிடுகிறது.

பெரியவர்களின் ஆசியை நிறைவேற்றுவது பரம்பொருளின் கடமை.

ஆகவே தான் சிவபெருமான் தோன்றி மார்கண்டேயனை காத்ததோடு மட்டுமல்லாமல் அவன் என்றும் 16 வயதாக, அதாவது சிரஞ்சீவியாக இருப்பான் என்று வரம் தருகிறார்.

பெரியோர்களை விழுந்து வணங்குவது என்பது நமது பாரம்பரியங்களில் ஒன்று.

பகவான் கிருஷ்ணர் தம்மினும் பெரியோர்களை கண்டால் தவறாது விழுந்து வணங்குவார்.

எனவே வயதிலும் தகுதியிலும் சிறந்து விளங்கும் பெரியோர்களை கண்டால் அவர்களை விழுந்து வணங்கி அவர்களது ஆசியைப் பெறவேண்டும்.

அது உங்களை காக்கும் அரண் மட்டுமல்ல... உங்களது தலையெழுத்தையே மாற்றிவிடும்.

அதேநேரம், ஆதாயத்துக்காக தகுதியற்றவர்களின் கால்களில் விழாதீர்கள்.

அப்படி செய்தால் அவர்களின் பாவங்களையும் நீங்கள் சேர்த்து சுமக்க வேண்டியிருக்கும்.



ப.கோபிபச்சமுத்து
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

தினம் ஒரு தலைவர்கள்

# நசீம் மிர்சா சாங்கேசி வரலாறு

நசீம் மிர்சா சாங்கேசி
பிறந்தது 1910
இறந்தார் ஏப்ரல் 12, 2018 (வயது 108; சர்ச்சைக்குரியது)
பஹாரி இம்லி, பழைய டெல்லி , இந்தியா
அல்மா மேட்டர் ஜாகிர் ஹுசைன் டெல்லி கல்லூரி
தொழில் சுதந்திர ஆர்வலர்

நசீம் மிர்சா சாங்கேசி (1910 - ஏப்ரல் 12, 2018) ஒரு இந்திய சுதந்திர ஆர்வலர் ஆவார். அவர் இறக்கும் போது இந்தியாவில் வாழ்ந்த மிக வயதான நபர்களில் ஒருவராகவும் நம்பப்பட்டார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி

முகலாயப் பேரரசர் ஷாஜஹானின் காலத்திலிருந்தே பழைய டெல்லியில் தனது குடும்ப வேர்களை நசீம் மிர்சா சாஞ்சேசி கண்டுபிடித்துள்ளார் . அவர் இப்போது ஜாகிர் ஹுசைன் டெல்லி கல்லூரி என்று அழைக்கப்படும் ஆங்கிலோ அரபுக் கல்லூரியில் கல்வி பயின்றார் . பல ஆண்டுகளாக, அவர் உருது மற்றும் பாரசீக மொழிகளில் ஏராளமான புத்தகங்களைச் சேகரித்தார்.

1929 ஆம் ஆண்டு புரட்சிகர சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங்கை அவர் சந்தித்தார். மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசும் நோக்கத்தை பகத் சிங் அவரிடம் தெரிவித்தார் , மேலும் ஒளிந்து கொள்ள ஒரு பாதுகாப்பான வீட்டைக் கண்டுபிடிக்க அவரது உதவியை நாடினார் . பகத் சிக் தனது பணியை நிறைவேற்றிய பிறகு நசீம் பின்னர் குவாலியரில் தலைமறைவானார்.

தனிப்பட்ட வாழ்க்கை

2016 ஆம் ஆண்டு வரை, அவர் தனது 90 வயது மனைவி அம்னா கண்ணும், 60 வயது மகன் மிர்சா சிக்கந்தர் பேக் சேஞ்சேசி ஆகியோருடன் பழைய டெல்லி பகுதியில் வசித்து வந்தார். அவரது இளைய மகன் மிர்சா தாரிக் பேக் பாகிஸ்தானின் கராச்சியில் வசிக்கிறார் . சேஞ்சேசிக்கு ஏழு மகள்கள் மற்றும் இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்களில் பலர் இன்னும் பழைய டெல்லி பகுதியில் வசிக்கின்றனர். அவருக்கு 20 பேரக்குழந்தைகள் இருந்தனர்.

2016 ஆம் ஆண்டில், நசீம் மிர்சா சாஞ்செசி 106 வயதுடையவர் என்று கூறினார்.

மரபு

நசீம் தனது வாழ்நாளில், இந்திய மற்றும் உலக வரலாற்றில் பல நிகழ்வுகளைக் கண்டதாகக் கூறினார், முதலாம் உலகப் போர் , ஜாலியன் வாலாபாக் படுகொலை , சத்தியாக்கிரகம் ( அகிம்சை எதிர்ப்பு ), கிலாபத் இயக்கம் , புது தில்லி உருவாக்கம் , இரண்டாம் உலகப் போர் , வெள்ளையனே வெளியேறு இயக்கம் மற்றும் இறுதியாக இந்தியாவின் சுதந்திரம் . அவரது வாழ்க்கைக் கதை பல செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி ஆவணப்படங்களால் வெளியிடப்பட்டது.

மார்ச் 2016 இல், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் , இந்திய சுதந்திர இயக்கத்திற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த புகழ்பெற்ற தியாகிகளான பகத் சிங் , சிவராம் ஹரி ராஜ்குரு மற்றும் சுக்தேவ் தாப்பர் ஆகியோரின் மூன்று மார்பளவு சிலைகளை டெல்லி சட்டமன்றத்தில் திறந்து வைத்தார் . அதிகாரப்பூர்வ விழாவில் உரையாற்ற நசீம் மிர்சா சாஞ்சேசி தேர்ந்தெடுக்கப்பட்டார். தியாகி பகத் சிங் இந்தியாவில் உள்ள அனைத்து மதங்களும் பிரிவுகளும் ஒற்றுமையாக வாழ விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

"பிரிட்டிஷாரின் அதிகாரத்திற்கு எதிராக பகத் சிங்கிடம் நான் எச்சரிக்கை செய்திருந்தேன். அவர் தூக்கிலிடப்படுவார் என்று கூறி அவரைத் தடுக்க முயன்றேன், ஆனால் அவர் கேட்கவில்லை. இவ்வளவு பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு இருந்தபோதிலும், அவர் பாராளுமன்றத்திற்குள் வந்ததை ஆங்கிலேயர்களுக்குக் காட்ட விரும்பினார். தினமும், அவர் சட்டமன்றக் கட்டிடத்திற்குள் நுழைவதற்கான வழியைக் கண்டுபிடிக்கச் செல்வார். அவர் வழக்கமாக காலை உணவை சாப்பிட்டுவிட்டு வெளியேறுவார். போலீசார் தன்னை அடையாளம் காணாதபடி முகத்தில் ஒரு துணியைச் சுற்றிக் கொள்வார். நான் உறுப்பினராக இருந்த இந்திய தேசிய இராணுவத்தால், சிங்கிற்கு தொடர்ந்து உணவு வழங்குவதைத் தொடர்ந்து செய்யும் பணி எனக்கு வழங்கப்பட்டது," என்று அவர் கூறினார். "வெடிபொருட்கள் தயாரிப்பதில் நிபுணரான ஹன்ஸ்ராஜ் 'வயர்லெஸ்' தலைமையில் நாங்கள் சென்றோம். வெடிகுண்டு இப்போது ஐடிஓ என அழைக்கப்படும் இடத்திற்கு அருகில் வைக்கப்பட்டு, அதை வெடிக்கச் செய்வதற்காக நாங்கள் இப்போது பிரகதி மைதானம் என்று அழைக்கப்படும் இடத்திற்கு அருகிலுள்ள அடர்ந்த புதர்களில் ஒளிந்து கொண்டோம். எர்வின் பயணித்த சிறப்பு ரயில் அந்தப் பகுதியைக் கடந்து சென்றபோது குண்டு வெடித்தது. நாங்கள் அவரைக் கொன்றதைக் கொண்டாடினோம். ஆனால் அவர் குறிவைக்கப்பட்ட சலூனில் இல்லாததால் அவர் காயமின்றி தப்பினார். அந்த நேரத்தில், அவர் டைனிங் கோச்சில் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்," என்று அவர் மேலும் கூறினார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பீலி கோதியில் பாஸ்பரஸைப் பயன்படுத்தி ரயில்வே பதிவுகளை அழித்த குழு. கௌரியா புல் அருகே மின்சார கம்பிகளைத் துண்டிக்கவும் சேஞ்சேஜியிடம் கேட்கப்பட்டது. அவர் கம்பிகளை வெட்டுவதை தூரத்திலிருந்து கவனித்த போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்கினர். "நான் தெரு கம்பங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன், பின்னர் அவர்கள் என்னைத் துரத்தியிருக்க முடியாத ஒரு பாதையை நோக்கி ஓடினேன். நான் ஒரு ஹாக்கி வீரர், மிக வேகமாக ஓட முடியும்," என்று அவர் கூறுகிறார்.



# 1 வாரம் கடந்த 'ஆட்டோகிராப்' சேரன் நெகிழ்ச்சி



தமிழில் வெளியாகி வெற்றி பெற்ற முன்னணி நடிகர்களின் படங்களை டிஜிட்டலில் புதுப்பித்து மீண்டும் ரிலீஸ் செய்து வருகிறார்கள். அந்த வகையில், சேரனின் தயாரிப்பில், இயக்கத்தில், நடிப்பில் வெளியான 'ஆட்டோகிராப்' படம் கடந்த 14-ந்தேதி மீண்டும் திரையரங்குகளில் வெளியானது. 21 ஆண்டுகளுக்கு பிறகு டிஜிட்டல் முறையில் தமிழகம் உள்ள திரையரங்குகளில் வெளியிடப்பட்டது.

படத்தில் பள்ளி பருவம், கல்லூரி பருவம், இளமை பருவங்களில் கதாநாயகன் சந்தித்த காதல் அனுபவங்களை அழகாக சொல்லியிருப்பார் இயக்குநர் சேரன். மேலும் இப்படத்தில் இடம்பெற்றிருந்த 'ஒவ்வொரு பூக்களுமே' பாடல் இன்றளவும் ரசிர்களால் ரசிக்கப்படுவதும், பலருக்கும் மோட்டிவேசன் பாடலாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பாடலை பாடிய சித்ரா, பாடலை எழுதிய பா.விஜய் இருவரும் தேசிய விருது பெற்றனர்.

இந்த நிலையில், 'ஆட்டோகிராப்' படம் வெளியாகி 7நாட்கள் ஆன நிலையில் படத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த ரசிகர்களுக்கு சேரன் நன்றி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சேரன் வெளியிட்டுள்ள செய்தியில், 21 வருடங்களுக்கு பின் வெளியானபோதும் கொண்டாடி படம் பார்த்து பாராட்டிய அனைத்து மக்களுக்கும் நன்றி...


சில புதிய படங்கள் மூன்று நாட்கள் திரையரங்கில் தொடர்வது கடினமாக இருக்கும் காலத்தில் மறு வெளியீட்டில் தொடர்ந்து ஒரு வாரம் ஓடியிருப்பது மகிழ்ச்சி... அதற்கு ஒத்துழைத்த அனைத்து திரையரங்க உரிமையாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி என கூறியுள்ளார்.



நடிகை கயாடு லோஹர் சிவப்பு நிற உடையில் அழகிய போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்கள். சென்சேஷன் நடிகையை கியூட் புகைப்படங்கள் இதோ.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# விமலின் 'மகாசேனா' படத்திற்கு தேதி குறிச்சாச்சு...



'பசங்க' படத்தின் மூலம் அறிமுகமாகி 'களவாணி, 'கேடி பில்லா கில்லாடி ரங்கா', 'கலகலப்பு' போன்ற வெற்றி படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் நடிகர் விமல். இவரது நடிப்பில் 'சார்' படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து வெப் தொடர்கள் மற்றும் சில படங்களிலும் கமிட் ஆகி நடித்து வருகிறார்.


இதனிடையே, தினேஷ் கலைச்செல்வன் இயக்கத்தில் விமல், யோகி பாபு, ஸ்ருஷ்டி டாங்கே ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ள படம் 'மகாசேனா'. இப்படம் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய 5 மொழிகளில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மகாசேனா' படத்தின் கதை குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை. இருப்பினும் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் சில BTS ஸ்டில்களை பார்க்கும்போது கதை வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்தவையாக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், 'மகாசேனா' படம் அடுத்த மாதம் 12-ந்தேதி வெளியாகும் என போஸ்டரை வெளியிட்டு படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

# அபிஷன் ஜீவிந்த் நடிக்கும் படத்தின் டைட்டில் டீசர் வெளியானது





# ஹரிஷ் 15வது படம் குறித்து வெளியானது



நடிகர் ஹரிஷ் கல்யாண் நடிப்பில் வெளியான 'பார்க்கிங்', 'லப்பர் பந்து' படங்கள் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

2021-ம் ஆண்டு வெளியான 'லிப்ட்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் வினீத் வரபிரசாத். இப்படம் நேரடியாக ஓ.டி.டி. தளத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இதையடுத்து இயக்குநர் வினீத் வரபிரசாத் தற்போது ஹரிஷ் கல்யாண் நடிக்கும் 'HK15'-ல் பணியாற்றி வருகிறார். இப்படத்தில் கதாநாயகனாக ஹரிஷ் கல்யாணும், கதாநாயகியாக பிரீத்தி முகுந்தனும் நடித்து வருகின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. திங்க் ஸ்டுடியோஸ், புரொடக்ஷன்ஸ் இணைந்து இப்படத்தை தயாரிக்கிறது. நடிகர் ஹரிஷ் கல்யாணுக்கு இது 15-வது படமாகும்.

இந்த நிலையில், வினீத் வர பிரசாத் இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண் நடிக்கும் திரைப்படத்தின் டைட்டில் புரோமோ மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் இன்று மாலை 5 மணிக்கு வெளியாக உள்ளதாக போஸ்டர் ஒன்றை வெளியிட்டு படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

நடிகர் ஹரிஷ் கல்யாண் நடிப்பில் வெளியான 'பார்க்கிங்', 'லப்பர் பந்து' படங்கள் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.



நடிகை ஐஸ்வர்யா சர்மா பிரதீப் ரங்கநாதனின் Dude படத்தில் நடித்து பிரபலம் ஆகி இருந்தார். அவரது லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.

சசிகுமார், சிம்ரன் நடிப்பில் வெளியான படம் 'டூரிஸ்ட் ஃபேமிலி'. கடந்த மே மாதம் வெளியான இப்படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இப்படத்தை அறிமுக இயக்குநர் அபிஷன் ஜீவின்ந்த் இயக்கி இருந்தார். இலங்கையைச் சேர்ந்த ஒரு தமிழ் குடும்பம் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்து சந்திக்கும் சவால்களை காமெடி கலந்து சொல்லப்பட்டு இருந்ததால் அனைவராலும் ரசிக்கப்பட்டது.

இப்படத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து இயக்குநர் அபிஷன் ஜீவின்ந்த் அடுத்து எந்த நடிகரை வைத்த படம் இயக்குவார் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரே கதாநாயகனாக அறிமுகமாவதாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு கூறப்பட்டது.

இந்த நிலையில், அபிஷன் ஜீவின்ந்த் கதாநாயகனாக அறிமுகமாகும் படத்தின் படப்பிடிப்புகள் நிறைவடைந்துள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதுதொடர்பான புகைப்படங்கள் தற்போது வெளியாகி உள்ளது. இப்படத்தில், அபிஷன் ஜீவின்ந்துக்கு ஜோடியாக கேரளாவில் வளர்ந்து வரும் நட்சத்திரமான அனஸ்வர ராஜன் நடித்துள்ளார்.

இப்படத்தை 'டூரிஸ்ட் ஃபேமிலி', 'லவ்வர்' படங்களில் இணை இயக்குநராக பணியாற்றிய மதன் இயக்கியுள்ளார். MRP என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இந்நிலையில், இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் கதாநாயகனாக அறிமுகமாகும் புதிய படத்தின் டைட்டில் டீசர் இன்று வெளியாகியுள்ளது.

இந்த படத்தின் டைட்டில் டீசரை நடிகர் ரஜினிகாந்த் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இப்படத்திற்கு "வித் லவ்" என பெயரிடப்பட்டுள்ளது.

மேலும்,"என் மகள் சவுந்தர்யா ரஜினிகாந்த் மற்றும் With-Love படத்தின் ஒட்டுமொத்த குழுவினருக்கும் வாழ்த்துக்கள். கடவுள் ஆசிர்வதிப்பார்" என குறிப்பிட்டுள்ளார்.

# தீயவர் குலை நடுங்க

## திரைவிமர்சனம்

நாயகன் அர்ஜுன் போலீஸ் அதிகாரியாக இருக்கிறார். ஒரு நாள் எழுத்தாளர் ஒருவர் விபத்தில் சிக்குகிறார். அதன் பிறகு அங்கேயே மர்ம நபரால் கொலை செய்யப்படுகிறார். சில நாட்களில் தொழிலதிபரான ராம்குமார் மர்ம நபரால் கொலை செய்யப்படுகிறார்.

அடுத்தடுத்து இரண்டு கொலைகள் நடக்க, இதை யார் செய்தார்கள் என்பதை தீவிர விசாரணையில் இயங்குகிறார் அர்ஜுன். ஒரு கட்டத்தில் இந்த கொலைகளை எல்லாம் நாயகி ஐஸ்வர்யா ராஜேஷ் செய்கிறார் என்பது தெரிய வருகிறது.

இறுதியில் ஐஸ்வர்யா ராஜேஷ் யார்? எதற்காக கொலைகள் செய்கிறார்? போலீஸ் அதிகாரியான அர்ஜுன் எப்படி ஐஸ்வர்யா ராஜேஷை கண்டுபிடித்தார்? என்பதே படத்தின் மீதி கதை.

நடிகர்கள்

படத்தில் நாயகனாக நடித்திருக்கும் அர்ஜுன் போலீஸ் கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்தி இருக்கிறார். நடை, உடை, உடல் மொழி, ஆக்சன் என அனைத்திலும் ஸ்கோர் செய்து இருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ் எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். குறிப்பாக ஆக்ஷன காட்சிகளில் கவனம் பெற்று இருக்கிறார். கிளைமாக்ஸ் காட்சியில் நெகிழ வைத்திருக்கிறார்.

அபிராமி வெங்கடாசலம், ஐஸ்வர்யா ராஜேஷ் இன் காதலராக வரும் பிரவீன் ராஜா, தொழிலதிபர் ராம்குமார், போலீஸ் கான்ஸ்டபிள் தங்கதுரை ஆகியோர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

இயக்கம்

பழிவாங்கும் கதையை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் தினேஷ் லட்சுமணன். ஒரு கொலை, அதன் பின்னணி, ஒரு பிளாஷ்பேக் என வழக்கமாக பல படங்களில் நாம் பார்த்த கதையை அப்படியே எடுத்திருக்கிறார். முதல் பாதையில் திரைக்கதை புரியாமல் செல்கிறது. இரண்டாம் பாதியில் வழக்கமான திரைக்கதையாகவே செல்கிறது. கிளைமாக்ஸ் காட்சியில் எதிர்பாராத ஒரு திருப்பம் மட்டும் ரசிக்க வைக்கிறது.

இசை

பரத் ஆசீவகன் இசையில் பாடல்கள் ஒன்று மட்டுமே கேட்கும் படியாக இருக்கிறது. பின்னணி இசை திரைக்கதைக்கு ஒட்டவே இல்லை.

ஒளிப்பதிவு

சரவணன் அபிமன்யுவின் ஒளிப்பதிவை ஓரளவு ரசிக்க முடிகிறது.

ரேட்டிங்: 1.5





நடிகை ராகுல் ப்ரீத் ஹாட் உடையில் தாராள கவர்ச்சி போட்டோஷூட் அழகிய ஸ்டில்களை பாருங்க.

# 'SISU - தி ரோட் டு ரிவெஞ்ச்'

## திரை விமர்சனம்



இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த 1946 காலகட்டத்தில் நடக்கிறது. துப்பாக்கிச்சூடு, குண்டுவெடிப்பு, ரத்தம் என ஒரே சண்டை மையமாக கிராபிக் வலயன்ஸ் காட்சிகளுடன் படம் நகர்கிறது.

2022 ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற பின்லாந்து திரைப்படம் "SISU". இப்படம் இரண்டாம் உலகப் போரில் முடியும் தருவாயில் 1944 காலகட்டத்தில் நடக்கும் கதையாகும். பின்லாந்தில் வாழும் முன்னாள் கமாண்டோ அட்டாமி கோர்பி பின்லாந்தின் வடக்கு சமவெளியில் தனியே தோண்டுதல் பணி நடத்தி தங்கத்தை கண்டுபிடித்து எடுத்துச் செல்லும்போது ஹிட்லரின் நாஜி படை அதிகாரிகள் அவரின் தங்கத்தை பரித்துச் செல்கின்றனர்.

அட்டாமி கோர்பி அவர்களை துரத்திச் சென்று தனது தங்கத்தை மீட்பதே கதை. சாதராண முதியவர் என்ற பிம்பத்துக்கு பின்னால் அட்டாமி கோர்பியின் மிகவும் ஆக்ரோஷமான முன்னாள் கமாண்டோ என்ற பிம்பம் வெளிப்படும். இதுவே படத்தின் உயிர்நாடி. அட்டாமி கோர்பியை, "SISU"என்ற பின்னாலாந்தின் அர்பேன் லெஜண்ட் ஆக அவ்வூர் மக்கள் கருதுவார்கள். படம் முழு அட்டாமி கோர்பி ஒரு வார்த்தை கூட பேச மாட்டார் என்பதை கவனிக்க வேண்டும். இந்த பிம்பத்தோடு அவர் எதிர்கொள்ளப் போகும் புதிய சவால் என்ன?. அதுவே தற்போது வெளியாகி உள்ள 'SISU – தி ரோட் டு ரிவெஞ்ச்' என்ற இரண்டாம் பாகம்.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த 1946 காலகட்டத்தில் SISU இரண்டாம் பாக கதை நகர்கிறது. இரண்டாம் உலகப் போரில் தனது குடும்பத்தை இழந்த பிறகு, அட்டாமி கோர்பி அவர்களுடன் வாழ்ந்த மர வீட்டை பிரித்து மூட்டை கட்டி அமைதியான ஒரு இடத்தில் வீட்டை மீண்டும் உருவாக்கி வாழலாம் என புறப்படுகிறார். இதன்போது அவர் சோவியத் யூனியன் எல்லைக்குள் நுழையவே இதை அறிந்த சோவியத் யூனியனின் செம்படைத் தலைவர் இகோர் அட்டாமியைக் கொல்ல தனது படைகளுடன் செல்கிறார்.

அவர்களே தனது குடும்பத்தை கொன்றவர்கள் எனவும் அட்டாமி கோர்பி அறிகிறார். அவர்களிடம் இருந்து தான் பெரிதாக கருதும் வீட்டின் மர பாகங்களை எப்படி அட்டாமி காற்றினார், தனது குடும்பத்துக்காக அவர்களை பழிவாங்கினாரா, அமைதியாக இடத்தில் மீண்டும் வீட்டை கட்டும் தனது கனவை நிறைவேற்றினாரா என்பதுதான் மீதிக் கதை.

இயக்கம்:

இந்த முழு படத்திலும் பத்து பக்க வசனங்கள் கூட இல்லை. படம் முழுவதும் ஆக்ஷனால் நிரம்பியுள்ளது. துப்பாக்கிச்சூடு, குண்டுவெடிப்பு, ரத்தம் என ஒரே சண்டை மையமாக கிராபிக் வலயன்ஸ் காட்சிகளுடன் படம் நகர்கிறது. எனவே ஆக்ஷன் ரசிகர்களுக்கு படம் நல்ல தீனியாக அமைந்துள்ளது.

முதல் பாகத்தை போலவே மிகவும் ஆக்ரோஷமான காட்சிகளுடன் படம் நகர்கிறது. இருப்பினும் காட்சிகளிலும் கதையிலும் முதல் பாகத்தில் இருந்த வலு குறைந்துள்ளதாக தெரிகிறது. முதல் பாகத்திற்கு எதிர்பார்ப்பு இல்லாதபோது வெளியாகி வெற்றி பெற்ற நிலையில் இரண்டாம் பாகம் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியானதால் அவ்வாறு தோன்றலாம்.

நடிகர்கள்:

அட்டாமி கோர்பி கதாபாத்திரத்தில் பின்லாந்து நடிகர் ஜோர்ம டோம்மிலா நடித்துள்ளார். படம் முழுவதும் அவர் பேசாமல், தனது முதிர்ந்த மற்றும் ஆக்ரோஷமான உடல் மொழியால் கதாபாத்திரத்தை பிரதிபலித்திருக்கிறார்.

சோவியத் செம்படைகளின் தலைவராக இகோர் கதாபாத்திரத்தில் ஜாக் டூல்டன் நடித்துள்ளார். அட்டாமி கோர்பியை மையமாக வைத்தே கதை நகர்வதால் மற்ற பாத்திரங்கள் பெரிதும் வெளித்தெரியவில்லை.

ஒளிப்பதிவு:

படத்தின் ஒளிப்பதிவை மிகா ஓராசமா கையாண்டுள்ளார். இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் அடர்ந்த காடுகளின் பின்னணியில் நடக்கும் கதையை நம்பும்படியாக படம்பிடித்துள்ளார்.

சண்டைக் காட்சிகளுக்கு ஓராசமாவின் மெனக்கிடல் படத்தில் பிரதிபலிக்கிறது. அதிகப்படியான ரத்தம் மற்றும் கிராஃபிக் வன்முறை காட்சிகளை காத்திரம் குறையாமல் காட்டியிருக்கிறார்.

பின்னணி இசை

அட்டாமி கோர்பி ஒரு வார்த்தை கூட பேசாததால், கதைப் பின்னணியின் தீவிரத்தையும், அவரது உணர்ச்சியையும் பார்வையாளருக்கு யாரிட் கிளிஞ்சர் உடைய அழுத்தமான பின்னணி இசை வெற்றிகரமாக கடத்தியுள்ளது.

ரேட்டிங் : 3.5 / 5



# "ஜனநாயகன்" இசை வெளியீட்டு விழா- எங்கு..? எப்போது..? வெளியானது முக்கிய அப்டேட்




விஜய் நடிப்பில், ஹெச்.வினோத் இயக்கத்தில் உருவாகி வரும் படம் ஜன நாயகன். இப்படம் அடுத்தாண்டு பொங்கலுக்கு திரைக்கு வருகிறது. இதில் பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, பிரியாமணி, பாபி தியோல், கவுதம் வாசுதேவ் மேனன், நரேன் ஆகியோர் நடித்துள்ளனர். அனிருத் படத்திற்கு இசையமைக்கிறார்.

அரசியலால் விஜய் நடிக்கும் கடைசிப் படம் இது என்பதால், ரசிகர்கள் மத்தியில் இதற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

சமீபத்தில் இப்படத்தின் முதல் பாடலான "தளபதி கச்சேரி" வெளியாகி அவரது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் ரசிகர்களுக்கு ட்ரீட் கொடுக்கும் விதமாக புது அப்டேட் ஒன்றை வெளியிட்டுள்ளது படக்குழு.

படத்தயாரிப்பு நிறுவனமான KVN புரொடக்ஷன்ஸ் இது சார்ந்த ஒரு வீடியோ பதிவை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளது.

அதில் மலேசியாவின் ட்வின் டவர்ஸ் இடம்பெற்றுள்ளது. இதனால் படத்தின் இசை வெளியீட்டு விழா அங்கு நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், ஜனநாயகனின் இசை வெளியீட்டு விழா குறித்து முக்கிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி, விஜயின் ஜனநாயகன் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா டிசம்பர் 27ம் தேதி மலேசியாவில் நடைபெறவுள்ள அறிவிக்கப்பட்டுள்ளது.



குழந்தை நட்சத்திரமாக இருந்து தற்போது ஹீரோயினாக நடிக்க தொடங்கி இருப்பவர் அனிகா சுரேந்திரன். அவர் சேலையில் கிளாமராக போஸ் கொடுத்திருக்கும் லேட்டஸ்ட் புகைப்படங்களை பாருங்க.




## குழந்தை பிறப்பின் ரகசியம்

திருமூலரை அறிவோம் நாமும்
திருமந்திரம் நூலும் அறிவோம்

திருமந்திரம் அறிவுப்
பெட்டகம் தெருவெலாம்
தெரிய வேண்டும்

மருத்துவம் தெரிந்தவர்
திருமூலர் மருத்துவ
அறிவிலவர்
இறைவனே !!

பிறப்பின் சூட்சமம்
அறிந்தவர் பிறவிஆண்
பெண் உரைத்தவர்
விடுமூச்சு வலது நாசி

தொடர்மூச்சு இடது நாசி

வலதுநாசி மூச்சு சூரியகலை
இடதுநாசி மூச்சு சந்திரகலை
சூரியகலை நேரம் உறவில்
சூரிய போன்றொளி ஆணும்

சந்திரகலை நேரம் உறவில்
சந்திரமதி போன்ற பெண்ணும்

பிறப்பர் பூமியில் என்றார்
பிறப்பின் ரகசியம் மூலர்கூற்று



மருத்துவக் கூற்றும்
வியப்பே கருத்தும்
பல்லாயிரம் ஆண்டாம்!!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி

## பெருவளி பயணங்கள்

ஆகாயம் விரிந்து
குடையென விரிகிறது
ஓ.. எத்தனை பறவைகள்

ஒவ்வொரு
மரங்களிலும்
எத்தனை கனிகள்
புதிதாக ஆயிரம்
கிள்ளைகள்

திரை என விரியும்
கடல்கள் ஓயாத
ஓவியமாக அலைகள்
காற்று வாசித்தது
புதுப்புது கவிதைகள்
ஓடியாட விரும்பும் மரங்கள்



கவிஞன் தலை எங்கும்
கற்பனை சூறாவளி
காட்சிகளின்
கதவிலில்லை தாழ்ப்பாள்

**ஆர் ஜவஹர் பிரேம்குமார்**
பெரியகுளம்

1. சத்தான உணவை சாப்பிடுவதற்கு நேரமில்லை மென்று சாப்பிடுவதற்கு நேரம் இல்லை. உடற்பயிற்சி செய்ய நேரம் இல்லை ஆனால் ஆஸ்பத்திரியில் நாள் முழுவதும் காத்து கிடக்கிறோம்

2. பிழைக்க விரும்பினால் உழைக்க விரும்பு

3. வாகனத்தில் உள்ள பூச்செடிகள் வாழ்க்கையை தேடி புலம் புலம் பெயர்கின்றன.

4. காலம் கடந்த புரிதலும் நம் உறவில் ஊனமே

5. அடுத்தவர்களை திருத்துகிறோம் என்று அறிவுரை சொன்னால்



அதுஅனுபவம் பட்டு
திருந்தட்டும் என்று
விட்டுவிட்டால் அது
பக்குவம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## தமிழறிஞர் ஔவை நடராசனார்!

நேரிசை வெண்பா!

தமிழறிஞர் கல்வியாளர்
தக்கசிந்தனையர்!

கமழும் தமிழ்ப்பல்
கலையில்... அமைந்த

துணைவேந்தர் ஔவையே
தூய நடராசர்

மணந்திடும் பத்மசிறி
மாண்பு!

காற்றில் கலந்திட்ட
கற்பூரம் ஔவையே!

போற்றிடும் எண்டிசையும்
போற்றியே.. சாற்றிடும்

வித்தகர் வெற்றி
நல்வேந்தர்தான் ஔவையே!
முத்தமிழ் வல்லவர் முன்!

## கடலளவு!

பேராசைப் படாதே
பெருங்குழியில் விழாதே
போராட்டம் வேண்டாம்
புதைகுழியில் விழாதே!
ஆர்ப்பாட்டம் வேண்டாம்
அடைதுயரும் வேண்டாம்
சீரழிவும் வேண்டாம்
சுறுசுறுப்பே கொள்வாய்!

இருப்பதுதான் நிற்கும்
இல்லாமை போகும்
திருமைதானே ஓங்கும்
தெளிவுதானே தாங்கும்!
புரிகின்ற செயல்கள்
பூக்கட்டும் நன்றாய்



விரைவாக
உழைப்பாய்
வீறுடனே
தழைப்பாய்!

**முனைவர் இராம. வேதநாயகம்**



## அந்த முதல் காதல்!

ஒரு கடற்கரையின்
அலையாக...
அனு தினமும் எழுகிறது
காதலின் நினைவுகளும்
நெஞ்சின் ஓரங்களில்!

கடல் வானின் உயரம்
போல...மனித காதலும்
உயர்வானது அதை
பெருமையோடு சொல்லும்
கவிதைகளும் புனிதமானது!

அழகிய ராசாத்தி
அவளுடன்... மணல் வீடு
கட்டிய நாட்களை
மடியில் தலை வைத்த
நாட்களை நீரில் கால்
நனைத்த நாட்களை!

நுரையை கையிலெடுத்து...
வீசி விளையாடிய நாட்களை
வெறும் கற்பனையின்
நாட்களாய் நானும் கடந்து
செல்ல முடியாது!

பாக்யராஜின்... அந்த ஏழு
நாட்களாய் பாரதிராஜாவின்
மண் வாசனையாய்
எங்கும் கடலோரக்
கவிதையாய் என்றும் முதல்
மரியாதையாய்!

அந்த முதல் காதல்...
அன்று முதல் இன்று வரை
வாழ்ந்து கொண்டு
தானிருக்கிறது ஜீவனுள்ள
படைப்பாய் என்னுள்!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

இரவு முழுதும் பெய்த
மழையில் குளிரில்
நடுங்கிக்கொண்டு,
பொழுது புலரும் நேரத்தில்



உற்சாகமாகக்
கூவும்
குயிலின்
குரலை
ரசிக்கிறேன்.

**கே. பி. ஜனார்த்தனன்**

## ஒரு திருநங்கையின் புலம்பல்!

இப்பிறவியில் நான்...
ஆணாக இருந்தாலும்
மெல்ல மெல்ல
உணர்வுகளில்
பெண்ணாகிவிட்டேன் என்ற!

உண்மையை சொன்னவுடன்
முதலில் வீடு வெறுத்தது
அடுத்து உறவுகள்
கொதித்தது
காது படவே ஊரும்
சபித்தது!

எல்லோராலும் எப்போதும்
தனிமைப்படுத்தப்பட்ட
வாழ்வில் விதி
விளையாடியது
வேதனைதான் தொடர்ந்தது!

வீதியில் பிச்சை எடுத்தேன்
வேடிக்கையாய் திரிந்தேன்
கண்ணீரில் கரைந்தேன்
காமுகர் கையில்
பலியானேன்!

என்மீது பழி சொல்ல
குற்றம் சுமத்த
தெரிந்தவர்கள்
நான் வாழ வழி சொல்ல
ஒரு நாளும் தெரியவில்லை!

பெண்ணை தெய்வமென்று
பெருமிதங்கொள்ளும் நம்
நாடு
என் போன்ற திருநங்கையை
தேவதாசியா பார்ப்பது ஏன்?

மனதளவில் நான் எப்போதோ
மனுஷியாகி விட்டாலும்
ஊனமாய் பார்க்கும் சமூகமே
இன்னும் குருடாகவே
உள்ளது!

உடல் அளவில் என்னை
ஆணாகப்படைத்தது யார்
தவறு ஆண்டவனின் தவறா?
இயன்ற அம்மாவின் தவறா?

என்றும் ஏளனம் செய்யும்
இளைஞர் கூட்டமே
எனக்கும் உங்களைப்போல்



இதயம்
இருக்கு
என்பதை நீ
உணரு!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

## ஆணவத்தைச் சாய்த்திடுவோம்



தீக்குள்ளே உடல்தன்னை மூழ்கச்செய்யும்
தீர்ப்புக்கே உடன்பட்டுச் சாவதற்கா
ஏக்கத்தை மனம்வைத்து மணம்முடித்தாய்
ஏனிந்த அவலங்கள்! தங்கமேனி
பாக்குமரக் கழுத்தினிலே மாலைபோடப்
பணத்தாளின் கட்டுகளைத் தட்சணையாய்
வாக்களித்த காரணத்தால் அன்றோவஞ்சி
வடிக்கின்றாய் செந்நீரைக் கணிணீ ராக !

புன்னகையின் அழகுதனைப் பார்க்கவில்லை
பூரிக்கும் பண்புதனைக் காணவில்லை
பொன்னகையும் பொருள்நகையும் பார்த்துத்தாலி
பூட்டுதற்கு வருகின்ற பேடியர்க்குத்
தன்தலையைத் தாழ்த்துகின்ற நெஞ்சின்கோழைத்
தனத்தாலே விலைதன்னைப் பேசுகின்றார்
வன்நெஞ்சர் பெண்களினை அடிமையென்றே
வன்முறையில் தன்முறையைச் சாதிக்கின்றார் !

நாற்குணத்தின் நளினத்தைப் படைகளாக்கு
நாணிக்கண் புதைக்கின்ற போக்கை மாற்று
வேற்படையில் தீக்கனலைப் பாய்ச்சு பெண்ணே
வெகுண்டெழுந்தே உன்னினத்தை ஒன்றாய்க்கூட்டு !
சேற்றுமன ஆடவரை எதிர்ப்பாய் நன்று
சேர்க்கின்ற வாழ்விற்கோ அன்பே நாற்று
சாற்றிடுவாய் செயல்படுவாய் ஆணவத்தைச்
சாய்த்திடுவாய் வென்றெடுப்பாய் சமத்துவத்தை !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## குழந்தைகள் குதூகலத்தின் சின்னங்கள்!

குழந்தைகள் உச்சபட்ச குதூகலத்தின் சின்னங்கள்/
வாழுகின்ற வாழ்க்கையை வளமாக்கும் வண்ணங்கள்/
இல்லறத்தை அர்த்தப்படுத்தும் வாழ்விற்கான பூரணங்கள்/
நல்லறத்தை மேம்படுத்த நமக்கான காரணங்கள்/

கட்டணமில்லாமல் வலிகளை ஆற்றுகின்ற மருந்துகள்/
அளவிலா மகிழ்ச்சியின் அன்புசார் விருந்துகள்/
இல்லத்தை இனிமையாக்கும் ஈடில்லா வரவுகள்/
தலைமுறையை நீட்டிக்கும் உயிர்ப்பான உறவுகள்/

குழந்தைகளின் சிரிப்பினால் கல்மனங்களும் கரையும்/
சேட்டைகளால் மகிழ்வின் தருணங்கள் நிறையும்/
சண்டைகளும் சச்சரவுகளும் இவர்களால் குறையும்/
ஆறாத ரணங்களும் பூமுகங்களால் மறையும்/



இவர்களிடம் தோற்கின்ற நேரங்கள் அழகாகும்/
இவர்கள் வெற்றியைப் பகிர்தல் சுகமாகும்/
பதினாறு பேறுகளில் மக்கட்பேறு உச்சம் /
அகிலமெல்லாம் பெரும்புகழை என்றென்றும்
மெச்சும்/

**கவிஞர் மு.வா.பாலாஜி, ஒசூர்**

## உருகாதே...மனமே...

நாட்கள் யாவும் வதைகளின்
கூடாரம்.. நினைவுகள்
ஆட்கொல்லி நோயாய்..


பாதைகள் எங்கும் முட்களின்
தேசம்... மூச்சு அடைக்கும்
கடந்த கால நேசம்...
சொற்கள் வேலைநிறுத்தத்தில்
பேச்சு தடுமாற்றம்...

மகிழ்ச்சியின் கூடு என்னில்...
தலைகீழ் நிலைமாற்றம்...
காலம் ஆற்றும்..நீ தந்த
காயத்தை...
காதல் தேற்றும் ... என்
வேதனையை...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

# நூல் விமர்சனம்

புதிய மரபுகள் !
நூல் ஆசிரியர் :
கவிஞர் நா. முத்துநிலவன் !
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா. இரவி !
அகரம் மனை எண் 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் 613 007.
தொலைபேசி : 04362 239289, விலை : ரூ. 70




நூலாசிரியர் கவிஞர் நா. முத்துநிலவன், நாடு அறிந்த நல்ல பேச்சாளர் மட்டுமல்ல. உரத்த சிந்தனையுடன் உன்னதமான கவிதைகள் படைக்கும் படைப்பாளி என்பதை உணர்த்திடும் நூல். இந்த நூலின் முகப்பு ஓவியத்தை மதுரைக்காரர் உலகப்புகழ் ஓவியர் ட்ராட்ஸ்கி மருது அவர்கள் வரைந்து உள்ளார்கள். நூலின் அட்டையைப் பார்த்தவுடனேயே நூலினை வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டும் விதமாக உள்ளது. பன்முக ஆற்றலாளர் கவிஞர் மீரா அவர்கள் குடும்பத்தின் 'அகரம்' பதிப்பக வெளியீடாக வந்துள்ளது. பாராட்டுக்கள். புதிய மரபுகள் என்ற நூலின் தலைப்பே வித்தியாசமாக உள்ளது.

கந்தர்வன் அவர்கள் எழுதிய அணிந்துரையில் இறுதியாக உள்ள மூன்று வரிகளே இந்த நூலிற்கு மகுடம் சூட்டுவதாக உள்ளது. "முத்துநிலவன் என்ற ஆளுமையை நீங்கள் இந்தத் தொகுப்பு முழுவதும் பார்த்து ஆனந்திக்க வேண்டும்.

நூலாசிரியர் செம்மலர், தீக்கதிர், கல்கி, அறிவியக்கம், புதிய தலைமுறை இதழ்களில் எழுதிய கவிதைகளையும், த.மு.எ.க.ச. கலைஇரவு மேடை களில் பாடிய கவிதை- களையும் தொகுத்து நூலாக்கி உள்ளார். காதல் கவிதைகள் எழுதுவது மட்டுமே கவிதைகள் என்று சிலரும், இயற்கை பற்றி எழுதுவது மட்டுமே கவிதைகள் என்று சிலரும் நினைத்து எழுதி வருகின்றனர். ஆனால் இவற்றை எல்லாம் தாண்டி சமுதாயம் பற்றி சிந்தித்து எழுதுவது தான் சிறந்த கவிதை என்று எண்ணி சமுதாய விழிப்புணர்வுக் கவிதைகள் வடித்துள்ளார் நூலாசிரியர் கவிஞர் முத்துநிலவன். மதுரையில் நடந்த தமிழ் வலைப்பதிவாளர் மாநாட்டில் சிறப்புரையாற்றினார், மிக நன்று.

முத்துநிலவன் என்பது பெற்றோர் வைத்த இயற்பெயரா? அல்லது புனைப்பெயரா? என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் காரணப்பெயர் என்றே எண்ணுகின்றேன். முத்துப் போன்ற சொற்களால் நிலவைப் போன்று அழகான பெயர் பெற்றுவிட்டார் என்றும் கூறலாம்.

நூலாசிரியர் சமுதாயத்தை உற்றுநோக்குகின்றார். செய்திகள் படிக்கின்றார். பார்க்கின்றார். மனதை பாதித்தவற்றை கவிதையாக்கி விடுகின்றார்.

விஸ்கி பாட்டிலுக்காய்
தேக ரகசியம் விற்கும்
அதிகாரிகள் தியாகிகள் பதற
துரோகிகள் செலுத்தும் அரசியல்
தந்தைக்கு சாராயம் தந்து
பிள்ளைக்கு சத்துணவு போடும்
திட்டங்கள்.

(மதுராந்தக இராணுவ ரகசியம் தந்த கொடுமை நடந்த நிகழ்வு)

ஆம். குடியால் குடிப்பவர் மட்டுமல்ல, குடிப்பவரின் குடும்பமே அல்லல்பட்டு வருகின்றது. குடியால் தான் குற்றங்கள் நடக்கின்றன. குடி ஒழிந்தால் குற்றங்கள் ஒழியும். அமைதி நிலவும்.

விடுதலை வேண்டும் என்று
போராடிப் பெற்றோம், பெற்ற
விடுதலையை பேணி காக்காமல்
அந்நியருக்கு ரத்தினக் கம்பளம்
விரித்து உலகமயம், தாராளமயம்,
புதிய பொருளாதாரம் .

என்ற பெயர்களில் தேசத்தை இழந்து வருவதைச் சுட்டும் கவிதை நன்று.

**சுதந்திரம் !**

சட்டைத்துணி கேட்டு
சண்டையிட்டோம் மூன்று
வண்ணத்தில் ஒட்டுத்துணி
கிடைத்தது.

தொலைக்காட்சி இன்று தொல்லைக்காட்சியாகி விட்டது. தொலைக்காட்சித் தொடர்கள் மனிதர்களை மனநோயாளிகள் ஆக்கி வருகின்றன. இசை நிகழ்ச்சிகள் பிஞ்சுக்குழந்தைகளின் மனத்தைக் காயப்படுத்தி அழ வைத்து வேடிக்கை பார்த்து வருகின்றன. சமுதாயத்தின் பழுது நீக்காமல் பாழ்படுத்தி, கோளாறு செய்து வரும் தொலைக்காட்சி பற்றிய கவிதையிலிருந்து எனக்குப் பிடித்த சில வரிகள் :

இரண்டாம்ப்பு படிக்கும்
என் மகன் COLOUR TV என்பதை
கோளாறு டிவி என்றே சரியாகப்
படித்தான்.

மகாகவி பாரதியாரின் வைர வரிகளை வைத்து சொல் விளையாட்டு விளையாடி புதுக்கவிதைகள் வடித்துள்ளார். பாராட்டுக்கள்.

**எந்தையும் தாயும் !**

புத்தன் ஏசு காந்திய வழியார்
போதனை செய்ததும் இந்நாடே
ரத்தக்களரியும் ஜாதிக்கொடுமை
யும் நித்தம் நடப்பதும் இந்நாடே
சுதந்திரம் வந்ததும் சொர்க்கம்
வருமெனச் சொல்லித் திரிந்ததும்
இந்நாடே! அட்டத் தரித்திரம்
எங்கள் சரித்திர வாழ்வில்
நரித்தனம் செய்வதும் இந்நாடே!

த.மு.எ.க.ச மேடைகளில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பாடல்களை மெய் சிலிர்க்க வைக்கும் வண்ணம் பாடும் நெல்லை கரிசல்குயில் கிருஷ்ணசாமியின் இசைப்பாடல் ஒலிநாடாவில் மேலே உள்ள கவிதைகள் வந்துள்ளன என்பது நூலாசிரியர் கவிஞர் முத்துநிலவன் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் செய்தி இது.

மகாகவி பாரதியாரின் புகழ்பெற்ற கவிதை வர்கள் வைத்தே, மாற்றி யோசித்து வடித்த கவிதைகள் மிக நன்று!.

**பாரதி! எங்களை மன்னிக்காதே!**

பாரத நாடு கடன் பெறும் நாடு நீரதன் புதல்வர் நினைவிருக்கிறதா? வட்டி கட்டுவீர்! ஆம் பாரத நாடு உலக வங்கியில் கடன் பெற்று, வட்டி கட்டிய பெரும் அவலத்தை சுட்டிய கவிதை சிந்திக்க வைத்தது. பாராட்டுக்கள். ஆம். இந்தியா உலக வங்கிக்கு வட்டி கட்டுவது மட்டுமல்ல. அது சொல்வதையும் கேட்டு வர வேண்டும்.

நூலில் ஊறுகாய் போல மட்டும் காதல் கவிதைகள் உள்ளன. சோறு அளவிற்கு சமுதாயக் கவிதைகள் இருப்பதே சிறப்பு.

**ஒரு காதல் கடிதம்!**

காதல் எனும் வார்த்தை!
அன்பே! என் ஆசை!
அத்தான் வாங்கய்யா'னு
முன்பே ஒரு கடிதம் முந்தா
நாள் போட்டேனே?
இங்கே உமக்காக ஏங்கி நா
கிடக்கிறப்ப அங்கே என்னய்யா
அம்பூட்டு வேலை?யின்னு
நீ போட்ட காயிதமும்
நேத்தே கிடைச்சுதம்மா!
பூ போட்டகைக்குட்டேயே
பொத்தி பொத்தி வச்சிருக்கேன்.

கவிதையை கிராமிய மொழியிலேயே எழுதி இருப்பதால் கவிதையில் மண்வாசனை வீசுகின்றது. வாசிக்கையில் மணக்கின்றது.

நூலின் தலைப்பில் உள்ள கவிதையில் மரபுக்கவிதைக்கும், புதுக்கவிதைக்கும் உள்ள வேறுபாடு என்ன? நூலாசிரியர் கவிஞர் முத்துநிலவன் அவர்களின் கவிதை மொழியிலேயே காண்போம். எதுகை மோனை இருந்தால் போதும் மரபுக் கவிதை மறக்காது! புதுக்கவிதை நினைவில் நிற்காது.

தமிழும், ஆங்கிலமும் கலந்து பாடல்கள் பாடி, அப்பாடலை இளைய சமுதாயத்தினரை, குழந்தைகளை பாடி வைத்து தமிங்கிலம் பரப்பிய பாடல் ஒன்றை சாடி எழுதிய கவிதை நன்று. ஏன் இந்தக் கொலைவெறி கொலவெறி, கொலவெறிய்யா? ஏனிந்தக் கொலைவெறி, கொலவெறி, கொலவெறிய்யா? - திருக் குறள் நெறி தமிழினில் இருப்பதும் தெரியலையா? இனிக்கும் தமிழ்வகை மூனு! மூனு! இப்பக் கணினி சேர்த்தா நாலு!

நூலாசிரியர் கவிஞர் முத்துநிலவன் அவர்கள் சீரழிந்து வரும் சமுதாயத்தைச் சீர்படுத்தும் விதமாக வடித்த கவிதைகள் நன்று. பாராட்டுக்கள். முதல்பதிப்பு1993! கவிஞர் மீரா வெளிட்டது! இரண்டாம் பதிப்பு 2015 கதிர் மீரா வெளியிடப்பட்டது! 1993 கலை இலக்கியப் பெருமன்றம் முதல் பரிசு தந்தது! 1995முதல் 15 ஆண்டுகள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுகலை தமிழ் வகுப்புப் பாடநூலாக இருந்தது! இதில் உள்ள "சைக்கிள்" பாடல் -அறிவொளி இயக்கத்துக்காக எழுதப் பட்டது,

அப்போதைய மாவட்ட ஆட்சியரும் அறிவொளி இயக்கத் தலைவருமான திருமிகு ஷீலாராணி சுங்கத் அவர்களால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு, இந்தி தெலுகு கன்னடம் மலையாளம் உள்ளிட்ட பல்வேறு இந்திய மொழிகளில் வந்தது! இதுபற்றி "மகசேசே" விருது பெற்ற எழுத்தாளர் 'சாய்நாத்' "இந்துஸ்தான் டைம்ஸ்"இதழில் எழுதிய கட்டுரை அவரது நூலில் இடம் பெற்றுள்ளதோடு, "If there is a wheel.." எனும் தலைப்பில் கர்நாடக அரசின் 12ஆம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலில் இடம் பெற்றுள்ளது என்பதும் கூடுதல் தகவல்

## திருமெய்யம் ஸ்ரீ சத்திய மூர்த்தி பெருமாள்.!

மெய்யமலை யோரம்..
அய்யன் அருள் மோதும்
திருமாலின் புகழ் பாடவா!
திரு மெய்யன்
புகழ் பாட வா!

பூதேவியோடு..
ஸ்ரீதேவியோடு..
உலாவரும் அழகன்
அவன்.. உஜ்ஜிவனத்
தாயார் உடனுறை மெய்யர்
திருக்கோலம் தனைக்
கொண்டவன்!
நின்றானும் அழகல்லவா..
கிடந்தானும் அழகல்லவா..
செண்டாடும் மலர்கள்
தனைக் கொண்டு



இங்கு
பெருமாளின்
புகழ் பாடவா!
திரு
மெய்யன்
புகழ் பாட
வா!

**வே.கல்யாண்குமார்.**

## மீனவர் நலன் காப்போம்!

நேரிசை வெண்பா!

மீனவர் துன்பத்தை
மேன்மையாக எண்ணியே
ஆனமட்டும் அன்னார்
துயரைத்தான்..
கானிசையாய்ப்
பாடித் துரத்துவோம்
பங்களிப்பை நன்கேதான்
நாடித் தருவமே நாம்!

கடலுக்குச் சென்றால்தான்
காணும் உணவு
தொடர்கதை இஃதன்றோ!
தூய..அடிப்படை
கண்டவர் வாழ்வாதாரம்
தம்மைக் காலமும்
அண்டி வளர்ப்பமே ஆம்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**






ஈரோடு தமிழன்பனை
எமன் பாசக் கயிறு
வீசி அழைத்தானோ?
தன் தர்பாரில் கவி பாட.....
**ஸ்ரீகாந்த்** திருச்சி



உதிராத
பூக்களின்
செவிகளைத்
தாக்குகிறது
உதிர்ந்த
பூக்களின்
விம்மல் !
**ரிஷபன்**

## எதிரி எதிரில்


அன்பு இழையோட பேசுவார்
மிக்க அக்கறையாய்
கூறுவார் தேனொழுக
உரையாடுவார்

உள்ளொன்று வைத்திடுவர்
வெளியில் ஒன்றும் தெரியாது
ஆராய்ந்து பார்த்தால் புரியும்

சொந்த பந்தத்தில் கருப்பு
ஆடு நெருங்கியவரின்
உள்ளடி வேலை
கவிழ்த்துப் போடும்
அதிரடியாய்



கவனச் சிதறல்
இல்லாமல்
சாமர்த்தியமாய்
நடை போடு!
**பி. பழனி,**
சென்னை.



## முளரியும் மெழுகுவர்த்தியும்

நேரிசை வெண்பா!

முளரிப்பூ முன்வந்தே
மேன்மையைக்காட்டும்!
களிப்புதந்து
கண்ணைக்கவர்ந்தே...
அளிக்கும்!
மகிழ்வை அழகாக
மாண்புடன் தானே
தகவாக இன்பந்தரும்!

தன்னை அழித்தே
தருமே ஒளியைத்தான்
அன்பின் வெளிப்பாடே
ஆங்கேதான்..
துன்ப இருளோட்டித்
தூயவொளி என்றுமே
நல்கும் அருளாம்
மெழுகுவர்த்தி ஆம்!
**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## நொந்த முகமாக

சொந்த மாமனும்
சொல்லாமல் போகவே
எந்த பதிலும் இல்லாமல்
போகவே நொந்து நூலாய்
எண்ணி நிற்கிறேன்
சாய்ந்து தூணில்
தொக்கி நிற்கிறேன்
இந்த இடம்தான்
எம்மைச் சேர்த்தது...
தந்தையும் தாயுமே
தாங்காத துயரத்தில்
இந்தக் கவலையே
என்னை வாட்டும்
வந்திடும் நாளிலே
வந்திடு சீக்கிரம்
தந்திடு நல்வாழ்வு
நமக்காக வடிவாக
நொந்திட வேண்டாமென
சொல்லிடு
உடனேநீ
எந்தைக்கும்
தாய்க்கும்
இன்னல்
களைவதற்காய்!



**வைரமணி**
சென்னை

## தொலைக்காட்சி!

நேரிசை வெண்பா!

பொழுதுபோக்கு கல்வி
பொலிவான செய்தி

வழங்கும் தொலைக்காட்சி
வண்ணம்.. அழகாய்த்

திகழுமன்றோ இந்நாளில்
தேர்ந்த விதமாய்

வகையாய்த்
தொலைக்காட்சி வந்து!

வீட்டில் உலகத்தை
வீறுடன் காணலாம்

நாட்டு நடப்புகளை
நன்கேதான்.. கேட்டே

இன்புறலாம் நல்ல
இனிமையாய்ப்பாடல்கள்

அன்புடன் காணலாம் ஆம்!
**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## ஃபர்ஸ்ட் லுக்... !

உன் ஃபர்ஸ்ட் லுக்கை
எதிர்பார்த்து காத்திருந்த
எனக்கு...

டீசராகவே ( முன்னோட்டம் )
வெளியிட்டு விட்டாய் ...
உன் பார்வையை...

உன் கண்கள் எனும் அகன்ற
திரையில்...

உன் சிரிப்பின் ஒளியில்....

கொலுசின் பின்னணி
இசையில்...


கருங்கூந்தலின்
பிம்பத்தில்....

அழகாகத்தான் இருந்தது....
ஃபர்ஸ்ட் லுக்... !

அது காதல் என என்னும்
என் மன படம் தோல்வி
அடைந்து
விடுமோ என்ற
அச்சத்தில்
நான்... !



**எம்.பி.**
**தினேஷ்.**
கோவை



1. குடை ஏதும் வேண்டாம்/
என்னை நனைத்துப்போகும்/
மென் தூறல்

2. மரத்துக்குக் கீழ்/
நின்ற பாடில்லை/
மைனாவின் குக்கூ

3. எங்கே உங்கள் ஓட்டம்/
வழியில் போகும் பயணிகளே/
மழை வேண்டாமோ

4. மழை சொட்டும்/
கூரைக்கு மேல்
சிறகசைக்கும்/ காகங்கள்

5. ஒவ்வொரு மின்னலும்/
கார்மேகத்தில் எழுதும்/
கவிதைகள்

6. மழை மழை/
மழையின் சாரலில்/
மழை இன்பமே

7. மழை எங்கும்/
தேடி
மகிழ்கிறேன்/
என் பிம்பம்



**ஆர்**
**ஜவஹர்**
**பிரேம்குமார்**
பெரியகுளம்

## கவிதைக்கு பொய் அழகு !

கடற்கரை அலையில் கால்
வைத்தபடி கேட்டாள் அவள்...

'உனக்கு என்ன தெரியும் ..!"

"எனக்கு உன்னை மட்டுமே
தெரியும் !' என்றேன் !

'என்ன கவிதையா !'
என்றவள்

"என்னை வர்ணிக்க
தெரியுமா !' என்றாள்...

'உன் கால் பட்டதால் உப்பு
நீர் கடல் கூட இனிப்பு நீராக
மாறிவிட்டது, உன் பாதம்
பட்டதால் கடற்கரை மணல்
கூட தங்கமாய் மின்னுகிறது !
என்றேன்.

சிரித்தாள் அவள்...

"பொய் நிறைய எழுதுவீங்க
போல !" என்றாள்...

"எழுதுபவனுக்கும்
வர்ணிப்பவனுக்கும் பொய்
தான் பிழைப்பு !' என்றேன்.

"அப்படி என்றால் இப்போது
நீங்கள் சொன்னதெல்லாம்
பொய்தானே என்றாள்... !'

கடலலை மீண்டும் அவள்
காலை நனைத்து ஆர்பரித்து
சென்றது, உண்மை என்று
ஆமோதிப்பது போல் !
**எம்.பி.தினேஷ்.**
கோவை

## புற்றுநோய்க்கு பாடைகட்டுவோம்

பல நொடிகள் சில
நிமிடங்கள் சேர்ந்ததுதான்––
காலம்

பல வெற்றிகள் சில
தோல்விகள்
சேர்ந்ததுதான் –– வீரம்

பல கனவுகள் சில
கற்பனைகள்
சேர்ந்ததுதான் –– வாழ்க்கை

பல முயற்சிகள் சில
திட்டங்கள் சேர்ந்ததுதான்––
திறமை

பல மகிழ்ச்சிகள்
சில நெருடல்கள்
சேர்ந்ததுதான்–– குடும்பம்

பல நிகழ்வுகள் சில
உதவிகள் சேர்ந்ததுதான்––
நட்பு

பல மாலைகள் சில
பாராட்டுக்கள்
சேர்ந்ததுதான் –– புகழ்

இவை அனைத்தையும்
வேரோடு சாய்ப்பது
பல சிகரெட்டுக்கள்
சில பான்பாராக்குகள்

புகையிலையை ஒழிப்போம்
புற்றுநோய்க்கு
பாடைகட்டுவோம்.
**முனைவர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

கட்டி போட்டுவிட்டார்கள்
நானும் இப்போது
ஆடு குட்டி தான் ,

பயத்தை சொல்லி
கொடுத்தார்கள்
அழுதுகொண்டே
அழகாய் பயந்தேன் ,

சுவைத்து பார்க்க பாகற்காய்
கொடுக்கவில்லை
கசப்பை இன்று
உணர்கிறேன்,

ஏன் பிறந்தோம் ?

பிறந்தது தவறில்லை
அறிவு பிறந்தது தான் தவறு ,



என்
உணர்வுகள்
முழுமையாக
செயல்பட
வில்லை ..
**கவிஞர்**
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

இன்று ஞாயிற்றுக்கிழமை.
செல்ல வேண்டிய
திருமணங்கள்
நான்கிருக்கிறது!

சொந்ததில் இரண்டும்
நண்பன் வீட்டார்களது
ஒன்றும் தெரிந்தவர்களுக்கு
தெரிந்தவர் வீட்டார்களது
ஒன்றும்!

முகூர்த்த வேளை அரைமணி
ஒரு மணி முன் பின்!

ஒவ்வொரு திருமணமும்
வெவ்வேறிடத்தில்!

திசைக்கொன்றாய்
பயணித்துச்செல்ல வேண்டிய
கட்டாயம்!

இதில் இரண்டிற்கு இரு
சக்கர வாகனப்பயணம்
ஏற்றதல்ல.


இறுதியாய் வந்த
அழைப்பைக்கூட பின்
பார்த்துக்கொள்ளலாம்.
அல்லது அவர்களை
நேரில் பார்க்கிற
பொழுதுகளில்
சமாதானச்சொல்லொன்று
எழுதிக்கொள்ளலாம்.

நண்பன் வீட்டு திருமணம்
நேரத்தைப்பொறுத்து
சென்று வர யோசிக்கலாம்.

மற்ற இரண்டிலும்
எங்களிருவரினிருப்பு
அவசியம்.

பட்டுப்புடவை,தங்க
அணிகலன்கள்,
செயற்கையாய்
பட்டுத்தெரிகிற நாகரீகம்
படோடோப பேச்சுக்கள்
இவைகளுக்கு மத்தியில்
பொய்யிருப்பாவது காட்ட
வேண்டும்.

இதற்கூடாய் உறவில்
இறந்து போன முதியவரின்
இறுதிச்சடங்கிற்கு
சென்று வர நேரம்
வாய்க்குமா?தெரியவில்லை.
காலனுக்கு குருஞ்செய்தி
அனுப்பிக்கேட்டிருந்தேன்.
அட்டவணை அனுப்பி
தந்திருக்கிறான்.



இதோ கிளம்பிக்
கொண்டிருக்கிறோம்
காற்று வாக்கில்
பயணித்து திருமண
வீடுகளுக்குச்செல்ல!
**விமலன்.**



## காதலே வந்துவிடு

அன்பே! வானத்து
நிலவான உன்னை
வாரியெடுக்க நினைத்தே
கரங்களை நீட்டியும்
கைப்பிடிக்குள் வரவில்லை.
கண்களைத் தூதாக்கி,
கைதியாகக விழைகிறேன்,
பார்வைபட்டாலல்லவா
பாவியிடம் சிறைபடுவாய்,
கருணையைப் பொழிந்து
உன்
கண்களைத்
திறந்து,
கைதியாய்
வந்துவிடு,
காதலைத்
தந்துவிடு!



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை

## கடற்கரை

காதலர் விழிகள்
நோக்கி கொண்டதாய்
விசும்பும் ஆழியும்
நோக்கி கொண்டதன்
ஒருமித்த வசீகரிப்புதான்
நீலநிற நிலைப்பாடு!

ஓயாமல் ஓடி விளையாடும்
ஒய்யாரியே! ஆறுதல் தேடி
வந்து பாதம் நனைக்கும்
காயப்பட்ட இதயங்களுக்கு
கவரிவீசி நிம்மதி அருளும்
வித்தகமே பேரழகு!

வீசும் அலைகள்
கடல் காரிகையின்
மடியில் தவழும்
மீன்களுக்கு தாலாட்டு!
பரந்து விரிந்து
ஆழ்ந்து கிடக்கும்
புதிரான புதையலே!

புவிக்கு மட்டுமா
பூகம்பம் ஆழிக்கும்
உண்டெனத்
திமிங்கலத்தை பதுக்கி
வைத்த மாயமென்ன!

மிதந்து வரும் தெப்பங்கள்
உலாவரும் நாவாய்கள்
கரைசேரத்துடிக்கையில்
நித்திரையை மறந்து
விழிப்பையே
வித்தகமாக்கிக்கொண்ட
வற்றாத விசித்திரமே!
உவர்ப்புதான்
உன்
கொள்கை
என்றாலும்
கடலே நீ
ஏழைகளின்
துயரக்கண்ணீரா
இல்லை
செல்வந்தர்களின்
ஆனந்தக்கண்ணீரா?!



**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## முகம் காட்ட வாராயோ

" உன் கோபம்
என்னை சிதறடித்து
அலையவிடுகிறது.... "

அது மெய் கோபம் இல்லை
பொய் கோபம் என்பதும்
எனக்கும் புரியும் .... "

இருந்தும் உன் முகம் பார்த்து
ரசிக்க இதுவும் ஒரு வழி
தானே கண்ணே ..."

அலை அலையாய் உன்
ஒய்யார நடை அசைந்தாடும்
பின்னல் கூட கதை
சொல்லும் ... "

உன் இதழ்கள் துடிப்பிற்கு
ஒரு கவிதை எழுதினேன் ..."

உன் இளமை துடிப்பு
பேரழகிற்கு தொடர் கதை
எழுதினேன் .... "

உன் நாணம் வெட்கம்
நளினம் சிந்தும் புன்னகை
சீறும் கண்கள் பார்க்க
பார்க்க திகட்டாத
புத்துணர்ச்சி ..."

நித்தம் உன் தரிசனம் கண்டு
என் மனம் சித்தம் கெட்டு
பித்தம் பெருகி அலையுதே..."

காரணம் என்ன நீ சொல்
என்னவளே கண்மணியே ..."
**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

## மனதில் மலர்ந்த கவிதைகள்

1.தாய் தமிழ் வணக்கம்
தாயே தமிழே
வணங்குகிறேன் முல்லை
அரும் தார்தெடுத்து
தங்க தமிழில் சொல்
பாமாலை பாடி
வணங்குகின்றேன் தாயே
தமிழே

உலகின் முதல் தோற்றமே
நீ தானே வளர்ந்து
அகிலத்தையும் ஆண்டாய்
அமிழ்தினும் இனிய
நற்றமிழே கரம் கூப்பி
வணங்கு கிறேன்

தன்னிகரில்லா
இணையில்லா
ஈடில்லாத முத்தமிழ் தமிழே
நீ என்றென்றும் இளமையாக
கன்னியாக இருக்கிறாய்

இலக்கணமும் இலக்கியமும்
நீயாக இருக்கிறாய் எழுத்து
சொல் பொருள் இலக்கணம்
இலக்கிய வளமும் உள்ளது



தாயே தமிழே
முத்தமிழே
இயல் இசை
நாடகம்
மூன்றும்,
உனக்கு
என்றென்றும்
அணிகலன்கள் தாயே கரம்
கூப்பி வணங்கு கிறேன்.
**பேராசிரியர் முனைவர்**
**வேலாயுதம் பெரியசாமி**

## ஏழ்மையின் எதிர்பார்ப்பு:

வாழ்க்கையிலே அமர்தற்குச் சிறிய வீடு
வயிறெரிக்கும் பசிதணிக்கக் கொஞ்சம் சோறு
தாழ்ந்திடாமல் மானத்தைக் காப்ப தற்குத்
தகுவுடலை மறைப்பதற்குக் கீழ்மேல் ஆடை
வீழ்ந்திடாமல் தலைநிமிர்ந்து நிற்ப தற்கு
விளங்குகின்ற அடிப்படையாம் இந்த மூன்றே
ஏழ்மையிலே தவிக்கின்ற மக்கள் எங்கள்
எதிர்பார்ப்பாம் இவைகிடைத்தால் வாழ்வோம் நாங்கள் !

பிச்சையாக இலவசங்கள் தேவை யில்லை
பிறக்கின்ற கருணையதும் தேவை யில்லை
முச்சந்தி தனில்நின்று கையை ஏந்தி
மூச்சுவிடும் வாழ்க்கையினை விரும்ப வில்லை
கச்சிதமாய் மதிப்பளித்துப் பணிகொ டுத்துக்
கரங்களிலே உழைப்பதற்கு வழியை செய்தால்
நிச்சயமாய் ஏழ்மையினை ஓட வைத்து
நிறைவாழ்வு வாழ்ந்திடுவோம் வாய்ப்ப ளிப்பீர் !

மாளிகையின் வசதிகளைக் கேட்க வில்லை
மகிழுந்து சொகுசுதனைக் கேட்க வில்லை
கேளிக்கைப் பொழுதுபோக்கைக் கேட்க வில்லை
கேள்விக்கு விடைதேடும் எங்க ளுக்கு
வாலியினை மறைந்திருந்து கொன்ற போல
வளங்களினை சுருட்டுகின்ற கரமி ருந்து
கூலிக்காய் உழைக்குமெங்கள் உழைப்பிற் கேற்ற
கூலிதந்தால் போதுமெங்கள் ஏக்கம் தீரும் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## கோதைகளை போற்று

கோதைகளை போற்று,
அவர்கள் எதிர்கால
தேவதைகள் ஆழியில்
பிறந்த அவர்கள் சோழி
குலுங்கியது போல
கலகலவென சிரித்தால்
அகிலமே மகிமை
பெறும்
உள்ளத்தில் கள்ளம்
இல்லாமல் நம்பிக்கை
மலர் பூத்து வாசம்
வீசும்
புதிய நாள்

ஒவ்வொன்றும் பிறக்க
கோதைகள் சாதனை செய்ய
காத்திருப்பர்
விண்ணும் மண்ணும் அவரை
வாழ்த்த அதுவே அவருக்கு
நல்ல தன்னம்பிக்கை
கொடுக்கும் என்பதால்
சோதனைகளை மாற்றி
சாதனை செய்வர்.
கோதைகளே
உங்களுக்குள்
இருக்கும் திறமைகளை
கண்டறிவீர் அகிலம்
புகழும் சாதனை புரிவீர்



**உஷா முத்துராமன்**

வாய்மை எனப்படுவது
யாதெனின்...

மண்ணுக்கும்
விண்ணுக்குமான
போட்டியில் மரங்களைத்
தொலைத்த அவலம்.

வயலுக்கும் வாழ்வுக்கும்,
நிழலுக்கும் போராட
எவருமில்லை இங்கு.

நகரமயமாதலில்
குடி'கள் விரிவடைகிறது
அரசுக்கோ வருமானம்
தாராளம். பசித்தீ யால்
பற்றி எரிகிறது
வயிறுகள்.

சமூக நீதி
காட்சிப்படுத்தப்படுகிறது.
நடைமுறையில்
மானுடம் தோற்றுப்
போகிறது.

கோயில்
பிரசாதங்களில் கூட
கலப்படம். சோதித்துப்
பார்த்தார்களா முதலாளிகள்.
கடவுளும் அவர்களை
தண்டிக்கவே இல்லை.

இறைச்சி ஏற்றுமதியில்
முன்னிலை வகிக்கும்
நாட்டில் ஆதிக்க சக்திகளின்
பின்னணியில் அப்பாவிகளை
தண்டிக்கும் கோழைகள்.

உலகுக்கு மட்டுமே
உபதேசம். உள்ளூரில்
ந(மெ)லிந்தோரைக்
கொல்லும் அவலம்.
வாய்மை எப்போது
தான் வெல்லும்?...
உண்மையும் அப்போது
சொல்லும் !...



**எறும்பூர் கை.**
**செல்வகுமார்,**
செய்யாறு.



நீ மெய் மறந்து
கீர்த்தனை பாடுகிறாய்
நான் எனை மறந்து
உனை காண்கிறேன்!

பாடத் தானே சொன்னேன்
ஏனடி தாலாட்டுகிறாய்!

அழகா இருக்கேனா என
கேட்கிறாய். அழகே அழகைப்
பற்றி கேட்கலாமா!

உன் மீது கிறக்கம்
எப்போது வந்ததோ
அன்றிலிருந்து போனது
உறக்கம்!

கொட்டிய
வார்த்தைகளை
அள்ள முடியுமா என்ன?
திட்டியவைகளை
எல்லாம் திரும்ப பெற
முடியுமா என்ன?

காயப்பட்ட இதயத்திற்கு–
உங்கள் போலியான
ஆறுதல்கள் தேவையில்லை.
நீங்கள் அரிச்சந்திரனாக,
உத்தமர்களாக இருந்து
விட்டு போங்கள்.
வேடம் தரிக்காத,சுயம்
தொலைக்காத ஒரு மானிட
பதராய் நானிருந்து விட்டு
போகிறேன்! என் தோல்வி
உங்களுக்கு புன்னகையை
வரவழைக்கலாம்.
வாதங்களை விரும்பாத–
உங்கள் செவிட்டு
காதுகளுக்கு என் நியாயம்
புரியப் போவதில்லை
நான்
குற்றவாளியாகவே
இருக்கிறேன். நீங்கள்
நீதிபதியாகவே இருந்து
சந்தோஷப்பட்டு
கொள்ளுங்கள்.



**லி.நௌஷாத் கான்**

# வாசகர் கடிதம்

மசோதா களை கிடப்பில் போட கவர்னருக்கு அதிகாரம் இல்லை என உச்ச நீதிமன்றம் அறிவிப்பு. பத்தாவது முறையாக நிதீஷ் குமார் முதல்வராக பதவியேற்பு. உணவே மருந்து கட்டுரை சிறந்த விழிப்புணர்வு கட்டுரையாக இருந்தது ஆளும் கட்சிக்கும் ஆண்ட கட்சிக்கும் பிரேமலதா சவால். முட்டை விலை திடீரென உயர்ந்துள்ளது. தமிழகத்தில் ஆறு நாட்களுக்கு கன மழை பெய்யும் என வானிலை மையம் அறிவிப்பு. அண்ணாமலையார் பற்றிய கட்டுரை தெரியாத பல விஷயங்களை அறிய முடிந்தது.

மலைப்பாதை ரயில்கள் பற்றிய கட்டுரை புதிதாக இருந்தது பாராட்டுத்தக்கது. திமுக ஆட்சியில் தொழில்துறை முன்னேற்றம் கண்டுள்ளது என டிஆர்பி ராஜா அறிக்கை. மசோதாக்கள் பற்றிய கோர்ட்டு உத்தரவுக்கு திமுக வரவேற்பு. அமெரிக்காவில் 88 லட்சம் கோடி முதலீடு செய்வதாக சவுதி அரேபியா அறிவிப்பு. சீனாவில் ஜப்பான் கடல் உணவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

காதல் கவிஞர் முத்து ஆனந்த அவர்கள் எழுதியுள்ள கவிதைகள் அனைத்தும் முத்துக்கள் போன்றது. கவிதையின் ஒவ்வொரு வரியும் மிகச் சிறந்த காதல் வரிகள். காதல் வலையில் சிக்காத நபர்களும் இவரது கவிதையை படித்தால் காதல் என்னும் சிறையில் மாட்டிக் கொள்வார்கள். பாராட்டுக்கள் சார்.

வழக்கம்போல தமிழ்நாடு இ பேப்பரின செய்திகள் அனைத்தும் தரமாக இருந்தது. அனைத்து அம்சங்களும் 20 பக்கங்களில் அடக்கி இருப்பது பாராட்டத்தக்கது. தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள் மீண்டும் நாளை சந்திப்போம்



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

கவர்னர்களுக்கு காலக் கெடு விதிக்கும் வரை ஓய மாட்டோம்#முதல்வர் ஸ்டாலின்
துபாய் ஏர் ஷோவில் தேஜாஸ் போர் விமானம் வெடித்துச் சிதறி விபத்து#விமானி உயிரிழப்பு=செல்வப் பெருந்தகை இரங்கல்
விஜய் மனதளவில் மிகவும் ாதிக்கப்பட்டுள்ளார்#சபாநாயகர் அப்பாவு
அமைச்சர் ஐ பெரியசாமி மகள் வீட்டில் ஜிஎஸ்டி நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் சோதனை
கட்சிகளின் ரோடு ஷோக்களுக்கான வழிகாட்டு விதிமுறைகள்#உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல்
விஜய் பிரச்சாரத்திற்கு அனுமதி மறுப்பு ஏன்#காவல்துறை விளக்கம்
மும்பை: தங்கத்தை வாடகைக்கு விடும் பணக்காரர்கள்
சென்னை: பெண் உதவியாளரிடம் அத்து மீறல்#ஓய்வு பெற்ற நீதிபதி மீது வழக்குப் பதிவு=வயதானாலும் காமம் குறைவதில்லை
சென்னை ராயப்பேட்டை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் தீ
சென்னையில் போதை விருந்து# கஞ்சா வழக்கில் சிம்பு பட இணை தயாரிப்பாளர் உட்பட மூவர் கைது
வாசகர் கடிதங்கள் அசத்தல்
நூல் விமர்சனம் வெகு சிறப்பு
புதுக் கவிதைகள் பிரமிப்பை உண்டாக்குகின்றன
பாரம்பரிய உணவுகளுடன் இன்று உணவுத் திருவிழா தொடக்கம்
இளைய ராஜா பெயர் புகைப்படம் வணிக நோக்கத்துடன் பயன்படுத்த இடைக்காலத் தடை
சென்னையில் இரண்டு மாதங்களுக்குள் வருகிறது டபுள் டெக்கர் பேருந்து
ஏடிஎம் வேனில் 7.11 கோடி கொள்ளை வழக்கில் குற்றவாளிகளை நெருங்கிய பெங்களூரு போலிசார்
மஹாராஷ்டிராவில் ஆன்லைன் பங்கு வர்த்தக மோசடி#6.44 கோடியை இழந்த 70 வயது முதியவர்
போலி வாட்சப் குழு ஆரம்பித்து பெண்கள் மீது அவதூறு பரப்பிய இருவர் கைது
உலகின் சிறந்த நகரங்களில் மும்பை, பெங்களூருக்கு இடம்
இந்தியாவில் 24.8 கோடி பேர் வறுமையிலிருந்து மீண்டனர்#யுனிசெஃப் அமைப்பு பாராட்டு
உலக குத்துச் சண்டை போட்டி#இந்திய வீராங்கனைகள் தங்க வேட்டை
நிலக்கரி மாஃபியா வழக்கு#மேற்கு வங்கம், ஜார்கண்டில் 40 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை
வங்க தேசத்தில் கலவரங்களை ஏற்படுத்த முந்தைய அமெரிக்க அரசு நிதி அளித்தது#ஷேக் ஹசீனா மகன் குற்றச்சாட்டு
824 கோடி மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல்
ஒரே இரவில் 470 டிரோன், 48 ஏவுகணைகளை வீசி உக்ரைன் மீதான ரஷியா தாக்குதலில் 9 பேர் உயிரிழப்பு#ஜெலன்ஸ்கி கண்டனம்



-பி.சுரேகா
சென்னை

ஆனந்த பாஸ்கர் நாளிதழில் நெல்லை தி.வள்ளி எழுதிய " கடவுள் நேரில் வந்தால்" பதின்ம வயதில் படித்த " நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர்" என்ற பாடலையும் சாந்தி நிலையம் படத்தில் இடம் பெற்ற " கடவுள் ஒரு நாள் உலகைக் காணத் தனியே வந்தாராம், கண்ணில் கண்ட மனிதரை எல்லாம் நலமா?" என்றாராம் பாடலையும் நினைவூட்டியது.

புதுக்கவிதைகள் பகுதியில் கவிஞர் அனந்தராமன் எழுதிய , " ஆகாயத்தில் உருண்டை வெல்லத்தை யார் வைத்தது நட்சத்திர எறும்புகள்கொஞ்சம் கொஞ்சமாய் தின்றுத் தீர்த்த மீதியைத்தான் பிறைமதி என்கிறீர்களோ? எனும் வரிகளை ரசித்தேன்.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம். 22.11.25 அன்று தமிழ் நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் கவர்னர் அவர்களுக்கு காலக்கெடு நிர்ணயிக்கும் வரை நாங்கள் ஓய மாட்டோம் என்று முதல்வர் ஸ்டாலின் அவர்களின் சூளுரையை படித்ததும் அரசியல் நன்றாக புரிந்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக அமைய எனக்கு உதவியது பாராட்டுக்கள். கும்பகோணத்தில் உள்ள ஆதி கும்பேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் நம் பாரத தேசிய கொடி வண்ண மின் விளக்கு அலங்காரத்தை பார்க்கும் போது உடலும் உள்ளமும் சிலிர்த்தது. மிக அற்புதமான புகைப்படம் பாராட்டுக்கள். இன்றைய திருக்குறளை படித்து மகிழ்ந்தேன் பாராட்டுக்கள். காய்கறி உடல்நலத்தை காக்கும் அந்த காய்கறியில் பிஞ்சு காய்களை சாப்பிடுவதால் என்ன பலன்கள் இரும்பு சத்துக்களை தடுக்கும் உணவுகள் என்று நலம் தரும் மருத்துவம் பகுதியில் நல்ல நல்ல தகவல்களைப் படித்தது வெல்லமென இனித்து என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. பாராட்டுக்கள். நடிகர் விஜய் அவர்களின் தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுமதி மறுப்பு ஏன் என்ற காவல்துறையின் விளக்கம் படித்து அரசியல் நன்றாக புரிந்தது பாராட்டுக்கள். தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று என். சங்கர் ஐயா அவர்களின் வரலாறும் அவரின் வெற்றி போன்ற கை தூக்கிய புகைப்படமும் மிகவும் அற்புதமான மகிழ்வை தந்தது பாராட்டுக்கள். பல்சுவை களஞ்சியம் பகுதி படுஜோர். காதலின் இலக்கணம் அன்றில் பறவை பற்றிய செய்தி புதுமையாக இருந்தது 50 வயதை கடந்து 60 நோக்கி செல்பவர்களுக்கான நல்ல அறிவுரையை சொன்னது பாராட்டுக்குரியது. வாழ்வு தரும் ஆரோக்கியம் பகுதியில் வந்த மனம் ஏன் சஞ்சலப்படுகிறது என்ற கேள்வியைக் குறித்து அற்புதமான தகவலை சொன்னவுடன் மனதில் இருந்த சஞ்சலம் எல்லாம் ஓடி மறைந்தது. மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சி என்று அந்த படங்களை எல்லாம் பார்க்கும் போது உண்மையிலேயே நல்ல அருமையான செய்திகளாக மிக அற்புதமான செய்திகளாக ஆர்வமுடன் படிக்கத் தோன்றியது. சுற்றுலா செல்லும் போது மிகவும் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என்று சுற்றுலா பக்கத்தில் வந்த இந்தியாவில் மிகவும் ஆபத்தான சுற்றுலா தளங்கள் என்று பட்டியலிட்டது மிகவும் அருமை. இது ஒரு நல்ல விழிப்புணர்வு தகவல். குற்றால அருவியில் சீரான நீர்வரத்து அதனால் சுற்றுலா பயணிகள் அனைவரும் குளிக்க அனுமதி என்ற செய்தி மகிழ்ச்சியாக இருந்தது. விளையாட்டுப் பகுதியில் வந்த அனைத்து தகவல்களும் விளையாட்டினை பற்றி நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது. நேபாள நாட்டில் மீண்டும் போராட்டம். இதனால் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது பற்றி படித்தது அயல்நாட்டு செய்தியாக ஆர்வமுடன் படிக்க வைத்தது.
சுற்றுலாப் பயணிகளால் சீன கோவில் தீயில் சாம்பல் என்ற செய்தி வேதனையாக இருந்தது. நல்ல தகவல்களை ஞாயிற்றுக்கிழமை விடியலில் கொடுத்து உற்சாக விடியலாக சுறுசுறுப்பு விடியலாக அமைய உதவிய தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்













LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com

PRODUCT PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்
3 காலண்டர் 100 ரூபாய்
அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889

WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756

தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency MLM Software Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website www.mlmperfect.com
Call US 9853719337,7436914247

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

WANTED
STORE HELPER
Boys only
Fresher / Experience
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in

CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

PADMA MEDIA HOUSE
Best Newspaper Advertising Agency
Matrimonial | Property
Recruitment | Business
Announcements | Obituary
Public Notices | Education
CONTACT : +91 81227 98599

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

PADMA MEDIA HOUSE
BOOK NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!
Whatsapp 81228 36299

WORK FROM HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009




WANTED
We are Looking For
BUSINESS PARTNERS
(MALE / FEMALE)
in Coimbatore
Real Estate Marketing
Call
98945 72840

Call- 9438610756, 9337501889
News Portal Website Development

Only
Rs. 499/-
Just 499
www.just499.com

ஆட்கள் தேவை
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் அசெம்பிளி டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் ட்ரெயிள் சூட்டிங் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் குவாலிட்டி இன்ஸ்பெக்டர்ஸ்
- எலிவேட்டர் சேஃப்டி ஆபிசர்ஸ்
- எலிவேட்டர் NPD டெக்னீசியன்ஸ்
- கிரிம்பிங் டெக்னீசியன்ஸ்
- சோல்டரிங் டெக்னீசியன்ஸ்
- HINDI SPEAKING DATA ENTRY FRESHER WITH MS-OFFICE KNOWLEDGE
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் காண்ட்ராக்ட்டர்ஸ்

Candidates with Elevator field Experience & Knowledge are Welcome
jeeva.v@eliteelevators.com
Cell: 8925998689
Elite Elevators

MACHINE REPAIR TECHNICIAN WANTED
Construction Company in CALICUT, Kerala requires Technicians for Bar Bending and Bar Cutting Machine, Mini Lift, Mixer Machine repairing with proven experience in repairing construction machinery.
GOOD SALARY
Accommodation Available
85938 12049

Make Money Without Investment Through Mobile

Just 20 min/per day
Any Time
Earn upto Rs. 1000/per mobile
Call : 9337501889

மகேந்திரா வேர்ல்ட் சிட்டி அருகில்
விகாஸ் மந்திரா பள்ளி அருத்து
DTCP & RERA அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்
1200 - 2400 சதுர அடி
அனுக்ரஹா
தொடர்புக்கு: 90477 34343

ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள கம்பெனிக்கு 50 Staff தங்குவதற்கு Building வாடகைக்கு தேவை
97899 85835 / 79046 02553

LAND FOR SALE
COIMBATORE PEELAMEDU GV RESIDENCY 4.25 cents,
RAMANATHAPURAM KRISHNA COLONY 5.50 and 8 and 11Cents
RAMANATHAPURAM NEAR JUNCTION 1.10Acre & 4Acre
Broker Excuse
Contact: R.Sasikumar
81242 63136

New House for Sale
@ EB Colony, Veerapandi Pirivu
2BHK House
2.7 cent - North Facing
1000 sq.ft
9751041250

வள்ளியூர் NH அருகில்
வீட்டுமனை 5 சென்ட் ரூ. 2 லட்சம்
வீட்டுமனை 4 சென்ட் ரூ. 4 லட்சம்
வள்ளியூர் பூங்கா நகர்
5 சென்ட் ரூ.45 லட்சம்
9940 20 7778

OMR GOLDEN CITY ALERT!
THIRUPORUR
Sold Out in 2019 - Limited Resale Plots Now Open!
Starts : Rs.13 Lacs
90% Bank Loan
Call: 9962 888 888

Commercial Building for Rent
THIRUNINDRAVUR
Main Road 3000Sft, 2nd Floor Suit for Gym Etc.
REDHILLS - ORR
Main Road 2500Sft, Ground Floor (Via Redhills to Thiruvallur) Suits for Showroom, Restaurant.
98412 38854

கட்டிடம் விற்பனைக்கு
பொள்ளாச்சி நகரில் பிரபல இன்ஜியரிங் கல்லூரி அருகில் 13 அறைகளுடன் (ALL BATH ATTACHED) கூடிய புதிய கட்டிடம் விற்பனைக்கு
மாத வாடகை வருமானம் ரூ.50,000
CONTACT
98420 14702

குடோன் வாடகைக்கு
நீலாம்பூர் கதிர் காலேஜ் ரோட்டில்
500,1000,1600, 2600 சதுரடி (EB 50HP)
குடோன் வாடகைக்கு
98941 09560

2 BHK FIRST FLOOR FOR RENT
DVD COLONY, KOTTAR
MARBLE FLOOR
24 HOUR WATER
9840741033

ADVERTISE WITH US

CONTACT US
9438610756

JOB VACANCY
- Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
- Lab Technician
- AC Technician
- Accountant
- Reception - Billing
- House Keeping
- Ward Boy

AMRIT MEDICAL CENTRE
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
Call : +91 7695957120
calling time 11.00 am to 5 pm


ஆட்கள் தேவை
திருவள்ளூர் மாவட்டம் தண்ணீர்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ட்சுரல் ஸ்டீல் தொழிற்சாலைக்கு PEB / கன்வென்ஷனல் ஃபேப்ரிகேஷன், நன்கு வேலை தெரிந்த ஆட்கள் தேவை.
1. ஒப்பந்ததாரர்கள் (CONTRACTORS)
2. வெல்டர்ஸ் மற்றும் கேஸ்கட்டர்ஸ்
3. கிரேன் ஆப்ரேட்டர்கள்
தங்குமிடம் ESI / PF வசதிகள் உள்ளன.
Ct: 93800 72095 / 98416 46097

WANTED EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

அன்ஜுமன் இ-ஹிமாயத்-இ-இஸ்லாம்
ஆட்கள் தேவை
துப்புரவு பணியாளர்
தோட்டக்காரர், தச்சர்
சமையல்காரர்
உதவி சமையல்காரர்
சமையலறை உதவியாளர்
ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் நேரில் அணுகவும். 15, 16 & 17.09.2025
காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை
16, பி.என்.ரெட்டி சாலை, தி.நகர், சென்னை - 17.
E-Mail : hr@anjhimayath.com



# பல்சுவை களஞ்சியம்




## பசுவுக்கும் எருமைக்கும் உள்ள வித்தியாசம்

பசும் பாலுக்கும் எருமைப்பாலுக்கும் உள்ள வித்தியாசம் நம்மில் பலருக்குப் புரியாது...

பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது.

எருமை சேற்றை விரும்புகிறது.

பசு தன் சாணத்தில் கூட உட்காருவதில்லை. பசு தூய்மையை விரும்புகிறது.

எருமையை 2கிமீ தூரம் ஒரு புதிய இடத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டால். வீடு திரும்பாது. நினைவு ஆற்றல் அவ்வளவுதான்.

நாம் ஒரு மாட்டை 5 கி.மீ. தொலைவில் விட்டால் அது வீட்டிற்குத் திரும்பும்.
பசும்பாலுக்கு நினைவாற்றல் சக்தி உண்டு.

பத்து எருமை மாடுகளை கட்டி வைத்து விட்டு அதன் குட்டிகளை விட்டு சென்றால் ஒரு குட்டி கூட தன் தாயை அடையாளம் கண்டு கொள்ளாது.

ஆனால் பசுவின் கன்று, சில நூறு மாடுகளுக்கு நடுவே தன் தாயை அடையாளம் காணும்.

பாலை கறக்கும் போது எருமை தன் பால் முழுவதையும் கொடுக்கிறது.

பசு தன் கன்றுகுட்டிக்காக சிறிது பாலை மறைக்கிறது. குட்டி குடிக்கும் போது தான் சேமித்து வைத்த பாலை வெளியிடுகிறது.

பசுவின் பால் மென்மைத்தன்மை கொண்டது.

எருமையால் வெயிலையோ, வெப்பத்தையோ தாங்க முடியாது.





பசு மே-ஜூன் சூரியனையும் தாங்கும்.

எருமை பெரியது மற்றும் சோம்பேறி மற்றும் விரைவாக உரக்க கத்துவதில்லை.
இதன் பால் கெட்டியானது மற்றும் ஜீரணிக்க கடினமாக உள்ளது.
அதன் பாலை நாம் உட்கொள்ளும்போது அதே சோம்பல் மற்றும் அஜீரணம் ஏற்படுகிறது.
பால் கறக்கும் நேரத்தில் உரிமையாளரால் கன்று வளர்க்கப்படுகிறது.

தாயிடமிருந்து கன்று பிரிந்தால் அதைக் கையாள்வது மிகவும் கடினம். பால் கறக்கும் நேரத்தில் கன்றுக்குட்டியை கட்டுப்படுத்த முடியாது, அது தன் பங்கு பாலை தாயிடம் இருந்து குடித்து முடித்த பிறகும் அந்த அக்கறையும் மென்மையும் அதன் பாலில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
.பசுவின் முதுகில் இருக்கும் "சூரியன் கேது நரம்பு" வெயில் இருக்கும் போது விழித்துக் கொள்ளும். இந்த நரம்பு சூரியன், நட்சத்திரங்கள், சந்திரன் மற்றும் பிரபஞ்சத்திலிருந்து "காஸ்மிக் சக்தியை" உறிஞ்சுகிறது.
அதனால் நோய்களை நீக்கும் சக்தி பசும்பாலுக்கு உண்டு. பிரபஞ்சத்தில் உள்ள எந்த உயிரினத்திற்கும் அத்தகைய சக்தி இல்லை.

உண்மையில், பசுவின் பால் உட்கொள்ளும் போது உங்கள் உடலை சூடாக்காது. எருமைப்பால் அடர்த்தியானது, உட்கொள்ளும் போது உடல் சூடாகிறது, மேலும் நமது உடலிலும் சர்க்கரை அதிகரிக்கிறது (ஜெர்சிமாட்டு பாலில் அதிகமாக உள்ளது) சர்க்கரை நோயாளிகளுக்கு இது நல்லதல்ல.

ஆனால் பசுவின் பால் உட்கொள்ளும் போது அதற்கு நேர்மாறாக இருக்கும்.

எல்லாவற்றிலும் கொழுப்பைப் பார்க்கிறோம். சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் கொலஸ்ட்ராலை உண்டாக்குவதில்லை, என்ற விளம்பரத்தின் ஆலோசனையை நம்பி பின்பற்றுகிறோம் அந்த எண்ணெயைப் பயன்படுத்துகிறோம் .ஆனால் உண்மை என்னவென்றால், எருமைப்பாலில் அதிக கொழுப்பு உள்ளது, இது கொலஸ்ட்ராலுக்கும் (கொழுப்பு உள்ளடக்கம்) காரணமாகும்.

எருமைப் பாலை அடுப்பில் வைத்து சிறிது சூடாக்கும் போது அதில் உள்ள 3/4 சத்து ஆவியாகிவிடும்.

பசும்பாலை எத்தனை முறை காய்ச்சி குடித்தாலும் அதில் உள்ள ஊட்டச்சத்து குணங்கள் அழியாது.

லால்குடி
**வெ நாராயணன்**

## உப்பு கடலை சாப்பிடுவதால் இவ்வளவு நன்மைகளா?

உப்புக் கடலை சாப்பிடுவதால் குறிப்பாக, இநில் நார்ச்சத்து, இரும்புச்சத்து, கால்சியம், மக்னீசியம் போன்ற அத்தியாவசிய சத்துக்களின் ஒரு நல்ல ஆதாரமாக உள்ளது. மேலும், இரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்கவும், மலச்சிக்கல் பிரச்சனைக்கு தீர்வு காணவும் உதவுகிறது.

**உப்பு கடலையின் நன்மைகள்:**

இரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது:
உப்பு கடலை இன்சுலினை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்க உதவுகிறது. சர்க்கரை நோயாளிகள் தினமும் ஒரு கைப்பிடி அளவு உப்பு கடலை சாப்பிடலாம்.

**மலச்சிக்கலுக்கு தீர்வு:**
நார்ச்சத்துக்கள் நிறைந்த உப்புக்கடலை செரிமானத்தை மேம்படுத்துவதோடு மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகளில் இருந்து விடுபடவும் உதவுகிறது.



**எலும்புகள் வலிமையடையும்:**
உப்பு கடலையில் கால்சியம் மற்றும் மக்னீசியம் உள்ளது, இது எலும்புகளை வலிமையடைய உதவுகிறது.

**இரத்த சோகைக்கு தீர்வு:**
உப்பு கடலையில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது, இது இரத்த சோகை பிரச்சனையால் அவதிப்படுபவர்களுக்கு ஒரு நல்ல தீர்வாகும்.

**கலோரி குறைவாக, நார்ச்சத்து நிறைவாக:**
உப்பு கடலையில் கலோரி குறைவாகவும் நார்ச்சத்து நிறைவாகவும் உள்ளது, இது ஒரு ஆரோக்கியமான சிற்றுண்டியாக அமைகிறது.

**குறைந்த கிளைசெமிக் குறியீடு:**
உப்புக்கடலையின் கிளைசெமிக் குறியீடு 28 மட்டுமே, இது நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற ஒரு சிறந்த சிற்றுண்டியாக அமைகிறது.
தேவையான அளவில் தினசரி உப்புக்கடலை சாப்பிடுங்கள்!

கோவில்பட்டி
செய்தியாளர்
**கோ.சுரேஷ்குமார்.**

# மீம்ஸ்








# விடுகதை



| | |
|---|---|
| ஒருத்தன் வேலை பார்த்துகிட்டே இருந்தானாம் அவனுக்கு செம்ம பசியும் அவன் கிட்ட இருந்த மொபைல்ல சாப்பிடனும் ஏன்? | அவன்கிட்ட இருந்தது ஆப்பிள் மொபைல் ஆம். |
| ஹோட்டல் போயிட்டு இட்லிய பார்த்து பயந்து ஓடினான் ஏன்? | ஏன்னா இட்லில இருந்து ஆவியா வந்துச்சாம். |
| பொண்ணு பாக்க வந்த மாப்பிள்ளை ஒருத்தர் விழுந்து விழுந்து சிரிச்சுக்கிட்டே இருக்கிறாராம் ஏன்? | துன்பம் வரும் வேலையில சிரிங்கணும் பெரியவங்க சொல்லி இருக்காங்களாம். |
| பட்டுப்பூச்சியில் இருந்து எதை எடுக்குறாங்க? | உயிரே எடுக்குறாங்க |
| எறும்புக்கும் கரும்புக்கும் என்ன வித்தியாசம்? | நாம கரும்புக்கு கடிக்கிறோம் எறும்பு நம்மள கடிக்குது. |

# ஜோக்ஸ்



"ஏன் டாக்டர், ஒருத்தருக்கு பைத்தியம் குணமாயிடுச்சான்னு எப்படிக் கண்டு பிடிப்பீங்க?" என்று கேட்டேன்.

"சின்னச் சின்ன டெஸ்ட் இருக்கு அதுக்கு" என்றார்.



"ஃபார் எக்ஸாம்ப்பிள்?"

"ஒரு பக்கெட் நிறைய தண்ணி வச்சிட்டு பக்கத்துல ஒரு ஸ்பூன், ஒரு மக் ரெண்டும் வச்சிடுவோம்.

போய் அந்த பக்கெட் தண்ணியை காலி பண்ணுன்னு சொல்வோம்"

"ஓ.. புரியுது.

குணமாகாத ஆளா இருந்தா ஸ்பூன்ல தண்ணியை எடுத்து எடுத்து வெளில ஊத்தி காலி பண்ணிகிட்டு இருப்பான், சரியா?"

"எக்ஸாட்லி. உங்க கிட்ட சொன்னா நீங்க என்ன பண்ணுவீங்க?"

"நான் மக்குல எடுத்து மள மளன்னு காலி பண்ணுவேன்"

"இது மாதிரி கேஸ்களை நாங்க செமின்னு சொல்வோம்"

"என்ன டாக்டர் இப்படிச் சொல்லிட்டீங்க! அப்ப குணமானவன் என்ன பண்ணுவான்?"

"பக்கெட்டை எடுத்துக் கவுத்துட்டுப் போய்கிட்டே இருப்பான்"



# ஜோதிடம் அறிவோம்



## நட்சத்திரமும், குணநலன்களும்

### பூரட்டாதி

பூரட்டாதி நட்சத்திரத்தின் ராசி : கும்பம் மற்றும் மீனம்
பூரட்டாதி நட்சத்திரத்தின் அதிபதி : குரு
பூரட்டாதி நட்சத்திரம் ஒன்று, இரண்டு, மூன்றாம் பாத ராசி அதிபதி (கும்பம்) : சனி
பூரட்டாதி நட்சத்திரம் நான்காம் பாத ராசி அதிபதி (மீனம்) : குரு



நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :
மனதில் எதையாவது சிந்தித்து கொண்டே இருக்கக்கூடியவர்கள்.
முன்கோபம் கொண்டவர்கள்.
மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற மனநிலையை கொண்டவர்கள்.
பிரச்சனைகளுக்கு எளிதில் முடிவு அளிக்கக்கூடியவர்கள்.
எதையும் நிதானமாக சிந்தித்து முடிவெடுத்து செயல்படக்கூடியவர்கள்.
உணர்வு மற்றும் உணர்ச்சிகளை அடக்கி ஆளக்கூடியவர்கள்.
தனது வேலைகளில் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடியவர்கள்.
கருணை உள்ளம் கொண்டவர்கள்.
வாக்குச் சாதுர்யம் உடையவர்கள்.
நல்ல பழக்க வழக்கங்களை கொண்டிருக்கக்கூடியவர்கள்.
பெற்றோர்களின் மீது அதிக அன்பு உடையவர்கள்.
மற்றவர்கள் பேச்சுக்கு மதிப்பளிக்கக்கூடியவர்கள்.
பிரபலமானவர்களின் தொடர்புகளை கொண்டவர்கள்.
பல விஷயங்களை அறிந்தாலும் எதுவும் தெரியாதது போல் இருக்கக்கூடியவர்கள்.
தன்னை பற்றி யாரும் குறை சொல்வதை விரும்பாதவர்கள்.
மற்றவர்கள் மனம் கோணாத படி நடந்து கொள்ளக்கூடியவர்கள்.
தவறென்று அறியும் பட்சத்தில் அதை தைரியமாக எதிர்த்து பேசும் தன்மை கொண்டவர்கள்.

### உத்திரட்டாதி

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் ராசி : மீனம்
உத்திரட்டாதி நட்சத்திரத்தின் அதிபதி : சனி
உத்திரட்டாதி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : குரு
நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :
எதிலும் விவேகத்துடன் செயல்படக்கூடியவர்கள்.
எந்த சூழ்நிலையையும் சமாளிக்கக்கூடிய மனவலிமை கொண்டவர்கள்.
வாழ்க்கையில் உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.



கோபமான பேச்சுக்களை கொண்டவர்கள்.
பிடிவாத குணம் கொண்டவர்கள்.
மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல் உதவி செய்யக்கூடியவர்கள்.
நிலையில்லாத மனநிலையை உடையவர்கள்.
மற்றவர்களுக்கு உதவுவதில் முழு ஈடுபாடுடன் செயல்படக்கூடியவர்கள்.
வெளியூர் தொடர்பான பயணங்களில் ஆர்வம் கொண்டவர்கள்.
அமைதியாக காட்சி அளிக்கக்கூடியவர்கள்.
உடல் பலம் கொண்டவர்கள்.
துரிதமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.
எந்தவொரு சூழ்நிலையிலும் நடுநிலை தவறாமல் செயல்படக்கூடியவர்கள்.
எந்தவொரு விஷயத்தையும் ஒன்றுக்கு பலமுறை சிந்தித்து முடிவு எடுக்கக்கூடியவர்கள்.
புதிது புதிதாக எதையாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.
கொடுத்த வாக்கை எந்த நிலையிலும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.


### ரேவதி

ரேவதி நட்சத்திரத்தின் ராசி : மீனம்
ரேவதி நட்சத்திரத்தின் அதிபதி புதன்
ரேவதி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : குரு
நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :
பயணம் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.



சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் தங்களை மாற்றிக் கொள்வதில் வல்லவர்கள்.
மற்றவர்களை கவரும் உடல் அமைப்பு கொண்டவர்கள்.
அடிக்கடி மாறும் மனநிலையை கொண்டவர்கள்.
சாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.
பேச்சாற்றல் கொண்டவர்களாக இருப்பார்கள்.
தர்ம வழியில் செயல்பட விரும்பக்கூடியவர்கள்.
சிக்கனமாக செயல்படும் குணம் கொண்டவர்கள்.
உடல் பலம் உடையவர்கள்.
எந்தவொரு செயலையும் சீர்தூக்கி முடிவு எடுக்கும் நீதிமான்களாக இருப்பார்கள்.
முன்கோபம் கொண்டவர்களாக இருக்கக்கூடியவர்கள்.
எதிலும் சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.
எந்த துறையாக இருந்தாலும் அதில் நிபுணத்துவம் கொண்டவராக இருக்கக்கூடியவர்கள்.
மற்ற உயிரினங்களின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.
உடனிருப்பவர்களை பற்றி புரிந்து கொண்டு செயல்படக்கூடியவர்கள்.

## ராகு-கேது தோஷம் நீக்கும் திருவையாறு ஐயாறப்பர்



தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு ஐயாறப்பர் கோயிலில் ஈசன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். தேவாரப் பாடல் பெற்ற 274 சிவன் கோயில்களில் இது 51-வது தேவாரத் தலம் ஆகும். அம்மனின் 51 சக்தி பீடங்களில் இது தர்ம சக்தி பீடம் ஆகும். சப்தஸ்தான தலங்களில் ஒன்று.

சிலாது முனிவரின் மகனாக அவதரித்தவர் நந்திகேசர். பிறக்கும்போது 4 கைகளுடன் பிறந்தார். குழந்தையை ஒரு பெட்டியில் வைத்துவிட்டு, சிலாது முனிவர் அப்பெட்டியை மூடித் திறந்தார். உடனே இரண்டு கைகள் நீங்கி, வழக்கமான குழந்தையாக விளங்கியது. குழந்தையை திருவையாறு தலத்தில் விட்டுவிட்டு சென்றார் முனிவர்.

## சனி தோஷம் நீக்கும் பச்சைபெருமாள்நல்லூர் விஷ்ணுவல்லபேஸ்வரர்

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே உள்ள பச்சைபெருமாள் நல்லூர் மங்களாம்பிகை சமேத விஷ்ணுவல்லபேஸ்வரர் கோயில் சனிதோஷம் நீக்கும் பரிகாரத் தலமாக விளங்குகிறது. பரமேஸ்வரன் திருநாமத்துடன் விஷ்ணுவின் திருநாமமும் சேர்ந்துள்ளதால், இத்தலம் பெரிதும் போற்றப்படுகிறது.

மகாவிஷ்ணு சிவ தத்துவங்களை அறிந்து கொள்வதற்காக, சிவலிங்கத்தை பூஜை செய்து தவம் இருக்க எண்ணினார்.

அதற்கு தகுந்த இடத்தை தேடிக் கொண்டிருந்தபோது, இந்த ஊரைத் தேர்ந்தெடுத்து வில்வ மரத்தடியில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, பூஜைகள் நடத்தி, தவம் இருந்தார்.



பரமேஸ்வரன் குருரூபமாக வந்து மகாவிஷ்ணுவுக்கு சிவ தத்துவங்களை எடுத்துரைத்தார். இதனாலேயே இவ்வூருக்கு பச்சை பெருமாள்நல்லூர் என்று பெயர் கிட்டியதாக கூறப்படுகிறது.

## வாழும் காலத்தில் சௌகரியமாக வாழ



கங்கை, யமுனை, பண்டைய சரஸ்வதி சங்கமத்தில் ஸ்நானம் செய்பவர் எப்பொழுதும் அழியாதவராக இருக்க வேண்டும் என்று இந்திர பகவானிடம் பிரார்த்தனையும் உள்ளது. இந்தச் சங்கமத்தில் குளித்தால், கடந்த கால, நிகழ்கால, அறியப்படாத பாவங்கள் அனைத்தும் கழுவப்படும் என்றும் மத்ஸ்ய புராணம் கூறுகிறது. இது வேறு எந்த புனித நீராட்டத்தையும் விட லட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திரிவேணி மிகவும் தெய்விகமானது. அந்த தெய்விகத் தருணத்துக்காக, தேவர்கள் கூட காத்திருக்கிறார்கள். எனவே இது "முக்தி ஜனனி' என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது எண்ணற்ற யக்ஞங்களைவிட அதிக புண்ணியத்தை ஏற்படுத்துவதால், இந்த இடம் "பிரயாக்' என்று அழைக்கப்படுகிறது.

சமீபத்தில் காஞ்சி காமகோடி பீடத்தின் சங்கராசாரியருடன் இணைந்து பிரயாக் கும்பமேளாவுக்கு நான் சென்றது ஒரு புதிய அனுபவம். கங்கா ஸ்துதி, கங்கா தசஹர ஸ்தோத்திரம், காசி பஞ்சகம், கங்காவதாரணம் (ராமாயணம் & பாகவதம் போன்றது), திரிவேணி மஹாத்மியம், பிரயாகா க்ஷேத்ர மஹாத்ம்யம் மற்றும் யமுனாஷ்டகம் போன்றவற்றை சங்கராசாரியர் ஒரு பக்தரை போன்று பாடியது பரவசம் அளித்தது. இதற்கு முன் இவற்றின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கினார். இந்த ஞான குரு உலக நலம், பாரதத்தின் நீடித்த செழுமைக்காக ஒரு சங்கல்பத்தை மேற்கொண்டு பின்னர் புனித நீராடல் செய்தார்.

கடவுளுக்கும் வேத பண்டிதர்களுக்கும் விசேஷமான காணிக்கைகளைத் தொடர்ந்து, மாகங்கா பூஜையின் சடங்கு முறை பார்ப்பதற்கு ஒரு தெய்விக நிகழ்வாக இருந்தது. திரும்பிச் செல்லும்போது, புனிதமான, அழியாத அத்தி மரமான "அக்ஷயவடம்' தரிசனத்தை ஒருவர் தவறவிட முடியாது. காஞ்சி மடத்தின் மற்றொரு சுவாரஸ்யமான பரிமாணம், "சங்கர விமான மண்டபம்' ஆகும். இது தென்னிந்திய பாணியில் காஞ்சி மடத்தால் கட்டப்பட்ட நான்கு மாடி கோயில். இது கண்காணிப்பு, கூட்ட மேலாண்மைக்காக திரிவேணி சங்கமத்தின் கண்காணிப்பு மையமாகவும் செயல்படுகிறது.

தொடக்கத்திலிருந்து இறுதி வரை இறக்குமதி செய்யப்பட்ட வாழ்க்கை முறைகளை அல்லாமல், அதன் சொந்த பலங்களை நம்பும் ஒரு கலாசார ரீதியான, வளமான சமூகத்தின் நங்கூரங்களைப் பிரதிபலிக்கிறது. பிரயாகையின் விமான நிலையம், ரயில் நிலையம், சாலைகள், குறுக்கு சந்துகள் தெய்விகத் தன்மையுடன் பிரகாசித்தன. வாழ்க்கையின் அனைத்துத் தரப்பு மக்களும் தன்னியல்பாக திரண்டு வந்தது, பிரயாக் கும்பமேளாவை, உலக அளவில் பாரதத்தின் நாகரிகக் கண்காட்சியாக மாற்றியது.

## சகல தோஷங்களையும் போக்கும் '108 சிவாலயம்





ராமலிங்கேஸ்வரர்



பர்வதவர்த்தினி

தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் அமைந்துள்ளது, '108 சிவாலயம்' என அழைக்கப்படும் ராமலிங்க சுவாமி திருக்கோவில். இந்தக் கோவில் 'கீழை ராமேஸ்வரம்' என்று அழைக்கப்படுகிறது. ராமபிரான் சீதாப்பிராட்டியுடனும், லட்சுமணனுடனும் இத்தலத்திற்கு வந்ததாகவும், இங்கு தன் தோஷம் நீங்க 108 சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வழிபட்டதாகவும் தல வரலாறு கூறுகிறது. எனவே, இத்திருக்கோவில் மூலவர் 'ராமலிங்க சுவாமி' என்றும், அம்பாள் 'பர்வதவர்த்தனி' என்றும் அழைக்கப்படுகின்றனர். மேற்கு நோக்கிய கோவில்களில் வேண்டுதல் வைத்தால் உடனே நிறைவேறும் என்பது நம்பிக்கை. இத்தலம் மேற்கு நோக்கிய தலம் ஆகும். இத்தலத்தில் உள்ள 108 லிங்கங்களும் மேற்கு நோக்கியே அமைந்துள்ளன. இக்கோவிலில் தரிசனம் செய்தால் 108 சிவன் கோவில்களைத் தரிசித்த புண்ணியம் கிடைக்கும்.

### தல புராணம்

பறவைகள் முதல் அனைத்து உயிர்களுக்கும் நாம் துன்பம் செய்யும்போது நமக்கு அவைகளின் சாபம் வந்து சேர்கிறது. நாம் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து விலகும்போது நமக்கு தோஷம் ஏற்படுகிறது. உதாரணமாக பித்ரு காரியம் போன்றவைகளை உரிய காலங்களில் முறைப்படி செய்யாவிட்டால் தோஷம் ஏற்படுகின்றது. நாம் அன்றாடம் செய்யும் செயல்களிலிருந்தும் பல்வேறு விதமான பாவங்கள் நமக்கு ஏற்பட்டு, பல பிறவிகளாக நம்மைத் தொடர்கின்றன. இத்தகைய சாப, தோஷ பாவங்களை நீக்கும் தலமாக பாபநாசம் 108 சிவாலயம் விளங்கி வருகிறது. தென்னகத்தில் மிகப் பெரிய (6 அடி உயரம்) சூரிய பகவான் சிலையும் கோவிலின் கிழக்குப்புறத்தில் அமைந்துள்ளது. கோவில் முகப்பில் சூரிய தீர்த்தம் உள்ளது.

ராம - ராவண யுத்தத்தில் பலரைக் கொல்ல நேர்ந்ததால் ராமபிரானுக்கு தோஷம் ஏற்பட்டது. தோஷம் நீங்க ராமேஸ்வரத்தில் பூஜை செய்தபின் ராமபிரான் கீழ்த்திசை நோக்கி சீதா தேவியுடனும் லட்சுமணனுடனும் வந்தார். அப்போது குடமுருட்டி ஆற்றின் கரையில் மரங்கள் அடர்ந்த ஒரு சோலையைக் கண்டார். அங்குள்ள ஒரு உயர்ந்த வில்வ மரத்தடியில் ராமபிரான் அமர்ந்தபோது தன்னை இன்னும் ஏதோ ஒரு தோஷம் தொடர்வதையும், அதனால் தனக்கு நிம்மதியின்மை ஏற்படுவதையும் உணர்ந்தார்.

கர, தூஷன் என்னும் அரக்கர்களைக் கொன்ற தோஷம் ராமேஸ்வரத்தில் பூஜை செய்த பின்பும் தன்னைத் தொடர்வதை தனது ஞான திருஷ்டியால் அறிந்தார். அதைப் போக்க சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து சிவ பூஜை செய்வது அவசியம் என்பதையும் அறிந்தார். இறைவனே ஆனாலும் மனிதப் பிறவி எடுத்தால் அதற் குரிய சாப, தோஷங்களை அனுபவித்தே ஆக வேண்டும் என்பதற்கு அரிய உதாரணம் இது.

ராமபிரான் அனுமனை அழைத்தார். தான் பூஜை செய்ய காசியில் இருந்து சிவலிங்கம் கொண்டு வருமாறு உத்தரவிட்டார். ராமரின் உத்தரவை சிரமேற்கொண்டு அனுமனும் காசிக்குப் புறப்பட்டார். அங்கிருந்து அவர் சிவலிங்கம் கொண்டு வருவதில் சில தடைகள் ஏற்பட்டு கால தாமதம் ஆனது.

அப்போது சீதா பிராட்டி, அருகிலிருந்த குடமுருட்டி ஆற்றின் மணலில் அமர்ந்து விளையாட்டாக சிவலிங்கங்களை உருவாக்கத் தொடங்கினார். இவ்வாறு 107 சிவலிங்கங்களை அவர் உருவாக்கிவிட்டார். அற்புதமாக அமைந்த அந்த சிவலிங்கங்களைப் பார்த்த ராம பிரான், தனது தேவியை பாராட்டினார். உடனே அந்த சிவலிங்கங்களுக்கு பூஜை செய்யத்தொடங்கிவிட்டார். அப்போது காசியில் இருந்து ஒரு சிவலிங்கத்தைக் கொண்டு வந்த அனுமன், வருத்தமுற்று தான் கொண்டு வந்த சிவலிங்கத்தை என்ன செய்வது என யோசித்தார்.

அப்போது அனுமனுக்கு அருளிய ராமபிரான், கோவிலுக்கு தென்புறத்தில் அந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்யுமாறு உத்தரவிட்டார். அதன்படி தென்புறத்தில் அமைக்கப்பட்ட அந்த லிங்கத்திற்கு 'அனுமந்த லிங்கம்' என்று பெயரிட்டார்.

சீதாதேவி பிரதிஷ்டை செய்த 106 சிவலிங்கங்களும் மூன்று வரிசையில் வடக்குப் பகுதியில் அழகாக அமைந்து உள்ளன. 107-வது லிங்கம் மூலவராக ராமலிங்க சுவாமியாக காட்சி தருகிறது. 108-வது சிவலிங்கமாக காசியிலிருந்து அனுமன் கொண்டு வந்த லிங்கம், 'அனுமந்த லிங்கம்' என்று வழங்கப்பட்டு வருகிறது. '107 லிங்கங்களையும் தரிசனம் செய்து, 108-வதாக அனுமந்த லிங்கத்தையும் தரிசனம் செய்தால்தான் சிவதரிசனம் செய்த பலன் கிடைக்கும்' என்று ராமபிரான் அருளியதால் அனுமனும் தன் வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுற்றார். மூலஸ்தானம் தவிர்த்து மற்ற 107 லிங்கங்களுக்கும் பக்தர்கள் தாங்களே நேரடியாக பூத்தூவி வழிபடலாம்.

### மகா சிவராத்திரிப் பெருவிழா

இத்தகைய சிறப்புமிக்க பாபநாசம் தலத்தில் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி, பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் 108 சிவலிங்கங்களையும் 108 முறை வலம் வரும் நிகழ்ச்சி பக்திப் பரவசத்துடன் நடைபெறும்.

சிவராத்திரியன்று 108 லிங்கங்களுக்கும் ருத்ர மந்திரம் சொல்லி நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் ஐப்பசி அன்னாபிஷேகம், மார்கழி திருவாதிரை ஆகியவை சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

சனி தோஷம் விலக, பித்ருதோஷம் நீங்க, அறியாமல் செய்த பாவம் விலக என சகல தோஷங்களுக்கும் இங்கு பிரார்த்தனை செய்யப்படுகிறது. தங்களது வேண்டுதல் நிறைவேறியவுடன் பக்தர்கள் சுவாமிக்கு தேன், பால் கொண்டு அபிஷேக ஆராதனை செய்தும், வஸ்திரம் அணிவித்தும் நேர்த்திக் கடன்களை செலுத்துகின்றனர்.

கோவில், காலை 6.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 8.30 மணி வரையும் பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்திருக்கும்.

### அமைவிடம்

கும்பகோணத்தில் இருந்து தஞ்சாவூர் செல்லும் சாலையில் 15 கிலோமீட்டர் தொலைவில் பாபநாசம் உள்ளது. பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே கோவில் அமைந்துள்ளது. கும்பகோணத்தில் இருந்தும், தஞ்சாவூரில் இருந்தும் பேருந்துகள் உள்ளன.

## வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் ஸ்ரீகாந்த் பாராட்டுச் சான்றிதழ்



பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஐஆர் படிவங்களை செயலியில் சிறப்பாக பதிவேற்றம் செய்த பூம்புகார் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் ஸ்ரீகாந்த் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

## அரசு உயர்நிலை பள்ளி புதிய கட்டிட திறப்பு விழா



ஆவடி மாநகராட்சி, கோனாம்பேடு பகுதியில், அரசு உயர்நிலை பள்ளி புதிய கட்டிட திறப்பு விழாவில் அமைச்சர் நாசர் இனிப்பு வழங்கினார்.

## மாணவியர்களுக்கான மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சி



அரசு மற்றும் அரசு உதவி பெறும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் தங்கி கல்வி பயிலும் மாணவ மற்றும் மாணவியர்களுக்கான மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை தூத்துக்கடி காமராஜ் கலை, அறிவியல் கல்லூரி மைதானத்தில் நேற்று அமைச்சர் கீதா ஜீவன் துவக்கி வைத்தார்.

## தேசிய நூலக வார விழா



சிவகங்கை மன்னர் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட மைய நூலக நண்பர்கள் திட்டம் சார்பில் தேசிய நூலக வார விழா நடந்தது.

## மதுபான கடைகளை நிரந்தரமாக மூடக்கோரி பா.ம.க. ஆர்ப்பாட்டம்



மறைமலைநகர் நகர பகுதியில் உள்ள 4 அரசு மதுபான கடைகளை நிரந்தரமாக மூடக்கோரி பா.ம.க. மாவட்ட செயலாளர் ஜனார்த்தனன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

## 10 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் எஸ்ஐஆர் பணிகளை சிறப்பாக நிறைவேற்றிய 10 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் கலைச்செல்வி பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

## ஆண்கள் ஜூனியர் ஆக்கி உலக கோப்பை அறிமுக விழா



கடலூர் மஞ்சக்குப்பம் அண்ணா விளையாட்டு மைதானத்தில் ஆண்கள் ஜூனியர் ஆக்கி உலக கோப்பை அறிமுக விழாவில் மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஆக்கி உலக கோப்பையை அமைச்சர் கணேசன் அறிமுகம் செய்து பேசினார்.

## பயணியர் நிழற்குடையை சபாநாயகர் அப்பாவு திறந்து வைத்தார்



ராதாபுரம் கூட்டப்புளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 8 லட்சத்தில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடையை சபாநாயகர் அப்பாவு திறந்து வைத்தார். ராபர்ட்புரூஸ் எம்.பி. உடன் உள்ளார்.

## மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கூட்டம்



தென்காசி எம்.பி., ராணி ஸ்ரீகுமார் தலைமையில் கலெக்டர் கமல்கிஷோர், பழனிநாடார் எம்எல்ஏ முன்னிலையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கூட்டம் நடந்தது.

## செம்மொழி பூங்காவின் இறுதிகட்ட பணி



கோவை காந்திபுரம் மத்திய சிறைச்சாலை பகுதியில் அமைக்கப்பட்டு வரும் செம்மொழி பூங்காவின் இறுதிகட்ட பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று ஆய்வு செய்தார்.

## மூன்று சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை



உடன்பிறப்பே வா' நிகழ்வில் புவனகிரி, கடலூர் மற்றும் மயிலம் என மூன்று சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளை நேற்று முதலமைச்சர் ஸ்டாலின் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

## பிரச்சார ஆய்வுக் கூட்டம்




சிறப்பு தீவிர திருத்த பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சென்னையில் உள்ள பாஜக அலுவலகத்தில் நேற்று மாநில அளவிலான பிரச்சார ஆய்வுக் கூட்டம் நடந்தது. இதில் அண்ணாமலை. தமிழிசை, பொன்ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## பயனாளிகளுக்குக் குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணை



தூத்துக்குடி - அய்யனடைப்பு ஊராட்சியில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள 220 வீடுகள் அடங்கிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டடத்தை கனிமொழி எம்.பி., அமைச்சர்கீதா ஜீவன் திறந்து வைத்து, பயனாளிகளுக்குக் குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினர். கலெக்டர் இளம்பகவத், சண்முகய்யா எம்எல்ஏ, மேயர் ஜெகன் உடன் உள்ளனர்–

## சமுதாய நலக்கூடத்தை கனிமொழி எம்.பி. திறந்து வைத்தார்.



கூட்டுடன்காடு ஊராட்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை கனிமொழிஎம்.பி. நேற்று திறந்து வைத்தார். கலெக்டர் இளம்பகவத், கூடுதல் கலெக்டர் ஐஸ்வர்யா, மாநகர மேயர் ஜெகன், சண்முகய்யாஎம்எல்ஏ உடன் உள்ளனர்.

## நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் பல்நோக்கு மருத்துவ முகாம்



கன்னியாகுமரி மாவட்டம் புத்தளம் பேரூர் பகுதியில் நேற்று நடந்த நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் பல்நோக்கு மருத்துவ முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டு மருத்துவ பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கலெக்டர் அழகுமீனா, நாகர்கோவில் மேயர் மகேஷ் உள்ளனர்.

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம்




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டத்தில் அமைச்சர்கள் மூர்த்தி, மனோ தங்கராஜ , கலெக்டர் பிரவீண்குமார் பங்கேற்றனர்.

## முத்தங்கி அலங்காரத்தில் நம் வாசவி



திருவண்ணாமலை ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் சுக்ரவாரா பூஜையில் நம் வாசவி அம்மன் முத்தங்கி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்



கரூர் மாவட்டம் மாயனூர் அரசு மாதிரி பள்ளியில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் ஊட்டச்சத்து பெட்டகத்தை மருத்துவ பயனாளிக்கு கலெக்டர் தங்கவேல் வழங்கினார்.

## 2 நாள் விளையாட்டுப் போட்டி



ராணிப்பேட்டை அரசினர் குழந்தைகள் இல்லத்தில் 2 நாள் விளையாட்டுப் போட்டிகளை அமைச்சர் காந்தி துவக்கி வைத்தார்.

## பூத்வாரியாக எஸ்ஐஆர் பணி



கடலூர் மாநகரப் பகுதியில் அனைத்து வார்டுகளிலும் பூத்வாரியாக எஸ்ஐஆர் பணிகளை முன்னாள் அமைச்சர் எம்.சி.சம்பத் கள ஆய்வு செய்தார்.

## வாக்காளர் பட்டியல் திருத்த முகாம்



நாகர்கோவிலில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் பாஜக மாநில செயலாளர் மீனா தேவ், மக்களுக்கு துணை புரிந்தார்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி ஆய்வுக் கூட்டம்



எஸ்ஐஆர் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி ஆய்வுக் கூட்டம் திருச்சியில் நேற்று நடந்தது. இதில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




## தி.மு.க., செயற்குழு கூட்டம்



நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க., செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளரும், எம்.பி.,யுமான ராஜேஷ்குமார் பேசினார்.

## வீட்டுக்கு ஒரு வேங்கை போட்டி



மாவட்ட அளவில் புதிய தலைமுறை நடத்திய வீட்டுக்கு ஒரு வேங்கை போட்டியில் 8 மற்றும் 9 ஆம் வகுப்பு மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், எஸ்.டி.அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ரெங்கா நகர் 10ம் வகுப்பு (மூத்த) மாணவர் ஆதில் பாரூக் பரிசு பெற்று, பள்ளிக்கு பெருமை சேர்த்தார். அவரது சாதனைக்கு நிர்வாகமும், பணியாளர்களும், மாணவர்களும், முழு மனதுடன் வாழ்த்துவோம்.

## பொதுக்கூட்ட மேடைக்கான பூமி பூஜை



புதுக்கோட்டையில் வருகிற 26ம் தேதி பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் பங்கேற்கும் பொதுக்கூட்ட மேடைக்கான பூமி பூஜை நேற்று போடப்பட்டது.

## விவசாயிகள், பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்



தென்காசி மாவட்டம் ஊத்துமலை பகுதியில் விவசாயிகள், பொதுமக்களிடம் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் குறைகளை கேட்டறிந்தார்.

# சுற்றுலா: அழிவில் இருந்து மீண்டெழுந்த தனுஷ்கோடி!

ராமேஸ்வரத்தில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது தனுஷ்கோடி. 1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட கோர புயலில் கிட்டத்தட்ட தனுஷ்கோடி நகரம் முழுமையாக அழிந்து விட்டது என கூறலாம். மிச்சம் இருந்தது கோதண்ட ராமசாமி கோவில் மட்டுமே. புயலுக்கு முன்பாக தனுஷ்கோடி நகரம் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பகுதியில் இருந்தது. இங்கிருந்து இலங்கைக்கு கடற்கரை வணிகம் நடைபெற்று வந்தது. முக்கிய துறைமுகமாக விளங்கி வந்தது.



2017 க்கு பிறகு இங்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டு தனுஷ்கோடி நகரம் புதுப்பொலிவுடன் காணப்படுகிறது. மிகச்சிறந்த சுற்றுலா தலமாக விளங்குகிறது. தினசரி எண்ணற்ற சுற்றுலா பயணிகள் இந்த இடத்தை காண ஆர்வமாக வருகின்றனர். தனுஷ்கோடி ராமேஸ்வரம் தீவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஒரு துறைமுகம் ஆகும். 1964 இல் ஏற்பட்ட புயலில் சுமார் 1800 பேர் பலியாகி உள்ளனர். இந்த இடம் தொன்மையான வரலாற்றில் அடையாளங்களுடன் காணப்படுகிறது.

முன்னர் மதுரை மாவட்டத்தில் ஒரு பகுதியாக விளங்கியது இந்த தனுஷ்கோடி பகுதி. இந்த இடத்தில் வங்கக்கடலும் இந்திய பெருங்கடலும் சங்கமிக்கும் இடமாகும். இந்த கடற்கரையில் குளித்தால் காசியில் குளித்த புண்ணியம் கிடைக்கும்ள ன்பது ஐதீகம். கோதண்ட ராமசாமி கோவில் ராமேஸ்வரத்தில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நீலக்கடலின் அழகும் சுற்றுப்புற சூழ்நிலைகளும் பார்ப்பதற்கு கண்களை கொள்ளை கொள்ளும் விதத்தில் அமைந்திருக்கும்.

தமிழ்நாட்டின் பரந்த கடற்கரையாக ஆக இந்த இடம் உள்ளது.

மிகவும் கவர்ச்சிகரமான இடமாகவும் சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்ப்பதற்கு ஏற்ற இடமாகவும் உள்ளது. ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து செல்கிறார்கள்.

இந்த இடத்தில் எண்ணற்ற சிற்றுண்டி மையங்கள் உள்ளது. சுவையான மீன் சாப்பாடு சுடச்சுட கிடைக்கும்.

கடற்கரையின் ஒருபுறம் மன்னார் வளைகுடா மறுபுறம் வங்காளவிகுடா மூலம் இயற்கையாக சூழப்பட்டுள்ளது. தனுஷ்கோடி என்று சொல்லுக்கு வில்லின் முனை என்று பெயர்.

ராமன் இந்த இடத்திலிருந்து இலங்கைக்கு செல்ல பாலம் அமைப்பதற்கு தனது படைகளுக்கு கேட்டுக்கொண்ட இடமாக ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே இந்த இடம் ராமாயண காலத்தில் இடம் பெற்றுள்ளது

சுமார் 15 கிலோமீட்டர் நீளமுள்ள தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் அதிக அலைகளை கொண்ட பகுதியாகும் அடிக்கடி கடல் சீற்றம் ஏற்படும். இந்தப் பகுதியில் நிறைய குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். கடல் அலையின் சீற்றத்தை குறைக்க இருபுறமும் சீமை கருவேல மரங்கள் அடர்த்தியாக வளர்க்கப்பட்டுள்ளது.

இங்கு பிளமிங்கோ பறவைகளை அதிக அளவில் காணலாம்.

புயல் வருவதற்கு முன்பு இங்கு பெரிய கிறிஸ்தவ தேவாலயம் ரயில் நிலையம் தபால் நிலையம் பள்ளிக்கூடம் நிறைய குடியிருப்புகள் இருந்து வந்தது.

1964 டிசம்பர் மாதம் ஏற்பட்ட புயலால் கோதண்டராமன் கோவில் தவிர மற்ற பகுதிகளில் அனைத்தும் அழிந்துவிட்டது.

இந்த விபத்து ஏற்பட்டு 60 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அதன் எச்சங்கள் அழியாமல் காணப்படுகிறது. இந்த இடத்தில் ராவணன் சகோதரர் விபீஷணன் ராமனிடம் சரணடைந்த இடமாக கருதப்படுகிறது. இந்த இடத்தில் அழகிய மணற்பாங்கான பகுதிகள் நிறைய உள்ளன.

2017 புதிதாக கட்டப்பட்டுள்ள தார் சாலைகள் மூலம் இந்த இடம் புதிய பொலிவு ஏற்பட்டுள்ளது. புத்துணர்ச்சி பெற்றுள்ளது. இதன் முனைப்பகுதி அரிச்சல் முனை எனப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் இந்த இடங்களில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தை முழுமையாக சுற்றி பார்த்துவிட்டு சுவையான மீன் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு மன நிம்மதியுடன் வரலாம்.

தற்போது சுற்றுலா செல்வதற்கு மிகவும் உகந்த இடமாக இந்த தனுஷ்கோடி பகுதி காணப்படுகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

# கால்நடை ஆய்வாளர் பதவிக்கு வாய்ப்பு




டிஎன்பிஎஸ்சி ஒருங்கிணைந்த குரூப்-2 மற்றும் குரூப்-2ஏ முதல்நிலைத்தேர்வு கடந்த செப்.28-ம் தேதி நடைபெற்றது. 645 காலிப்பணியிடங்களை நிரப்ப நடத்தப்பட்ட இத்தேர்வை 4 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் எழுதியுள்ளனர். தேர்வு முடிவு டிசம்பரில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு கூடுதலாக 625 பணியிடங்கள் சேர்க்கப்பட்டு காலியிடங்களின் எண்ணிக்கை 1,270 ஆக உயர்ந்துள்ளது. டிஎன்பிஎஸ்சி பிற்சேர்க்கை அறிவிப்பின்படி தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவை உதவிப் பிரிவு அலுவலர், கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை ஆய்வாளர் (கிரேடு-2) உள்ளிட்ட புதிய பதவிகளும் இடம் பெற்றுள்ளன.

இதில் கால்நடை ஆய்வாளர் பதவியில் மட்டும் 439 இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த பதவிக்கு பட்டப் படிப்புடன் பிளஸ் 2-வில் உயிரியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் பாடம் படித்திருக்க வேண்டும் என்று கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ஏ.சண்முகசுந்தரம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த ஜூலை 15-ம் தேதி வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி ஒருங்கிணைந்த குருப்-2 மற்றும் குருப்-2ஏ பணிகளில் அடங்கியுள்ள பதவிகளுக்கான முதல் நிலைத்தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்கள் கால்நடை ஆய்வாளர் பணி தொடர்பாக, பிளஸ் 2-வில் உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் ஏதேனும் ஒன்றை நீங் கள் படித்திருக்கிறீர்களா? என்ற பத்தியில் 'ஆம்' அல்லது 'இல்லை' ('எஸ்' ஆர் 'நோ') என்பதை பதிவு செய்ய வேண்டும். இதுதொடர்பாக தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) ஓடிஆர் 'ரிஓபன்' செய்யப்பட்டுள்ளது. இது நவ.22 முதல் 25-ம் தேதி நள்ளிரவு 11.59 மணி வரை 4 நாட்கள் திறந்திருக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நவம்பர் மாத வார ராசிபலன்

23.11.2025 முதல் 30.11.2025 வரை

## மேஷம்

அஸ்வினி: இந்த வாரம் படிப்படியான முன்னேற்றத்தை அடைவீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்தியளிப்பதாக அமையும். குடும்ப ஒற்றுமை ஓரளவுக்கு சிறப்பாக இருக்கும். உற்றார்-உறவினர்களின் வருகை மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தாலும் வரவுக்குமீறிய செலவுகளை ஏற்படுத்தும்.

பரணி: இந்த வாரம் எடுக்கும் காரியங்களில் எதிர்நீச்சல் போட்டாவது முன்னேறிவிடுவீர்கள். சிலருக்கு அசையா சொத்துகளாலும் வண்டி வாகனங்களாலும் வீண் செலவுகளை சந்திக்க நேரிடும். பணவரவுகள் தேவைக்கேற்றபடி இருக்கும்.

கார்த்திகை 1ம் பாதம்: இந்த வாரம் கொடுக்கல்- வாங்கல் ஓரளவுக்கு சரளநிலையில் நடைபெற்றாலும் பெரிய தொகை ஈடுபடுத்துவதைத் தவிர்ப்பது உத்தமம். தொழில், வியாபாரம் செய்பவர்களும் சற்று சிறப்பான லாபத்தைப் பெறஇயலும் என்றாலும் போட்டி பொறாமைகளையும் சந்தித்தே ஆகவேண்டும்.

முருகனை வணங்குவது எல்லா நன்மைகளையும் தரும்.

## ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்: இந்த வாரம் உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனமுடன் செயல்பட்டால் கவுரவமான பதவிகளை அடைய முடியும். மாணவர்களின் கல்வித்திறன் ஓரளவுக்கு உயரும். அரசியல்வாதிகளுக்கு மக்களின் ஆதரவுகள் கிடைக்கும். எதிலும் சிந்தித்து செயல்பட்டால் ஓரளவுக்கு உயர்வுகளைப் பெறுவீர்கள். சனிக்கு உரிய பரிகாரங்களைச் செய்வது உத்தமம்.

ரோகிணி: இந்த வாரம் கொடுக்கல்-வாங்கலில் பெரிய தொகை ஈடுபடுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. முயற்சிகளில் இக்காலத்திலும் தடைகளையே சந்திப்பீர்கள். தொழில், வியாபாரம் செய்பவர்கள் நிறைய போட்டிகளையும் மறைமுக எதிர்ப்புகளையும் சந்திக்க நேரிடும். நெருங்கியவர்களே எதிரிகளாக மாறுவார்கள்.

மிருக சிரீஷம் 1, 2, பாதங்கள்: இந்த வாரம் குடும்பத்திலும் பொருளாதாரத் தட்டுப்பாட்டினாலும் வீண் சஞ்சலங்களும் உண்டாகும். கணவன்-மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் குறையும் என்றாலும் புத்திரவழியில் வீண் செலவுகளும் நிம்மதியற்ற நிலையும் ஏற்படும்.

## மிதுனம்

மிருக சிரீஷம் 3, 4 பாதங்கள்: இந்த வாரம் உற்றார்- உறவினர்களிடம் சற்று விட்டுக்கொடுத்து நடந்து கொள்வது நல்லது. உத்தியோகஸ்தர்கள் வெளியூர் பயணங்களால் அலைச்சல், டென்ஷனை சந்திப்பீர்கள். உங்களின் திறமைக்கு ஏற்ற உயர்வுகளும் தாமதப்படும். பிறர் செய்யும் தவறுகளுக்கும் நீங்களே பொறுப்பேற்க நேரிடுவதால் வேலைப் பளு அதிகரிக்கும்.

திருவாதிரை: இந்த வாரம் குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபிட்சமும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் விலகி ஒற்றுமை பலப்படும். திருமண வயதை அடைந்தவர்களுக்கு தடைப்பட்ட திருமண சுப காரியங்கள் கைகூடும். புத்திரபாக்கியம் இல்லாதவர்களுக்கு சிறப்பான புத்திரபாக்கியம் அமையும்.

புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்: இந்த வாரம் பணம் பலவழிகளில் தேடி வந்து பாக்கெட்டை நிரப்பும். பொருளாதார நிலை சிறப்பாக அமைவதால் கடன்களும் படிப்படியாகக் குறையும். புத்திரபாக்கியம் வேண்டு பவர்களுக்கு அழகான புத்திர பாக்கியம் அமையும்.

ஆஞ்ச நேயருக்கு வெண்ணெய் சாற்றி வழிபட எல்லா பிரச்சனைகளும் தீரும். மனோ தைரியம் கூடும்.

## கடகம்

புனர் பூசம் 4ம் பாதம்: இந்த வாரம் உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றினாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயல்படும் ஆற்றல் உண்டாகும். கொடுக்கல்-வாங்கல் சரள நிலையில் நடைபெறும். கொடுத்த கடன்களும் தடையின்றி வசூலாகும். பெரிய தொகையை எளிதில் ஈடுபடுத்தி லாபமடைய முடியும்.

பூசம்: இந்த வாரம் தொழில், வியாபாரத்தில் நல்ல லாபமும், அபிவிருத்தியும் பெருகும். தொழிலாளர்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் பல முன்னேற்றப்பாதைகளுக்கு வழிவகுக்கும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பு உடையவற்றாலும் அனுகூலப் பலன்கள் உண்டாகும்.

ஆயில்யம்: இந்த வாரம் உத்தியோகஸ்தர்கள் பணியில் திருப்தியான நிலையினை அடைவார்கள். தடைப்பட்ட பதவி உயர்வுகள் கிடைக்கப்பெற்று மனமகிழ்ச்சி ஏற்படும். உயரதிகாரிகளின் பாராட்டுதல்கள் உற்சாகத்தை ஏற்படுத்தும்..

## சிம்மம்

மகம்: இந்த வாரம் உடல்நிலையில் சோர்வு, மந்தமான நிலைகள் தோன்றும் என்றாலும் எடுக்கும் காரியங்களைச் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். திருமணவயதை அடைந்தவர்களுக்கு சிறப்பான மணவாழ்க்கை அமையும். சிலர் நினைத்தவரையே கைப்பிடிப்பர்.

பூரம்: இந்த வாரம் பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால் பொன், பொருள், ஆடை, ஆபரணம் சேரும். உற்றார்- உறவினர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும். தெய்வ தரிசனங்களுக்காக பயணங்கள் மேற்கொள்வீர்கள். பெயர், புகழ் அதிகரிக்கக்கூடிய காலமாகும்.

உத்திரம் 1ம் பாதம்: இந்த வாரம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியும். பதவிக்கு இருந்த இடையூறுகள் விலகி எதிர்பார்க்கும் உயர்வுகளை அடைவீர்கள். உங்களின் வார்த்தைகளுக்கு மதிப்பும், மரியாதையும் உயரும்.

தினமும் மாலை வேளையில் சிவனை வணங்க காரிய வெற்றி உண்டாகும்..

## கன்னி

உத்திரம் 2, 3, 4 பாதங்கள்: இந்த வாரம் தாராள தனவரவுகள் உண்டாகும். புதிய முயற்சிகளைக் கையாண்டு அபிவிருத்தியைப் பெருக்குவீர்கள். புதிய பூமி, நிலம், மனை போன்றவற்றை வாங்கும் யோகமும் உண்டாகும்.

அஸ்தம்: இந்த வாரம் புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். இதுவரை வராமல் தடைப்பட்ட பணத்தொகை கைக்கு வந்துசேரும். வெளியூர், வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புகளும் அதன்மூலம் மேன்மைகளும் உண்டாகும். உடனிருக்கும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் மகிழ்ச்சியளிக்கும்.

சித்திரை 1, 2, பாதங்கள்: இந்த வாரம் கல்வியில் ஏற்பட்ட தடைகள் விலகி மாணவர்களுக்கு ஈடுபாடு அதிகரிக்கும். படிப்புக்காக எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலனைப் பெறுவீர்கள். நண்பர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சியளிப்பதாக அமையும்.

துளசியை பெருமாளுக்கு அர்ப்பணித்து வணங்க கடன் சுமை குறையும்.

## துலாம்

சித்திரை 3, 4 பாதங்கள்: இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் தடையின்றி வெற்றியினைப் பெறுவீர்கள். உடல்நிலையில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றினாலும் எந்தக் காரியத்திலும் எளிதாக ஈடுபட முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும்.

சுவாதி: இந்த வாரம் உற்றார்-உறவினர்களின் வருகை மகிழ்ச்சி அளிப்பதாக அமையும். பெற்றோர், ஆசிரியர்களின் பாராட்டுதல்கள் மாணவர்களை ஊக்கத்தை ஏற்படுத்தும். சிலருக்கு வீடு, மனை வாங்கும் கனவுகளும் நனவாகும். கடன்கள் அனைத்தும் குறையும்.

விசாகம் 1, 2, 3ம் பாதங்கள்: இந்த வாரம் கொடுக்கல்-வாங்கலிலும் எதிர்பார்த்த லாபம் அமையும். பெரிய மனிதர்களின் நட்பு அனுகூலப்பலனை உண்டாக்கும். தடைப்பட்ட திருமண சுபகாரியங்கள் தடபுடலாக நிறைவேறும். பணம் பலவழிகளில் தேடி வந்து உங்கள் பாக்கெட்டை நிரப்பும்

சுக்கிர பகவானை தீபம் ஏற்றி வணங்க எதிர்பார்த்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும். பண வரத்து கூடும்..

## விருச்சிகம்

விசாகம் 4ம் பாதம்: இந்த வாரம் குடும்பத்தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். புதிய பொருட்சேர்க்கைகளும், ஆடை ஆபரணமும் சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றங்கள் கிடைக்கப்பெற்று குடும்பத்தோடு சேர்ந்து மகிழ்வார்கள். தொழில், வியாபாரத்திலும் எதிர்பார்த்த லாபங்கள் கிட்டும். தினமும் விநாயகரை வழிபடுவது உத்தமம்.

அனுஷம்: இந்த வாரம் எதிர்பார்த்த கடனுதவிகள் தடையின்றிக் கிடைப்பதால் தொழிலில் நல்ல அபிவிருத்தி பெருகும். புதிய கூட்டாளிகள் சேருவார்கள். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புடையவற்றாலும் லாபம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபிட்சமும் உண்டாகும்.

கேட்டை: இந்த வாரம் கணவன்-மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உற்றார்-உறவினர்களின் ஆதரவு மகிழ்ச்சியளிக்கும். பண வரவுகள் தாராளமாக அமைவதால் தேவைகள் யாவும் பூர்த்தியாகும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். இந்த வாரம் இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன் கோபம் குறையும்.

மாரியம்மனை தீபம் ஏற்றி வழிபட எல்லா பிரச்சனைகளும் தீரும். மனக் கவலை நீங்கும்.

## தனுசு

மூலம்: இந்த வாரம் சிலருக்கு மனதில் நினைத்தவரையே கைப்பிடிக்கும் யோகம் உண்டாகும். திருமண சுப காரியங்கள் தடபுடலாக கைகூடும். கொடுக்கல்-வாங்கல் சரளமான நிலையில் நடைபெறும். கொடுத்த கடன்களும் தடையின்றி வசூலாகும். மாணவர்கள் கல்வியில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு வெற்றிக்கனியினைப் பறிப்பார்கள்.

பூராடம்: இந்த வாரம் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் தேடிவரும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிட்டும். பயணங்களால் அனுகூலம் உண்டாகும். சனிக்குரிய பரிகாரங்களைத் தொடர்ந்து செய்வது நல்லது.

உத்திராடம் 1ம் பாதம்: இந்த வாரம் பொருளாதார ரீதியாக முன்னேற்றமான பலன்கள் உண்டாகும். எதிர்பாராத திடீர் தன சேர்க்கைகளும் கிடைக்கப்பெறும். குடும்பத்திலிருந்த கருத்து வேறுபாடுகள் விலகி கணவன்-மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். பிரிந்த உறவினர்களும் தேடிவந்து ஒற்றுமை பாராட்டுவார்கள்.

குலதெய்வத்தை வியாழக்கிழமையில் வணங்கி வர மன அமைதி உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும்.

## மகரம்

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்: இந்த வாரம் பண வரவுகள் சிறப்பாக இருப்பதால் புதிய நவீன பொருட்சேர்க்கைகளும், ஆடை ஆபரணமும் சேரும். பூர்வீக சொத்துகளால் கூடுதல் லாபம் உண்டாகும். வீடு, மனை, பூமி வாங்கும் யோகம் உண்டாகும். புத்திரவழியில் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும்.

திருவோணம்: இந்த வாரம் சிலருக்கு நினைத்தவரையே கைப்பிடிக்கக் கூடிய யோகம் உண்டாகும். எதிலும் சற்று சிந்தித்துச் செயல்படுவது உத்தமம். தொழில், வியாபார ரீதியாக இருந்து வந்த கடந்த கால பிரச்சினைகள் விலகி நல்ல லாபத்தையும் ஏற்றத்தையும் பெறுவீர்கள்.

அவிட்டம் 1, 2 பாதங்கள்: இந்த வாரம் கடன்கள் அனைத்தும் படிப்படியாகக் குறைந்து மனநிம்மதி உண்டாகும். சில நேரத்தில் தேவையற்ற சோதனைகளை சந்திக்க நேரிடும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் அதிகரித்து லாபம் குறையும். வரவேண்டிய ஆர்டர்களும் தடைப்படும்.

துர்கை அம்மனுக்கு செவ்வாய், வெள்ளிக்கிழமையில் தீபம் ஏற்றி வழிபட எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

## கும்பம்

அவிட்டம் 3, 4 பாதங்கள்: இந்த வாரம் எந்தவொரு காரியத்தையும் முழுமையாகச் செய்து முடிக்க இயலாதபடி தாமத நிலை உண்டாகும். எதிர்பார்க்கும் கடனுதவிகளும் தாமதப்படும். பல வகையில் நெருக்கடிகள் அதிகரிக்கும். குடும்பத்திலும் வீணான சண்டை சச்சரவுகள் ஏற்படும்.

சதயம்: இந்த வாரம் எவ்வளவு தான் பாடுபட்டாலும் நல்ல பெயரை எடுக்க முடியாத நிலை உண்டாகும். உற்றார்- உறவினர்களே தேவையற்ற பிரச்சினைகளை உண்டாக்குவார்கள். கடன்காரர்களும் மிகவும் தொல்லை கொடுப்பார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரித்து உடல்நிலை சோர்வடையும்.

பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்: இந்த வாரம் பிறர் செய்யும் தவறுகளுக்கும் நீங்களே பொறுப்பேற்க வேண்டி இருப்பதால் வீணான பழிச்சொல் உண்டாகும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கை நழுவி பொருளாதாரத் தடைகள் உண்டாகும். சனிக்கிழமை தோறும் சனிக்குப் பரிகாரம் செய்வது நல்லது.

சனிக்கிழமையில் எள் சாதம் சனி பகவானுக்கு நைவேத்தியம் செய்து காகத்திற்கு வைக்க கஷ்டங்கள் குறையும். உடல் ஆரோக்கியம் உண்டாகும்.

## மீனம்

பூரட்டாதி 4ம் பாதம்: இந்த வாரம் நன்மை, தீமை கலந்த பலன்களைப் பெறுவீர்கள். குடும்பத்திலிருந்த மருத்துவச் செலவுகள் படிப்படியாகக் குறையும். உற்றார்- உறவினர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள். தேவையற்ற செலவுகளைக் குறைத்துக் கொள்வதால் கடன்களைத் தவிர்க்கலாம்.

உத்திரட்டாதி: இந்த வாரம் சுப காரிய முயற்சிகளை மேற்கொண்டால் சில தடைகளுக்குப் பின் கைகூடும். கொடுக்கல்-வாங்கலில் பெரிய தொகை கடனாகக் கொடுப்பதைத் தவிர்த்து சிந்தித்துச் செயல்பட்டால் ஓரளவுக்கு லாபம் கிடைக்கும்.

ரேவதி: இந்த வாரம் உத்தியோகஸ்தர்களுக்குக் கவுரவமான பதவி உயர்வுகள் கிடைத்தாலும் வேலைப் பளுவைக் குறைத்துக்கொள்ள இயலாது. உடன் பணிபுரிபவர்களின் ஆதரவுகள் சுமாராகவே இருக்கும். தொழில், வியாபாரத்தில் சற்று மந்த நிலை ஏற்படும்.

நவக்கிரகத்தை தீபம் ஏற்றி வணங்கி வருவது குழப்பத்தை போக்கும். செல்வம் செல்வாக்கு உயரச் செய்யும். தடை, தாமதம் நீங்கும்.

# நீலகிரியில் மகளிர் திட்ட விழாவில் 13,173 பேருக்கு ரூ.9.85 கோடி நலத்திட்டம்: நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார்




நீலரிகி, நவ. 23:

நீலகிரி மாவட்டம் கூடலூர் நாடார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், மொத்தம் 13,173 பேருக்கு ரூ.9.85 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதேபோல், அன்புக் கரங்கள் திட்டத்தில் 5 குழந்தைகள் பயனடையும் ஆணைகள் வழங்கப்பட்டது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 22 பேருக்கு 8 கிராம் தங்க நாணயத்துடன் ரூ.30.51 லட்சம் மதிப்பிலான நிதியுதவியும் வழங்கப்பட்டது. “பெண்களை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” மற்றும் “நீல்கிரி பிரிமீயர் லீக் ரைட் பிச்” போன்ற கலெக்டரால் உருவாக்கப்பட்ட திட்டங்களின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 16 பள்ளிகளிலிருந்து 6 பள்ளிகளுக்கு தலா ரூ.15,000 மதிப்பிலான கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார்.

விழாவைத் தொடர்ந்து, ஏழுமுறம் பாடி பழங்குடியினர் கிராமத்தில் ரூ.20 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடம் திறப்பு, தோட்டமுலா பகுதியில் ரூ.15 லட்சம் மதிப்பிலான தடுப்புச்சுவர் பணிகள் ஆய்வு, மாக்கமுலா பகுதியில் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.10 லட்சத்தில் கொள்கலன் மையம் கட்டும் பணிகள் ஆய்வு போன்ற பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசாபார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஜெயராமன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி, கூடலூர், நெல்லியாளம் நகராட்சி கமிஷனர் சக்திவேல், மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அலுவலர் இந்திரா, நகர்மன்ற தலைவர்கள் பரிமளம் (கூடலூர்), நெல்லியாளம் நகர்மன்ற தலைவர் சிவகாமி, உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ஜெயராணி, உதகை நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், தேவர்சோலை பேரூராட்சி தலைவர் வள்ளி, ஓவேலி பேரூராட்சி தலைவர் சித்ராதேவி, திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## க்ரைம் கார்னர்

### ஆள்மாறாட்டம் செய்து ரூ. 57 லட்சம் நில மோசடி: ஒருவர் கைது

சென்னை, நவ.23:

சைதாப்பேட்டை பகுதியில் சொத்தின் உரிமையாளர் போல ஆள்மாறாட்டம் செய்து, காலிமனையை பத்திரப்பதிவு செய்து ரூ.56 லட்சத்து 98 ஆயிரத்து 350 மோசடி செய்த வழக்கில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சென்னை, மேற்கு சைதாப்பேட்டை, கொத்தவால் சாவடி தெருவில் வசித்து வரும் பார்த்திபன் என்பவர் தனியார் நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 2020ம் வருடம் காலிமனை வாங்குவதற்காக இடத்தை பார்த்து வந்த நிலையில், அறிமுகமான நில புரோக்கர் அப்துல் ஹக் என்பவர் பள்ளிக்கரணை, விஜிபி சாந்தி நகரில் 2430 சதுரஅடி காலிமனை உள்ளதாக கூறியுள்ளார். பின்னர் மேற்படி காலிமனையின் உரிமையாளரான நாராயணமூர்த்தி என்பவர் அப்துல்ஹாதிக்கு பொது அதிகார முகவராக நியமித்துள்ளதாக தெரிவித்து, மேற்படி அப்துல்ஹாதி மற்றும் பார்த்திபன் ஆகிய இருவருக்குமிடையே ஒப்பந்தம் செய்தார். தென் சென்னை, இணை சார்பதிவகத்தில் பத்திரப்பதிவு செய்து மொத்தம் ரூ.56,98,350 பணத்தை அப்துல் ஹாதியிடம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மேற்படி காலிமனையின் உண்மையான உரிமையாளர் வேறொரு நாராயணமூர்த்தி என்பதும், ஆள்மாறாட்டம் மூலம் காலிமனையை பத்திரப்பதிவு செய்து, மேற்படி அப்துல்ஹக் மற்றும் அவரது அண்ணன் அப்துல்ஹாதி ஆகிய இருவரும் கூட்டு சேர்ந்து ஏமாற்றியது தெரியவந்தது.

இது குறித்து பார்த்திபன் கொடுத்த புகாரின்பேரில், சைதாப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி மேற்படி குற்ற சம்பவத்தில் தொடர்புடைய அப்துல்ஹக் என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அப்துல்ஹக் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

### 11 வெளிநாட்டுக்கைதிகள் சென்னை புழலுக்கு மாற்றம்

திருச்சி, நவ. 23:

தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக குடியேறியோர், விசா காலம் முடிந்தும் தமிழ்நாட்டில் வசிப்போர், போலி கடவுச்சீட்டு மூலம் தமிழ்நாட்டுக்கு வந்தவர்கள், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை என பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட 100-க்கும் மேற்பட்ட வெளிநாட்டுக் கைதிகள் திருச்சி மத்திய சிறை வளாக சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த முகாமில் அடைக்கப்பட்டுள்ள நைஜீரியா நாட்டைச் சேர்ந்த ஃபிரான்சிஸ், பீட்டர், யூசுஃப், ஜேம்ஸ் ஆகிய 4 கைதிகள் ரகளையில் ஈடுபட்டு முகாமின் கதவை சேதப்படுத்தினர். இதுதொடர்பாக திருச்சி கொட்டப்பட்டில் உள்ள இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமின் துணை ஆட்சியர் சாந்தானலட்சுமி, கே.கே.நகர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் மேற்கண்ட 4 பேர் மீதும் வழக்குப் பதியப்பட்டது. இதைத் தொடர்ந்து மேற்கண்ட 4 பேருடன் சேர்ந்து நைஜீரியா நாட்டைச் சேர்ந்த ஜான், காலின் ஆண்டே, எப்பிங் எத்தின், காட்வின் சக்குவா, ஒசாலியாலோ சிலாகி ஜான், கானா நாட்டைச் சேர்ந்த ஜான், சூடானைச் சேர்ந்த காதர் அபுதாஹிர் ஆகிய 11 பேரும் சிறப்பு முகாமில் இருந்து தங்களை விடுவிக்கக் கோரி ரகளையில் ஈடுபட்டு முகாமின் கதவை சேதப்படுத்தினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் வே.சரவணன், மாநகரக் காவல் ஆணையர் ந.காமினி ஆகியோர் சிறப்பு முகாமில் விசாரணை நடத்தினர். இதுகுறித்து கே.கே.நகர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில், போலீசார் வழக்குப் பதிந்து 11 பேரையும் கைது செய்து திருச்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-2 இல் புதன்கிழமை ஆஜர்படுத்தினர். இதைத் தொடர்ந்து, 11 பேருக்கும் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் உடல் பரிசோதனை செய்யப்பட்டு சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டனர்.

### சாலையில் நடந்து சென்ற இளம்பெண்ணிடம் பாலியல் சீண்டல்: 10-ம் வகுப்பு மாணவன் கைது

சென்னை, நவ. 23:

சென்னை புழல் செக்ரடேரியட் காலனி பகுதியில் 23 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் இரவு 7 மணி அளவில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக பைக்கில் சென்ற நபர் அவரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார். பின்னர் அங்கிருந்து தனது பைக்கில் தப்பிச் சென்றுள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட பெண் புழல் போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்ட பிரிவில் வழக்குப்பதிவு செய்த போலீசார், பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் யார் என்பது பற்றி விசாரணை நடத்தினர். சம்பவ இடத்தில் பொருத்தப்பட்டிருந்த கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது, பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் ஹெல்மெட் அணிந்து, முகத்தை துணியால் மறைத்து பைக்கில் வந்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற மறுநாள் போலீசார் அதே பகுதியில் ரகசியமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். முந்தைய நாள் பாலியல் சீண்டலில் ஈடுபடும்போது எப்படி முகத்தை மூடி இருந்தாரோ அதே போன்று மறுநாளும் அந்த நபர் முகத்தை மூடி பைக்கில் வந்தார். அவரை தனிப்படை போலீசார் மடக்கிப்பிடித்து விசாரணை நடத்தினர்.

அப்போது இளம்பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது 15 வயது சிறுவன் என்பது தெரிய வந்தது. அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வரும் அந்த சிறுவன், தனது தந்தையின் பைக்கில் சுற்றி வந்து இதுபோன்று பாலியல் சீண்டலில் ஈடுபட்டது உறுதியானது. இதைத்தொடர்ந்து சிறுவனை போலீசார் கைது செய்து, பைக்கை பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### தொலைக்காட்சியின் புதுத் தோற்றம்!

காலங்கள் மாறினாலும் இன்றும் புது வீட்டுக்குக் குடிபோகிறோம் என்றால் வாங்க வேண்டிய முக்கியமான மின்னணு சாதனங்களின் பட்டியலில் தொலைக் காட்சிப் பெட்டிக்கென்று தனி இடம் உண்டு. தட்டையான வடிவத்தில் திரையரங்கில் பார்ப்பது போன்ற அனுபவத்தைத் தரக்கூடிய வகையில் இன்று விதவிதமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் அறிமுகமாகிவிட்டன.

ஸ்மார்ட்டிவி: அன்று முதல் இன்றுவரை பொழுதுபோக்கவும், செய்திகளைத் தெரிந்துகொள்ளவும், அறிவை வளர்க்கவும்தான் பெரும்பாலானோர் தொலைக்காட்சியைப் பார்க்கின்றனர். அதே நிலைமைதான் இன்றும் தொடர்கிறது என்றாலும் கேபிள், டி.டி.எச். ஆகியவற்றுக்கு அடுத்து ஓடிடி தளங்களின் வருகையால் சாதாரணமாக இருந்த டிவிகள், தற்போது ‘ஸ்மார்ட் டிவி’களாக மாறியுள்ளன. கேபிள், டி.டி.எச். தளங்களில் தொலைக்காட்சி அலைவரிசைகளை மாற்றிக்கொள்ளலாமே தவிர, அந்தந்த அலைவரிசையில் அந்த நேரத்தில் என்ன ஒளிபரப்பு ஆகிறதோ அதையே நம் தேர்வாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், ஸ்மார்ட் டிவியின் வருகைக்குப் பிறகு எந்த ஓடிடி தளத்தைத் தேர்வு செய்யலாம், எதைப் பார்க்கலாம் எவ்வளவு நேரம் பார்க்கலாம், சில காலம் நிறுத்தி வைத்து மீண்டும் தொடரலாம் என்பது போன்ற அனைத்து வசதிகளும் பார்வையாளரின் விருப்பமாக மாறி விட்டது.

விளம்பர முத்துகள்: டிவி நிகழ்ச்சி என்றாலே இடையில் வரும் விளம்பரங்களோடு சேர்ந்து பார்ப்பதில்தான் சுவாரசியம். முக்கிய மான ஒரு நிகழ்ச்சி அல்லது திரைப்படக் காட்சியின்போது விளம்பரம் வந்துவிட்டால், மனதுக்குள் திட்டியதெல்லாம் மறக்க முடியாத பழைய அனுபவங்களாகிவிட்டன. இன்றைக்கு ஒவ்வொரு தளத்தையும் ‘சப்ஸ்கிரைப்’ செய்து பார்க்கும் வசதி வந்துவிட்டதால் விளம்பரம் எனும் முத்துகளைத் தவறவிட்டு வருகிறோம். அப்படியே ஓடிடி தளங்களில் விளம்பரங்களைக் காண நேரிட்டாலும் ஓரிரு விளம்பரங்களே அந்த நிகழ்ச்சி அல்லது திரைப்படம் முடியும்வரை மீண்டும்மீண்டும் வருகின்றன.

என்னென்ன மாற்றங்கள் வந்தாலும் இன்றும் டிவியைப் காட்டித்தான் பெரும்பாலான இல்லங்களில் குழந்தைகளுக்குச் சாப்பாடு ஊட்டப்படுகிறது. அன்றைக்கு கேபிள் டிவி, இன்றைக்கு யூடியூப் டிவி என்பதுதான் வித்தியாசம். ஸ்மார்ட் டிவிகள் பழைய டிவிகளுக்கு மாற்றாக வந்துவிட்டபோதும், ஒவ்வொரு வீட்டிலும் ‘ரிமோட்’டுக்கான சண்டை மட்டும் மாறியதாகத் தெரியவில்லை!

# தேர்தல் ஆணைய உத்தரவுக்கு கேரள ஐகோர்ட்டு தடை

திருசூர், நவ.23:

கேரளாவில் எந்த தேர்தலிலும் தொடர்ந்து போட்டியிடாத 4 கட்சிகளின் அங்கீகாரத்தை கேரள மாநில தேர்தல் ஆணையம் ரத்து செய்து உத்தரவிட்டது.


இந்திய தேர்தல் ஆணையத்தின் நடைமுறை சட்டப்படி, தொடர்ந்து 6 ஆண்டுகள் எந்த தேர்தலிலும் போட்டியிடாவிட்டால் சம்பந்தப்பட்ட கட்சியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்ற விதி உள்ளது.

அதன் அடிப்படையில் கடந்த 2019-ம் ஆண்டு முதல் கேரளாவில் எந்த தேர்தலிலும் தொடர்ந்து போட்டியிடாத 4 கட்சிகளின் அங்கீகாரத்தை கேரள மாநில தேர்தல் ஆணையம் ரத்து செய்து உத்தரவிட்டது. இதற்கு எதிராக ஜே.எஸ்.எஸ். கட்சி (ராஜன் பாபு பிரிவு), ஜே.எஸ்.எஸ். (பீனா குமாரி பிரிவு), கேரள காங்கிரஸ் (சகரியா தாமஸ் பிரிவு), எஸ்.ஆர்.பி. ஆகிய 4 கட்சிகள் தரப்பில் தேர்தல் ஆணையத்தின் ரத்து முடிவை தடை விதிக்க கோரி கேரள ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி அருண் தலைமையிலான அமர்வு, மேற்கண்ட 4 கட்சிகளின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்ததற்கு தடை விதித்து உத்தரவிட்டது.

# அமீபா: ஒரே மாதத்தில் 7 பேரை காவு வாங்கியது; பலி எண்ணிக்கை 40 ஆக உயர்வு

திருவனந்தபுரம், நவ.23:



கேரளாவில் கோழிக்கோடு, மலப்புரம், திருவனந்தபுரம், கொல்லம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் அமீபா மூளைக்காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. பெரும் பாலும் தேங்கிக் கிடக்கும் மற்றும் அசுத்தமான தண்ணீர் மூலம் தான் அமீபா மூக்கு, வாய் வழியாக புகுந்து மூளை காய்ச்சலை ஏற்படுத்துகிறது.

இந்த பாதிப்பால் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்தநிலையில் திருவனந்தபுரம் மாவட்டம் ஆனாடு பகுதியைச் சேர்ந்த விஷ்ணு மனைவி வினயா (வயது 26) என்பவர் நேற்றுமுன்தினம் அமீபா மூளை காய்ச்சல் பாதித்து மரணம் அடைந்தார்.


கடந்த 40 நாட்களுக்கு மேலாக அவர் நெடுமங்காடு அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலன் அளிக்காமல் உயிரிழந்தார். அந்த வகையில் பலியானவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளது.

அதிலும் இந்த மாதத்தில் 17 பேர் மூளை காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். இதில் 7 பேர் அடுத்தடுத்து பலியாகி உள்ளனர்.

இந்த சம்பவம் கேரளாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த நோயால் திருவனந்தபுரம் மாவட்டத்தில் மட்டும் 8 பேர் இறந்துள்ளதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

# புதிய தொழிலாளர் சட்டங்கள் அமலுக்கு வந்ததாக மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, நவ.23:



4 தொழிலாளர் சட்ட தொகுப்புகளை மத்திய அரசு இன்று முதல் நாடு முழுவதும் அமலுக்கு கொண்டு வந்துள்ளது.

மத்திய அரசு சார்பில் பல்வேறு துறைகளில் பணியாற்றி வரும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் புதிதாக 4 தொழிலாளர் சட்ட தொகுப்புகளை (New Labour Code) மத்திய அரசு இன்று முதல் நாடு முழுவதும் அமலுக்கு கொண்டு வந்துள்ளது. ஏற்கனவே நடைமுறையில் இருந்த பல்வேறு தொழிலாளர் சட்டங்கள், நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு அல்லது சுதந்திரம் அடைந்த பிறகு சிறிது காலத்தில் இயற்றப்பட்டவையாகும். இது தற்போதைய சூழலில் சிக்கல் நிறைந்தாகவும், தனித்தனி பிரிவாகவும் உள்ளன. இதனால் இது தற்போதைய காலத்துக்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளது.

தொழிலாளர் ஊதியச் சட்டம் 2019, தொழில்துறை தொடர்புகள் சட்டம் 2020, சமூகப் பாதுகாப்புச் சட்டம் 2020 மற்றும் தொழில்முறைப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணியிடச் சூழல் சட்டம் 2020 உள்ளிட்டவைதான் இந்த புதிய தொழிலாளர் சட்ட தொகுப்புகளாகும். இந்த சட்டங்கள் கடந்த 2020-ல் நாடாளுமன்றத்தில் நிறைவேறி இருந்தது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக, பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

”இன்று எனது உழைக்கும் சகோதர, சகோதரிகளுக்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். நமது அரசு தொழிலாளர்கள் நலனுக்காக நான்கு புதிய சட்டங்களை செயல்படுத்தியுள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு தொழிலாளர்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய சீர்திருத்தம் இது. இது நாட்டின் தொழிலாளர்களுக்கு பெரிதும் அதிகாரம் அளிக்கும். இது விதிமுறைகளுக்கு இணங்குவதை மிகவும் எளிதாக்கும். அதே வேளையில், வணிகம் செய்வதை எளிதாக்குவதையும் ஊக்குவிக்கும்.

இந்த சீர்திருத்தங்கள் எதிர்காலத்தில் நமது தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். இது புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமல்லாமல் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கும். இது வளர்ந்த இந்தியாவை நோக்கிய நமது பயணத்தை விரைவுபடுத்தும்.

இந்த விதிகள் சமூகப் பாதுகாப்பு, சரியான நேரத்தில் ஊதியம் மற்றும் நமது உழைக்கும் சகோதர சகோதரிகளுக்கு பாதுகாப்பான பணியிடத்தை உறுதி செய்யும்.

அவை சிறந்த மற்றும் அதிக லாபகரமான வாய்ப்புகளுக்கு வலுவான அடித்தளத்தை அமைக்கும். நமது தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் இளம் சக ஊழியர்கள் அவற்றால் குறிப்பாக பயனடைவார்கள்.”

இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# கோவாவில் சர்வதேச திரைப்பட விழா: மத்திய மந்திரி எல்.முருகன் தொடங்கி வைத்தார்




கோவா, நவ.23:

கோவாவில் சர்வதேச திரைப்பட விழாவை, மத்திய மந்திரி எல்.முருகன் நேற்று தொடங்கி வைத்தார். இந்த விழா 28-ந்தேதி வரை நடக்கிறது.

இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் உள்ள பன்ஜிமில் நேற்று தொடங்கியது.

விழாவை மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை மந்திரி எல். முருகன் தொடங்கி வைத்து பேசியதாவது:-

இந்தியா உலகளாவிய திரைப்பட தயாரிப்பு மையமாக உருவெடுக்க வேண்டும் என்பது பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வை. இந்த வேவ்ஸ் பிலிம் பஜார் நிகழ்வு படைப்பாளர்களுக்கும், திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் இடையிலான பாலமாக திகழ்கிறது. இளம் படைப்பாளிகளையும், புதிய கதைகளை கொண்டுள்ளவர்களையும் ஆதரிப்பதற்கான தளமாக இது செயல்படுகிறது.

இந்த ஆண்டு 124 புதிய படைப்பாளிகள் பங்கேற்று உள்ளனர். இந்திய கலாச்சாரத்தை உலகிற்கு எடுத்துச் செல்வதில் இது முக்கியப் பங்கு வகிக்கும் இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் கொரிய குடியரசின் தேசிய அவை உறுப்பினர் ஜேவோன் கிம் வந்தே மாதரம் பாடலை பாடியது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. 50 ஆண்டுகளை கடந்த தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகர் பாலகிருஷ்ணாவுக்கு நினைவுப்பரிசு அளித்து கவுரவிக்கப்பட்டது.

விழாவில் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செய லாளர் சஞ்சய் ஜாஜு, கூடுதல் செயலாளர் பிரபாத், விழா இயக்குனரும், தயாரிப்பாளரு மான சேகர் கபூர், நடிகர் அனுபம் கெர், வேவ்ஸ் பஜாரின் ஆலோசகர் ஜெரோம் பைலார்ட், ஆஸ்திரேலிய திரைப்பட இயக்குனர் கார்த் டேவிஸ், தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குனர் பிரகாஷ் மக்தூம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மிஸ் யுனிவர்ஸ்: மெக்சிகோ அழகி பாத்திமா போஷ் தேர்வு

புதுடெல்லி, நவ.23:

இந்தாண்டுக்கான ‘மிஸ் யுனிவர்ஸ்’ அழகியாக மெக்சிகோ நாட்டை சேர்ந்த பாத்திமா போஷ் தேர்வு செய்யப்பட்டார்.

‘மிஸ் யுனிவர்ஸ்’ என்பது சர்வதேச நாடுகளை சேர்ந்த அழகிகள் கலந்து கொள்ளும் வருடாந்திர போட்டியாகும். இந்தாண்டுக்கான போட்டி, தாய்லாந்தில் உள்ள இம்பாக்ட் சேலஞ்சர் ஹாலில் நடந்தது. இந்தியா சார்பில் மணிகா விஸ்வகர்மா போட்டியிட்டார். 100க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த அழகிகள் போட்டியில் கலந்து கொண்டனர்.

போட்டியின் இறுதிச் சுற்றில், மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த பாத்திமா போஷ் வெற்றி பெற்று, 2025ம் ஆண்டு மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை தட்டி சென்றார். முதல் ரன்னர் அப் ஆக தாய்லாந்து அழகியும், இரண்டாம் ரன்னர் அப் ஆக வெனிசுலா அழகியும் தேர்வு செய்யப்பட்டனர்.

வெற்றி பெற்ற பாத்திமா, நடனம் ஆடி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத் தினார். இவருக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களை யும் தெரிவித்து வருகின்றனர்.

இறுதிப்போட்டியின் நடுவர்களில் ஒருவராக பேட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவால் பணியாற்றினார். இந்தியா சார்பில் போட்டியிட்ட மணிகா விஸ்வகர்மாவால் முதல் 12 இடங்களுக்கு வரமுடியவில்லை. அவர் முன்னதாக நடந்த ‘ஸ்விம் சூட்’ போட்டியில் தோல்வியை தழுவி வெளியேறினார்.

## கற்களை வீசி சிறுத்தையை விரட்டிய 11 வயது சிறுவன் - உயிரை காப்பாற்றிய புத்தகப்பை

மும்பை, நவ.23:

சிறுத்தை தாக்கியபோது முதுகில் புத்தகப்பை இருந்ததால் சிறுத்தையின் பிடியில் இருந்து சிறுவன் தப்பியுள்ளார்.

மராட்டிய மாநிலம் பல்கார் மாவட்டத்தை சேர்ந்த 11 வயது சிறுவன் மயங்க் குவாரா. இவர் தனது வீட்டிற்கு அருகே உள்ள பள்ளியில் 5-ம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில், நேற்று மயங்க் குவாரா பள்ளி முடிந்து வழக்கம்போல் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவருடன் மற்றொரு சிறுவனும் வந்துகொண்டிருந்தார்.

அப்போது பாதையின் ஓரத்தில் இருந்த புதர்களுக்கு நடுவே பதுங்கி இருந்த சிறுத்தை ஒன்று, கண்ணிமைக்கும் நேரத்தில் சிறுவர்கள் மீது பாய்ந்தது. இதனால் நிலைகுலைந்து போன சிறுவரக்ள் இருவரும் செய்வதறியாது திகைத்தனர். இந்நிலையில் சமயோசிதமாக செயல்பட்ட சிறுவன் மயங்க், கீழே கிடந்த கற்களை எடுத்து சிறுத்தையின் மீது சரமாரியாக வீசினார்.

தொடர்ந்து 2 சிறுவர்களும் சத்தமாக கத்தி கூச்சல் போட்டுக்கொண்டே, கையில் கிடைத்த கற்களை தூக்கி சிறுத்தை மீது வீசினர். இந்த சத்தத்தைக் கேட்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்தனர். இதனால் சிறுத்தை அங்கிருந்து ஓட்டம் பிடித்து வனப்பகுதிக்குள் சென்று மறைந்தது. இந்த சம்பவத்தில் சிறுவன் மயங்க்கின் கையில் சிறுத்தையின் நகங்கள் கீறியதால் காயம் ஏற்பட்டது.

இதையடுத்து சிறுவர்கள் இருவரையும் அப்பகுதி மக்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி வழங்கப்பட்டது. இந்த சம்பவத்தில் சிறுவன் மயங்க் அணிந்திருந்த புத்தகப்பை அவரது உயிரையே காப்பாற்றியுள்ளது. பின்புறத்தில் இருந்து சிறுத்தை தாக்கியபோது முதுகில் புத்தகப்பை இருந்ததால் சிறுத்தையின் பிடியில் இருந்து சிறுவன் தப்பியுள்ளார்.

அந்த ஒரு சில வினாடி நேரத்தில்தான் 2 சிறுவர்களும் சுதாரித்துக் கொண்டு சிறுத்தையை கற்களால் அடித்து விரட்டியுள்ளனர். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த வனத்துறையினர், சிறுவர்களின் துணிச்சலான செயலுக்கு பாராட்டு தெரிவித்தனர். மேலும் சிறுத்தை நடமாட்டத்தை தீவிரமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பெங்களூரு ஏடிஎம் வாகன கொள்ளை சம்பவம்: 3 பேர் கைது - ரூ. 5.76 கோடி பறிமுதல்




பெங்களூரு, நவ.23:

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள ஜேபி நகரில் செயல்பட்டு வரும் தனியார் வங்கியின் ஏ.டி.எம். மையங்களில் பணம் நிரப்ப ரூ. 7.11 கோடி பணத்துடன் தனியார் பாதுகாப்பு நிறுவன வானத்தில் கடந்த 19ம் தேதி ஊழியர்கள் சென்றனர். அந்த வாகனத்தில் டிரைவர், துப்பாக்கியுடன் கூடிய 2 பாதுகாவலர்கள் உள்பட 4 பேர் பயணித்தனர்.

இதனிடையே, ஜெயநகர் அருகே அசோக் பில்லர் பகுதியில் சென்றபோது அந்த வாகனத்தை சொகுசு காரில் வந்த சிலர் இடைமறித்தனர். ரிசர்வ் வங்கி, மத்திய அரசு அதிகாரிகள் என கூறிக்கொண்ட அவர்கள் பணத்தை சோதனை செய்ய வேண்டும் என கூறி வாகனத்தை கடத்தி சென்றனர். பின்னர், அந்த வாகனத்தில் இருந்த ரூ. 7.11 கோடி பணத்தை துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர். பட்டப்பகலில் நடந்த இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் ஏடிஎம் வாகனத்தில் இருந்து பணத்தை கொள்ளையடித்து சென்ற கும்பலை போலீசார் தேடி வந்தனர்.

இந்நிலையில், ஏடிஎம் வாகன கொள்ளையில் ஈடுபட்ட கும்பலை சேர்ந்த 3 பேரை போலீசார் இன்று கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ரூ. 5.70 கோடி மீட்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த கொள்ளையில் ஈடுபட்டதாக போலீஸ் கான்ஸ்டபிள் அன்னப்ப நாயக், தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் சேவியர், பணத்தை எடுத்துசெல்லும் வாகனத்திற்கான பொறுப்பாளர் கோபால் பிரசாத் ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த கொள்ளை சம்பவத்தில் மேலும் சிலருக்கு தொடர்பு உள்ள நிலையில் அவர்களையும் போலீசார் தேடி வருகின்றனர். அதேவேளை, இந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக 30 பேரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

## ரயிலில் எலெக்ட்ரிக் கெட்டில் வைத்து நூடுல்ஸ் சமைத்த பெண் –ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை



புதுடெல்லி, நவ.23:

ரயில் பயணத்தின்போது எலெக்ட்ரிக் கெட்டில் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ரயிலில் டீ போடும் சாதனத்தை(எலெக்ட்ரிக்கெட்டில்) வைத்து நூடுல்ஸ் சமைத்த பெண் தொடர்பான வீடியோ காட்சி சமூக வலைதளத்தில் வைரலாக பரவியது. அந்த வீடியோவில், ரயிலில் ஏ.சி. வகுப்பு பெட்டியில் பயணம் செய்யும் நடுத்தர வயது பெண் ஒருவர், இருக்கையில் அமர்ந்தபடி செல்போன் சார்ஜிங் போட பயன்படுத்தும் பிளக் பாயிண்டில் எலெக்ட்ரிக்கெட்டில் சாதனத்தை இணைத்து சமைக்கத் தொடங்குகிறார்.

இதனை அங்கிருந்த சக பயணி ஒருவர் வீடியோ எடுத்துள்ளார். வீடியோவில் அந்த பெண் மராத்தி மொழியில்,

“இந்தசாதனத்தை பயன்படுத்தி 10 பேருக்கு டீ போட்டுக் கொடுத்திருக்கிறேன்” என்று கூறுகிறார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவிய நிலையில், பலரும் பெண் பயணியின் செயலுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், ரயில்வே நிர்வாகம் இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளது. சம்பந்தப்பட்ட வீடியோவில் இருக்கும் பெண் பயணியை கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், ரயில்வே சட்டத்தின் பிரிவு 147(1)-ன் கீழ் அந்த பெண் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மத்திய ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மத்திய ரயில்வே நிர்வாகம் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “ரயில் பயணத்தின்போது எலெக்ட்ரிக் கெட்டில் போன்ற சாதனங்களை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் தீவிபத்து உள்ளிட்ட ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பயணிகள் இது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## ஆடவர் இளையோர் உலகக்கோப்பை ஹாக்கி




மதுரை, நவ.23:

14ஆவது ஆண்கள் இளையோர் உலகக்கோப்பை ஹாக்கி போட்டிகள் வரும் நவம்பர் 28 முதல் டிசம்பர் 10 வரை தமிழகத்தின் சென்னை மற்றும் மதுரையில் நடைபெறுகின்றன.

சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தும் இப்போட்டியில், இந்த முறையே முதல் தடவையாக 24 நாடுகள் பங்கேற்கின்றன. வரலாற்று கலாச்சார மரபுகளால் பிரசித்தி பெற்ற மதுரை, இப்போது உலக விளையாட்டு மேடையிலும் தனித்த இடத்தைப் பெறும் தருணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

செயற்கை புல்வெளியுடன் உலகத் தர மைதானம் மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் சர்வதேச அளவுகோலுக்கு ஏற்ப செயற்கை புல்வெளி அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளதுடன், பார்வையாளர்களுக்கான இருக்கைகள், ஒளிஒலி வசதிகள், பாதுகாப்பு மற்றும் மருத்துவ ஏற்பாடுகள், வீரர்கள் மற்றும் நடுவர்களுக்கான தங்கும் இடங்கள், எல்லாம் இறுதிக்கட்டத்தை நோக்கி வேகமாக முன்னேறி வருகின்றன. முக்கிய பிரமுகர்களுக்கான தனிப்பிரிவு, வீரர்கள் பயிற்சிக்கான அலாதியான தளம் உள்ளிட்ட வசதிகளும் தயார் நிலையில் உள்ளன.

இதுதொடர்பாக விளையாட்டு துறை அதிகாரிகள் கூறுகையில்,“வீரர்கள் போட்டிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே மதுரைக்கு வருவார்கள். அதற்குள் அனைத்து ஏற்பாடுகளும் முடித்து வைக்கப்படும்” என தெரிவித்தனர். நுழைவு ஏற்பாடுகள் தினசரி போட்டியை காண மதுரை மக்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பு என்றாலும், பாதுகாப்பு மற்றும் வசதிகளை கருத்தில் கொண்டு தினசரி 1,500 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட உள்ளது. அதற்காக ஆன்லைன் முன்பதிவு கட்டாயம். ஆதார் அட்டை விவரங்கள் அவசியம்.

இன்று வரை, பல பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் தேசிய, மாநில அளவிலான தடகள வீரர்களை உருவாக்கி வருகின்றன. இத்தகைய விளையாட்டு மரபில், உலக இளையோர் ஹாக்கி போட்டி நடைபெறுவது மதுரையின் விளையாட்டு வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதுகிறது. மதுரைக்கு சர்வதேச உயர்வு இப்போட்டி மதுரையின் உலகளாவிய அடையாளத்தை மேலும் உயர்த்தும் வாய்ப்பாகக் கருதப்படுகிறது. நவம்பர் 28 முதல் உலக ஜூனியர் ஹாக்கி போட்டியை நடத்தப் போகும் மதுரை, இனி கலாச்சார தலைநகரம் மட்டுமல்ல; உலக விளையாட்டு மேடையில் புதிய அடையாளம் பெற்ற நகரமாகவும் உருவாக உள்ளது.

## கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி



ஈரோடு, நவ. 23:

பெருந்துறை கொங்கு பாலிடெக்னிக் கல்லூரியில் மாநில அளவிலான பள்ளி மாணவர்களுக்கு இடையேயான “கொங்கு பாலிடெக்னிக் டிராபிக்” விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளை கொங்கு பொறியியல் கல்லூரி தாளாளர் இ.ஆர்.கே.கிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

மாணவரிடையே அவர் உரையாற்றும் பொழுது, விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாணவர்கள் நம் தேசத்திற்கு பெருமை தேடித் தரும் வகையில் விளையாட வேண்டும் என அறிவுரை கூறினார். முன்னதாக கொங்கு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் மேஜர் பி.எஸ். ராகவேந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவில் மாநில அளவில் இருந்து 80 அணிகள் தலைமையின் கீழ் 1100 மாணவர்கள் கலந்து கொண்டனர். இரு நாட்கள் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பூப்பந்து விளையாட்டில் பெருந்துறை காருண்யா பள்ளி மாணவி எஸ்.மோனிஷா, கபடி போட்டியில் கன்னியாகுமரி கல்லாகுளம் பள்ளி மாணவர் டிண்டோ குட்டி லீலா ராம், கைப்பந்து போட்டியில் விருதுநகர் ஜி.எஸ்.ஹிந்து, பள்ளி மாணவர் எஸ்.செல்லப்பாண்டி, வாலிபால் ஆண்கள் பிரிவு போட்டியில் கோவை சபர்பன் பள்ளி மாணவர் டி.மகரந்தன் மற்றும் வாலிபால் பெண்கள் பிரிவு போட்டியில் ஆத்தூர் பாரதி பள்ளி மாணவி ஏ.ரோசினி ஆகியோர் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளாக தேர்வு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அனைத்து போட்டிகளிலும் முதல் நான்கு இடங்களை பிடித்த அணிகளுக்கு சுழற் கேடயமும், ரொக்க பணமும் வழங்கப்பட்டது.

பரிசளிப்பு விழாவில் கொங்கு பொறியியல் கல்லூரி பேராசிரியர் கண்ணன், கொங்கு இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் ராஜமாணிக்கம், கொங்கு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் தினேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காசாவில் 25 மீ. ஆழத்தில் 7 கி.மீ. நீள சுரங்கம்: இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்ட வீடியோ வைரல்

காசா, நவ.23:

கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதியில் இருந்து ஹமாஸ் - இஸ்ரேல் இடையே தாக்குதல் நடைபெற்று வருகிறது. காசாவில் இருந்து தாக்குதல் நடத்தும் ஹமாஸ் அமைப்பினர், சுரங்கங்களில் பதுங்கி கொள்கின்றனர்.

காசாவின் பெரும்பாலான வீடுகளின் நிலத்தடியில் சுரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் கண்டுபிடித்து இஸ்ரேல் படையினர் அழித்து வருகின்றனர்.

இந்நிலையில், தெற்கு காசா முனையில் இதுவரை இல்லாத அளவில் மிகப் பெரிய சுரங்கத்தை இஸ்ரேல் படையினர் நேற்றுமுன்தினம் கண்டுபிடித்துள்ளனர். நிலத்தில் 25 மீட்டர் ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சுரங்கம் 7 கி.மீ. தூரத்துக்கு அமைந்துள்ளது. இந்த சுரங்கத்துக்குள் சுமார் 80 அறைகளும் உள்ளன. இந்த சுரங்கம் தொடர்பான வீடியோவை இஸ்ரேல் படையினர் வெளியிட்டுள்ளனர்.





தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது. ஹமாஸ் அமைப்பினர் பிடித்து சென்ற பிணைக் கைதிகளில் இஸ்ரேல் வீரர் ஹதர் கோல்டின் என்பவரும் ஒருவர்.

அவரை கொலை செய்து இந்த சுரங்கத்துக்குள்தான் வைத்திருந்ததாக கூறப்படுகிறது. கடந்த வாரம் கோல்டின் உடலை இஸ்ரேலிடம் ஹமாஸ் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது.

## சுகோய் விமான தொழில்நுட்பம் : இந்தியாவிற்கு கொடுக்கும் ரஷ்யா

மாஸ்கோ, நவ.23:

5 ஆம் தலைமுறை போர்விமானமாக உள்ள சுகோய்-57 ரக விமானத்தை இந்தியாவிலேயே தயாரிக்க தேவையான அனைத்து தொ ழில்நுட்பங்களையும் வழங்க தயாராக இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்தியா, ரஷ்யா இடையிலான வரு டாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்ப தற்காக ரஷ்ய ஜனாதிபதி புடின் அடுத்த மாதம் இந்தியா வருகை தர உள்ளார். இந்நிலையில் சுகோய்-57 ரக போர் விமானங்களை வழங்கவும் படிப்படியாக போர் விமானத்தை இந்தியா விலேயே தயாரிக்கத் தேவையான தொழில்நுட்பங்களை வழங்கவும் தயாராக இருப்பதாக ரஷ்யத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. துபாய் விமான கண்காட்சியில் பேசிய ரஷ்ய ஆயுத ஏற்றுமதி நிறுவன தலைமை அதிகாரி அனைத்து உதிரி பாகங்களையும் இந்தியாவிலேயே தயாரிக்கும் வகையில் 100 சதவீதம் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்யவும் இந்தியாவுக்கு தேவையான அனைத்து உதவிகளைச் செய்யவும் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

## பிரேசிலில் மத்திய அமைச்சர் கலந்துகொண்ட காலநிலை மாற்ற மாநாட்டு அரங்கில் தீ விபத்து



பெலேம், நவ. 23:

பிரேசிலில் உள்ள பெலேம் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அவையின் காலநிலை உச்சி மாநாட்டில் மத்திய அமைச்சர் கலந்து கொண்ட நிலையில், மாநாட்டு அரங்கில் நேரிட்ட தீ விபத்தில் 21 பேர் காயமடைந்தனர்.

ஐக்கிய நாடுகள் அவையின் காலநிலை மாற்ற உச்சி மாநாடு பிரேசிலின் பெலேம் நகரில் கடந்த 2 வாரங்களாக நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் கிட்டத்தட்ட 200 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர். இவர்கள் நேற்று எரிபொருள்கள், காலநிலைக்கான நிதி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். மாநாடு நிறைவடைய ஒரு நாள் மட்டும் இருந்த நிலையில், மாநாட்டு அரங்கில் நேற்றிரவு திடீரென தீப்பிடித்தது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த பிரதிநிதிகள் உள்பட 50,000 க்கும் மேற்பட்டோர் இதனைக்கண்டு அதிர்ச்சியடைந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மூச்சுத் திணறலால் அவதியடைந்த நிலையில், அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றும் பணியில் மீட்புபடையினர் தீவிரமாக செயல்பட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் உருவானது. இதில் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் உள்பட இந்திய குழுவில் சுமார் 20 பேர் பங்கேற்ற நிலையில் அவர்கள் பத்திரமாக உள்ளனர். அரங்கின் நுழைவுவாயிலுக்கு அருகில் உள்ள ப்ளூஸோன் என்றழைக்கப்படும் இடத்தில் இருந்து தீப்பற்றியதாக முதல்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. தீ விபத்துக்கு மின்கசிவுகூட காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. 21 பேர் காயமடைந்து சிகிச்சைப் பெற்று வருகின்றார்கள் என பிரேசிலின் சுற்றுலா அமைச்சர் செல்சோ சபினோ தெரிவித்தார்.

## காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை வேண்டும் புதைபடிவ எரிபொருட்களுக்கு இறுதி ஊர்வலம் நடத்தி மக்கள் மாபெரும் போராட்டம்

பெலம், நவ.23:

பிரேசிலில் காப்-30 காலநிலை மாநாடு நடந்து வரும் நிலையில் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த உலக நாடுகள் ஆக்கப்பூர்வ மான நடவடிக்கையை விரை ந்து முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தி மாபெரும் மக்கள் பேரணி நடந்தது. அதிகளவிலான புதை படிவ எரிபொருட்கள் பயன்பா ட்டுக்கு எதிராக ஆயிரக்க ணக்கான ஆதிவாசி மக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பொதுமக்கள், பறவைகளின் இறகுகளை தலையில் வைத்துக்கொண்டு பாரம் பரிய பழங்குடியினர் உடைக ளுடன் பேரணியில் கலந்து கொண்டனர்.

எங்கள் வாழ்வாதாரத்தி ற்காக நாங்கள் போராடு வோம் என்ற மக்களின் முழக் கங்கள், பிரேசிலின் நாட்டுப் புறப் பாடல்கள், போராட்ட கோ சங்கள் நகரம் எங்கும் எதிரொலித்தன.

காலநிலை மாற்றத்தை விரைவாக கட்டுப்படுத்த வலியுறுத்தி நான்காண்டுக ளுக்கு முன்பு க்ளாஸ்கோ நகரில் பெரும் போராட்டம் நடைபெற்றது. அதன் பிறகு இதுவே மிகப்பெரிய மக்கள் போராட்டமாக உள்ளது. இப் பேரணியின்போது இத்தாலி யின் பெல்லா சியாவோ (BELLA CIAO) என்ற புகழ்பெற்ற பாடல் இசைக்கப்பட்டது.

சவப் பெட்டிகள், பாம்பு சிற்பம்... உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்புடன் நடை பெற்று வருகின்ற மாநாட்டுக் கூடத்திற்கு வெளியில் மக்கள் ஒன்றுகூடி பேரணியாகச் சென்றனர். கறுப்பு நிற ஆடை அணிந்த நூற்றுக்கணக் கான பெண்கள், ஆண்கள் இரண்டு பெரிய பொம்மைக ளுடன் புதைபடிவ எரிபொ ருட்களுக்கு இறுதி ஊர்வலம் நடத்தினர். அதில் நிலக்கரி, எண்ணெய், எரிவாயு என்று எழுதப்பட்ட மூன்று சவப்பெட்டி களை சுமந்து சென்றனர்.

அமேசான் காடுகளில் வாழும் மக்களின் புனிதச் சின்னமாகவும் உயிர் பன்ம யத் தன்மையின் அடையாள மாகவும் கருதப்படும் பாம்பு கள் உள்ளிட்ட விலங்குகளை காக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் முப்பது மீட்டர் நீளமுள்ள கோப்ரா என்று பெயரிடப் பட்ட ஒரு பாம்பு சிற்பம் ஊர்வ லத்தில் எடுத்துவரப்பட்டது. அமேசான் காடுகளில் வாழும் விலங்குகளின் உருவங்க ளை முகத்தில் வரைந்து காடு களையும் விலங்குகளையும் பாதுகாக்க வலியுறுத்தினர்.

## ஈரானிடம் எண்ணெய் கொள்முதல்; இந்திய நிறுவனம் உள்பட 17 நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை

வாஷிங்டன், நவ.23:

மேற்கு ஆசிய நாடான ஈரான் 2015ல் அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகளுடன் ஒரு அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 2018ல் அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்ற பிறகு, அந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகினார். அதன்பிறகு ஒப்பந்தத்தை மீறும் வகையில் ஈரான் யுரேனியம் செறிவூட்டலை அதிகரித்தது. எனவே ஈரான் மீண்டும் ஒப்பந்தத்தைமேற்கொள்ளுமாறு அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறார். இந்த நிலையில் ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்ய இந்திய நிறுவனம் உள்பட 17 நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க அரசு நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; ஈரானுடன் சட்டவிரோத பெட்ரோலிய கொள்முதலில் ஈடுபட்டு வந்த இந்திய நிறுவனம் உள்பட 17 நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் கொள்முதல் மூலம், ஈரானின் அணுசக்தி திட்டங்களுக்கு மறைமுக நிதியுதவி வழங்கப்படுகிறது. எனவே, அதனை தடுக்கும் விதமாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈரானிடம் எண்ணெய் கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த டிஆர்6 பெட்ரோ இந்தியா எல்எல்பி என்றபெட்ரோலியப்பொருட்கள் வர்த்தக நிறுவனம் அமெரிக்க தடைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

அக்டோபர் 2024 முதல் ஜூன் 2025 வரை ஈரானில் இருந்து சுமார் ரூ.80 கோடி அளவிலான தாரை இந்நிறுவனம் இறக்குமதி செய்துள்ளது.

## 21 ஆம் நூற்றாண்டில் முதல் முறையாக ஒரே நேரத்தில் இரு நாடுகளில் மோசமான பட்டினி மேலும் 16 நாடுகள் பாதிக்கப்படும் : உலக உணவுத்திட்டம் எச்சரிக்கை



நியூயார்க், நவ.23:

21 ஆம் நூற்றாண்டில் முதல் முறை யாக ஒரே நேரத்தில் இரு நாடுகளில் மோசமான பட்டி னி நிலவுகிறது. மேலும் 16 நாடுகள் பட்டினியால் பாதிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது என உலக உண வுத்திட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக நாடுகள் ராணுவத்திற்குச் செலவிடும் தொகையில் ஒரு சதவிகி தத்துக்கும் குறைவாகச் செலவு செய்தால் உலகம் முழுவதும் பட்டினியை முடி வுக்குக் கொண்டு வந்து விடலாம் எனவும் தனது அறிக்கையில் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது. உலக உணவுத் திட்டத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பார்வை என்ற அறிக்கையில் இது தெரிய வந்துள்ளது. அதில் 2026 ஆம் ஆண்டு சுமார் 31.8 கோடி மக்கள் மிக கடு மையான வறுமையில் தள்ளப்படு வார்கள். அதில் இவர்களில் 4.1 கோடி மக்கள் அவசர நிலை அல்லது அதனை விடத் தீவிரமான நிலைக்கு தள்ளப்படு வார்கள் என எச்சரித்துள்ளது. இந்த சூழலில் 2030 ஆம் ஆண்டுக் குள் உலகம் முழுவதும் இந்த பட்டினி யை முடிவுக்குக் கொண்டு வரலாம். அதற்கு ஒரு வருடத்திற்கு 7 லட்சத்து 72 ஆயிரம் கோடி ரூபாய் (93 பில்லியன் டாலர்கள்) மட்டுமே செலவிட்டால் போது மானது. இது ஒன்றும் மிகப்பெரிய தொகை அல்ல. கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, ஐரோப்பியா என உலக நாடுகள் தங்களின் ராணு வத்துக்காகவும் போருக்காகவும் செலவு செய்த தொகையுடன் ஒப்பிடும் போது ஒரு சதவிகிதத்துக்கும் குறைவான பணம் தான். கடந்த 10 ஆண்டுகளில் உலக நாடு கள் ராணுவத்துக்காக சுமார் 18 கோடியே 19 லட்சத்து 23 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவு செய்துள்ளன. இத னுடன் ஒப்பிட்டால் உலகம் முழுவதும் பட்டி னியை முடிவுக்கு கொண்டு வர ஆகும் அளவு வெறும் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகும்.

மனிதகுலத்தின் அவமானம்

இந்த அறிக்கையின் மூலமாக காசா மற்றும் சூடானின் சில பகுதிகளில் தீவிரமான பஞ்சம் நிலவுவது மீண்டும் உறுதியாகியுள்ளது. இந்த 21 ஆம் நூற்றாண்டில் இரண்டு நாடுகளில் ஒரே நேரத்தில் தீவிரமான பஞ்சம் ஏற்படு வது இதுவே முதல் முறையாகும். இது மனித குலத்தின் அவமானமாகப் பார்க் கப்படுகிறது. பசியால் வாடும் மக்களுக்கான சர்வதேச ஆதரவு மெதுவாகவும், அங்கும் இங்குமாக துண்டு துண்டாகவும் மற்றும் போதிய நிதி இல்லாததால் விரை வாகச் செயல்பட முடியாமலும் உள்ளது என்று உலக உணவுத் திட்டம் கவலையை வெளிப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக, உலகெங்கிலும் போர்களாலும் வறுமையாலும் துன்பத்தில் தள்ளப் பட்டுள்ள மக்கள் அடுத்த ஆண்டு போது மான உதவியைப் பெற முடியாமல் போக வாய்ப்புள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல ஹைட்டி மற்றும் மாலியில் இருந்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஏமன் வரை சுமார் பதினாறு நாடுகளில் மிகக்கடுமையான பஞ்சம் உருவாகும் அபாயம் தற்போது உருவாகி யுள்ளது. ஏழைகளே அதிகபட்ச விலையைக் கொடுக்கிறார்கள் போர்களே சுமார் 69 சதவிகிதப் பட்டி னிக்கு முக்கியக் காரணமாக உள்ளது. வறட்சி, வெள்ளம் மற்றும் புயல்கள் இந்த நெருக்கடியை மேலும் மோசமாக்கு கின்றன. ஐ.நா. துணைப் பொதுச்செய லாளர் அமினா முகமது, யானைகள் சண் டையிடும்போது, புல் தான் பாதிக்கப் படும் என ஆப்பிரிக்கப் பழமொழியைக் கூறி போர்களிலும், இயற்கைப்பேரிடர்க ளிலும் “ஏழைகளே அதிகபட்ச விலை யைக் கொடுக்கிறார்கள்,” என்று குறிப் பிட்டார்.

## ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்த திட்டம்

மாஸ்கோ, நவ.23:

ரஷ்யா-உக்ரைன் போர் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் 28 முன் மொழிவுகளைக் கொண்ட வரைவுத் திட்டத்தை அமெரிக்காவும் ரஷ்யாவும் வடிவமைத்து வருகின்றன. இதில் ராணுவத்தின் அளவை உக்ரைன் பெருமளவு குறைக்க வேண்டும். போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகு, ஐரோப்பிய அமைதிப் படைகள் உக்ரைனுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையிலும் குறிப்பாக தனது நிலப்பகுதிகளை ரஷ்யாவிற்கு உக்ரைன் விட்டுக்கொடுக்க வேண்டும் என கூறப்படலாம் என தெரிகிறது.

## ஜெர்மன் கார் உற்பத்தித் துறை வேலைவாய்ப்பு கடும் சரிவு

கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஜெர்மனி வாகன உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பு கடுமையாகச் சரிந்துள்ளது. பொருளாதார மந்தநிலையே இதற்குக் காரணம். கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மட்டும் 48,700 வேலைகள் குறைந்துள்ளன. இது சுமார் 6.3 சதவிகித சரிவாகும். கார் தயாரிக்கும் நிறுவனங்களை விட, கார்களுக்குத் தேவையான உதிரிபாகங்களை வழங்கும் நிறுவனங்களே அதிக பாதிப்பைச் சந்தித்துள்ளன.

## நியாயமான ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும்: குட்டரெஸ்

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்க்க உலக நாடுகள் உடனடியாக ஒரு நியாயமான ஒப்பந்தத்தை உருவாக்க முன் வர வேண்டும் என்று ஐ.நா பொதுச் செயலாளர் அந்தோணியோ குட்டரெஸ் வலியுறுத்தியுள்ளார். 2015 ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தத்திற்குப்பிறகு நாம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் போதுமானதாக இல்லை. நாம் இன்னும் மிக வேகமாகச் செயல்பட வேண்டும். கார்பன் வெளியேற்ற அளவை வெகுவாகக் குறைக்க வேண்டும். 2050 க்குள் நெட்-ஜீரோ என்ற சமநிலையை அடைய வேண்டும் என கூறியுள்ளார்.

## காங்கோவில் அதிகரிக்கும் வன்முறை : ஐ.நா கவலை

ஆப்பிரிக்க நாடான காங்கோ குடியரசில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து ஐ.நா அவை கவலை தெரிவித்துள்ளது. ஐ.நா மனிதாபிமான அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடந்த தாக்குதல்களில் 45-க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தி நோயாளிகள் உட்பட 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மருத்துவப் பணியாளர்கள் கடத்தப்பட்டு, மருந்துகள் கொள்ளையடிக்கப்பட்டு, மருத்துவமனைக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

## போர் நிறுத்தம் மீறி தாக்குதல் : காசாவில் 33 பேர் படுகொலை



இஸ்ரேல் ராணுவம் போர் நிறுத்தத்தை மீறி வியாழக்கிழமை அதிகாலை காசாவில் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலால் 33 பாலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலோர் குழந்தைகளாவர். பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த அக்டோபர் 10 ஆம் தேதி போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. அதற்குப் பிறகு ஒப்பந்தத்தை மீறி இஸ்ரேல் பல முறை தாக்குதல் நடத்தியுள்ளது. சுமார் 400 முறை போர் நிறுத்த விதியை இஸ்ரேல் மீறியுள்ளதாக அல் ஜசீரா ஊடகம் தெரிவித்துள்ளது.